

உங்கட வீணாப் போன தடை தான் பல்லாயிரம் பேரைக் காவு கொண்டது...


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 302 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 07, வெள்ளிக்கிழமை 23.09.2016


# புலிகள் மீதான தடையை நீக்க ஐரோப்பிய ஒன்றியம் பரிந்துரை

கொழும்பு, செப்ரெம்பர் 23

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பயங்கரவாதத் தாக்குதல்களில் ஈடுபட்டது என்பதற்கான தெளிவான ஆதாரங்களை ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம்வகிக்கும் நாடுகள் முன்வைக்காததால், அந்த அமைப்பைப் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து நீக்கவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் உச்ச நீதிமன்றத்துக்குப் பரிந்துரை வழங்கப்பட்டது.

நீதிக்கான ஐரோப்பிய நீதிமன்றத்தின் சட்டமா அதிபர் எலியனர் சேர்ப்ஸ்டனே இந்தப் பரிந்துரையை வழங்கினார். பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகள், செய்திகள், இணையச் செய்திகளை அடிப்படையாக வைத்து நீதிமன்றம் இந்த விடயத்தில் முடிவெடுக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் அமெரிக்கா போன்ற நாடுகளின் பயங்கரவாதத் தடைப்பட்டியல்களை அடிப்படையாக வைத்து முடிவுகளை எடுக்க முடியாது >> 23ஆம் பக்கம்



## மைத்திரிக்கு பான் கீ - மூன் பாராட்டு

நியூயோர்க், செப். 23

இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக, ஐ.நா.பொதுச் செயலர் பான் கீ - மூன் பாராட்டுத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ - >> 25ஆம் பக்கம்

## மழையை எதிர்கொள்ள இறுக்கமான நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 23

பருவகால மழை ஆரம்பிக்கவுள்ள நிலையில், அதனால் எந்த வகையான இடர்கள் ஏற்படவுள்ளன என்று நேற்றுக் கூறப்பட்டதோடு, அதற்கான தீர்வாக சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ள வேண்டிய முன் நடவடிக்கைகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டது. அவற்றைச் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் பருவகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னரே செய்து முடித்துவிட வேண்டும். முடியாவிட்டால் மாவட்டச் செயலருக்கு அறிவித்துவிட வேண்டும். காலம் தாழ்த்திய பின்னர் முடியாது என்று சாட்டுக் கூற முடியாது என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

பருவகால இடர்கள் தொடர்பில் முன்னாயத்த திட்டமிடல் மற்றும் >> 25ஆம் பக்கம்

## அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும்

### 22 மாணவர் படுகொலை நிகழ்வில் மாவை. எம்.பி. வலியுறுத்தல்



யாழ்ப்பாணம், செப். 23

அரசுடன் பேசித் தீர்வு காணுங்கள், அதற்கு ஆதரவாக நாங்கள் எப்பொழுதும் உங்களுடன் இருப்போம் என்று பன்னாட்டுச் சமூகங்கள் கூறியுள்ளன. இந்தச் சூழலில் எமது மக்கள் எம்மீது நம்பிக்கை கொண்டிருக்கவேண்டும். அந்த நம்பிக்கையை ஒரு போதும் இழக்கக்கூடாது. அனைவரும் ஒற்றிணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா.

நாகர்கோவில் மகா வித்தியாலயம் மீது இலங்கை விமானப் படையினர் நடத்திய புக்காரா குண்டு வீச்சில் அநியாயமாகக் கொல்லப்பட்ட பாடசாலை மாணவர்கள் 22 பேரின் நினைவு நாள் நிகழ்வு நேற்று பிற்பகல் பெற்றோர்களின் கண்ணீர் கதறல்களுக்கு மத்தியில் பெரும் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் இ. சிவசங்கர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராஜா மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உட்பட மாகாண சபை >> 23ஆம் பக்கம்

### தடுப்புக் காவலில் சித்திரவதை;

## ஓ.ஐ.சீ. உட்பட 8 பொலிஸாருக்கு சீ.ஐ.டி. ஊடாக அழைப்பாணை

யாழ்ப்பாணம், செப். 23

சுன்னாகம் பொலிஸ் நிலையத் தடுப்புக்காவல் கொலைக்கு முன்னரான சித்திரவதை புரிந்த குற்றச்சாட்டு வழக்கில், சிந்திக்க பண்டார உள்ளிட்ட 8 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் குற்றப்புலனாய்வுப் பிரிவின் ஊடாக அழைப்பாணை அனுப்ப யாழ். மேல்நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

சந்தேக நபர்கள் 8 பேரும் நேற்று மன்றில் முற்பட வேண்டும் என்று கடந்த தவணை உத்தரவிட்டும், அவர்கள் நேற்று முன்னிலையாகவில்லை.

இந்த நிலையில் சட்ட மா அதிபர் திணைக்களத்திலிருந்து மன்றில் முன்னிலையான பிரதி மன்றாடியார் அதிபதி குமார் ரட்ணம் மன்றில் சமர்ப்பணம் செய்திருந்தார். அதில், >> 23ஆம் பக்கம்

## பல்கலையாக மாறும் வவுனியா வளாகம்

### சபையில் அறிவித்தார் உயர் கல்வி அமைச்சர்

கொழும்பு, செப். 23

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்படும் என்று உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றில் நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பல்கலைக் கழகங்கள் (திருத்தச) சட்டவரைவின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக்க கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற >> 23ஆம் பக்கம்

## தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் தொடர்கிறது

யாழ்ப்பாணம், செப். 23

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது உணவு ஒறுப்புப் போராட்டத்தை நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தனர்.

அநுராதபுரம் சிறப்பு நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை வவுனியா நீதிமன்றுக்கு மாற்றுமாறும், தம்மை விடுதலை செய்யுமாறும் கோரி 21 தமிழ் அரசியல் கைதிகள் நேற்று முன்தினம் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோருக்கான கோரிக்கைக் கடிதத்தை தமிழ் அரசியல் கைதி >> 25ஆம் பக்கம்

## அமெரிக்காவிடம் ஜனாதிபதி சொன்னது உண்மையா?

யாழ்ப்பாணம், செப். 23

வடக்கில், சிறியளவிலான மக்கள் குழுவினர் சில தீவிரவாதக் குழுக்களின் அழுத்தங்கள் காரணமாக அவர்களுடைய சொந்த இடங்களுக்கு மீண்டும் திரும்பிச் செல்வதற்கு மறுத்து வருகின்றனர்.

இவ்வாறு அமெரிக்காவின் இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியிடம் தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அவ்வாறு எந்தவொரு மக்கள் குழுவினரும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல மறுக்கவில்லை என்று மீள்குடியேற்றச் சங்கங்களும், அரச அதிகாரிகளும் தெரிவித்தனர். இராணுவத்தினரும் பொலிஸாருமே மக்களின் >> 25ஆம் பக்கம்


இலங்கையின் வங்கி வரலாற்றில் DFCC வங்கி முதன்முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது.

Vardhana Virtual Wallet

• பொருட்கள் கொள்வனவுக்கு • பில்லுக்கு பணம் செலுத்த • வர்த்தன வொலற்களுக்கிடையில் பணப் பரிமாற்றம் செய்வதற்கு

SYNAPSYS

இவையெல்லாவற்றையும் அனுபவிக்க DFCC வங்கியில் கணக்கொன்றை ஆரம்பியுங்கள். இலிருந்து இன்றே உங்கள் கையடக்கத் தொலைபேசிக்கு APP ஒன்றை download செய்யுங்கள்.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000

www.dfcc.lk

நிபந்தனைகள் உண்டு.

DFCC வங்கி ஃபிச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட்டின் AA- (lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.

DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி

உங்கள் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம் குடும்பத்தலைவர் கொலை; அடுத்த மாதம் தொடர் விசாரணை

யாழ்ப்பாணம், செப். 23
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இளம் குடும்பத்தலைவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் தொடர்ச்சியாக 3 நாள்களுக்கு இடம்பெறும் என யாழ்.மேல் நீதிமன்றம் அறிவித்தது.

குற்றம் சாட்டப்பட்டுள்ள 6 எதிரிகளையும்பிணையில்செல்ல அனுமதித்த நீதிபதி மா.இளஞ்செழியன், இந்த வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 26, 27, 28 ஆம் திகதிகளில் தொடர் விசாரணைக்கு உத்தரவிட்டார்.

2014ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையேயான வருடாந்த கிரிக்கட் போட்டியின் போது மைதானத்தில் வைத்து ஜயரட்னம் தனுன் அமலன் என்றஇளம்குடும்பத்தலைவர் கொல்லப்பட்டார்.

இந்தக்கொலைச்சம்பவத்தில் சிவசண்முகநாதன் மதுன், இந்திரசீலன் பிருந்தாபன், ரமேஷ் வெண்டில்கரன், நேசரட்னம் கஜேந்திரன், நாகராஜா காந்தரூபன், சுந்தரலிங்கம் பிரகாஷ் ஆகிய 6 பேருக்கு எதிராக சட்டமா அதிபரினால் கொலைக் குற்றம் சுமத்தி, யாழ் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு முதற் தடவையாக கடந்த 6 ஆம் திகதி நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அரச தரப்புச் சட்டத்தரணி நாகரட்னம் நிசாந்தனின் கோரிக்கைக்கு அமைவாக, எதிரிகளுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது, எதிரிகள் 6 பேருக்கும் குற்றப்பத்திரம் வாசித்துக் காட்டப்பட்டது. அதற்குத் தாங்கள் நிராதிபதிகள் என எதிரிகள் தெரிவித்தனர். அதனையடுத்து தொடர்ந்து மூன்று தினங்கள் தொடர் விசாரணைக்கு திகதி குறித்ததுடன், எதிரிகள் 6 பேரையும் தலா 50 ஆயிரம் ரூபாஆள்பிணையில்செல்ல அனுமதித்தார்.

எதிரிகள் சாட்சிகளுடன் எது விதமான தலையீடுகளிலும் ஈடுபடக்கூடாது. ஒழுங்காக நீதிமன்ற விசாரணைகளுக்குச் சமூகமளிக்க வேண்டும். நிபந்தனைகளை மீறினால், பிணை அனுமதி நீக்கப்பட்டு, அனைவரும் விளக்கமறியலில் வைத்து, வழக்கு விசாரணை நடத்தப்படும் என நீதிபதி இளஞ்செழியன் அறிவுறுத்தினார்.
(வ-4)

## இரணைதீவில் தங்கி நின்று மீன்பிடிப்பதற்கு சென்றோரை திருப்பி அனுப்பியது கடற்படை

கிளிநொச்சி, செப்.23
இரணைதீவில் தங்கி நின்று மீன்பிடிக்கச் சென்றவர்களை கடற்படையினர் திருப்பி அனுப்பியுள்ளனர். அந்தப் பிரதேசத்தில் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு விடுவித்த அனுமதி எதுவும் தமக்கு கிடைக்கவில்லை என்று தெரிவித்தே கடற்படையினர்திருப்பி அனுப்பியுள்ளனர்.

கிளிநொச்சி, பூநகரி பிரிதேச செயலர் பிரிவில், இரணைதீவு 13 கடல்மைல் தொலைவில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தை விட்டு 1992 ஆம் ஆண்டு மக்கள் வெளியேறி இரணை மாதா நகர்ப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். கடற்றொழிலை பிரதானமாக கொண்ட மக்கள் போர் காரணமாகத் தற்காலிகமாகக் குடியேறிய பகுதியில் நிரந்தரமாகக் குடியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. போர்க்காலத்தில் இரணைதீவுக்குச் சென்று மீன்பிடி செய்ய கூடிய நிலை காணப்பட்ட போதிலும், போர் நிறைவுற்றதன் பின்னர் குறித்த பகுதியில் மீன் பிடிப்பதற்கு கூட கடற்படையினரால் அனுமதி மறுக்கப்பட்டு வந்தது.

அண்மையில் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், இரணைதீவுக்கு ஒரு தொகுதி மக்களை கடற்படையினரின் அனுமதியுடன் அழைத்துச் சென்றிருந்தார். குறித்த பகுதியில் தங்கி நின்று தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு கடற்படையினர் அனுமதி பெற்றுத் தரப்படும் என்று தெரிவித்திருந்தார்.

தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது என்று ஒரு சில ஊடகங்களில் வெளியான தகவலையடுத்து மக்கள் தங்கி நின்று தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அங்கு சென்றுள்ளனர். அப்போது கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளனர். தங்கிநின்று தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான உத்தரவு எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

கடற்படையினருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படும். 25 வருடங்களாகத் தொழில் முன்னெடுக்கப்படாத இடத்தில் மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திய பின்னர், மேற்படி பிரதேசம், பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்பட்டு தொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.
(ற-5,ரி3,34)

## பரிசில் நாள் நிகழ்வு

மிருசுவில் அ.த.க.பாடசாலை வளாகத்தில் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்பு விழாவும் பாடசாலை பரிசில் நாள் நிகழ்வும் நாளை சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்என்றுஅறிவிக்கப்பட்டது.
(வ- 9)

## பளை விபத்தில் படுகாயமடைந்த குடும்பப்பெண் நேற்று உயிரிழப்பு

பளை, செப்.23
பளை தர்மக்கேணியில் இடம் பெற்ற வாகன விபத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த குடும்பப்பெண் சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை 8.50 மணியளவில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அதனால் இந்த விபத்தில்உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்தது.

கடந்த வாரம் அதிகாலை பளை தர்மக்கேணியில் இடம்பெற்ற வான் – தனியார் பேருந்து விபத்தில் காயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று ஒரு வாரத்தின் பின்னர் சிகிச்சை பயனின்றிச் சாவடைந்தார்.

பருத்தித்துறை புலோலி வடமேற்கு மாயக்கையைச் சேர்ந்த நந்தமூர்த்தி சுதாஜினி (வயது - 41) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்

இந்த விபத்தில் இவரது கணவர் பசுபதி நந்தமூர்த்தி (வயது- 46) மாமன் வேலுப்பிள்ளை பசுபதி (வயது - 89) மாமி பசுபதி வள்ளிப்பிள்ளை (வயது 65) தாயாரான தர்மலிங்கம் சாந்தாதேவி ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். கொழும்பில் உறவினரின் சாவு வீட்டுக்குச் சென்று விட்டுத் திரும்புகையில் பளையில்விபத்து இடம்பெற்று 5 பேர் உயிரிழந்தனர்.
(வ- 9)

## தென்மராட்சியில் அடுத்த வாரம் முதல் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

தென்மராட்சி, செப். 23
தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகள் எதிர்வரும் 27ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் மூன்றாம் திகதி வரை நாடு முழுவதும் நடாத்தப்படவுள்ளன.

இதனையொட்டி சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில்உள்ளஏழுபொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் டெங்கு கட்டுப்பாட்டுச்செயற்பாடுகள் இடம் பெறுமென அறிவிக்கப்பட்டது.

டெங்குக் கட்டுப்பாட்டு பரிசோதனைகள் தென்மராட்சி பிரதேச செயலகம், தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம், சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பொலிஸ் நிலையம், கொடிகாமம் பொலிஸ் நிலையம், சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் படைமுகாம்கள் போன்றவற்றின் பங்களிப்புடன் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள அலுவலர்களுடன் சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் 25 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள குடியிருப்புக்கள், பாடசாலைகள், அரச, தனியார் கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் நிர்மாணிப்பு இடங்கள், பொது இடங்கள், சமய வழிபாட்டுத் தலங்கள் போன்ற இடங்களில் பரிசோதனைகளை மேற்கொள்வர்.

எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் மத்தி, கொடிகாமம் வடக்கு, கச்சாய் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் 28 ஆம் திகதி புதன் கிழமை வரணி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட நாவற்காடு, கீரம்பைக்குறிச்சி, இடைக்குறிச்சி ஆகிய இடங்களிலும்

29ஆம் திகதி வியாழக்கிழமை மட்டுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட, மட்டுவில் வடக்கு, மட்டுவில் தெற்கு, சரசாலை தெற்கு ஆகிய இடங்களிலும்

30ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட சாவகச்சேரி நகரம், கோயிற்குடியிருப்பு, சங்கத்தானை ஆகிய இடங்களிலும்

ஒக்ரோபர் முதலாம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி நகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு ஆகிய இடங்களிலும் ஒக்ரோபர் இரண்டாம் திகதி மந்துவில் பொதுச் சுகாதாரப்பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட இராமாவில் மீசாலை வடக்கு மந்துவில் கிழக்கு ஆகிய இடங்களிலும் ஒக்ரோபர் மூன்றாம் திகதி கைதடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட கைதடி மத்தி கைதடி தெற்கு ஆகிய இடங்களிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன அறிவிக்கப்பட்டது.

தரிசிப்புக் குழுக்கள் 27ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் உப அலுவலகத்திலிருந்தும் 28ஆம் திகதி வரணி வைத்தியசாலையிலிருந்தும் 29ஆம் திகதி மட்டுவில் சிறிவேற்பிள்ளை சனசமூக நிலையத்திலிருந்தும் 30ஆம் திகதி சாவகச்சேரி நகரசபையிலிருந்தும், ஒக்ரோபர் முதலாம் திகதி மீசாலை பொது நூலகத்திலிருந்தும், இரண்டாம் திகதி மீசாலை புத்தூர் சந்தி பொது நோக்கு மண்டபத்திலிருந்தும், மூன்றாம் திகதி கைதடி மின்னொளி சனசமூக நிலையத்திலிருந்தும் புறப்படும் என்று அறிவிக்கப்பட்டது.(வ-9)

## சிறுமியை அடித்துக் கொடுமை; சித்தி பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், செப். 23
நீர்வேலிப் பகுதியில் ஆறு வயதுச் சிறுமியை அடித்துக் கொடுமைப்படுத்திய சித்தியை கோப்பாய் பொலிஸார் நேற்று மாலை கைது செய்தனர். சிறுமியை அடித்துக் கொடுமைப்படுத்தும்காணொலி சமூக ஊடகங்களில் நேற்றுப் பரவலாகப் பகிரப்பட்டது.

நீர்வேலியில், நேற்றுக் காலை 6.30 மணியளவில் ஆறு வயதுச்சிறுமியைத்தடியாலும், கையாலும், கத்தியாலும் சித்தியார் அடித்துக் கொடுமைப்படுத்தியுள்ளார். சிறுமியின் தந்தையின் இரண்டாவது மனைவியே இவ்வாறு அடித்துத் துன்புறுத்தியுள்ளார். சிறுமி கதறியழவும் அவரது தலைமயிரைப் பிடித்து மிக மோசமான முறையில் அடித்துள்ளார்.

இந்தக் காணொலி சமூக வலைத் தளங்களில் நேற்று வெளியிடப்பட்டது. அத்துடன் கோப்பாய் பிரதேச செயலக நன்னடத்தை உத்தியோகத்தருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், சிறுமியின் சித்தியாருக்கு எதிராக கோப்பாய் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்தார்.

முறைப்பாட்டுக்கு அமைவாக, அவர் கைது செய்யப்பட்டதுடன், சிறுமியும் அவரது இரண்டு சகோதரர்களும் பொலிஸாரல் மீட்கப்பட்டு கோப்பாய்பொலிஸ்நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டனர். நீதிமன்றத்தில் இன்று சிறுமியின் சித்தியாருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
(வ-5,37)

## சைக்கிளிலிருந்து தவறி வீழந்தவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம், செப். 23
சைக்கிளின் பின் இருக்கையிலிருந்து சென்ற தந்தை தவறி வீழ்ந்து தலையில் காயம் ஏற்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

சுழிபுரத்தில் கடந்த 19ஆம் திகதி மருந்தெடுப்பதற்காக மகளின் சைக்கிளில் வைத்தியசாலைக்கு அவர் சென்றிருந்தார். அதன்போதே தவறிக் கீழே விழுந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

காட்டுப்புலம் சுழிபுரத்தைச் சேர்ந்த 76 வயதுடைய வேலன் சின்னத்தம்பி என்பவரே இவ்வறு உயிரிழந்தார். தீடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (வ-4,ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மறுவாழ்வுக்கு அனுப்பும்

# 23 அரசியல் கைதிகளின் விவரங்கள் வெளியீடு

சிறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட 23 தமிழ் அரசியல் கைதிகளும், அவர்களுடைய அடுத்த வழக்குத் தவணையின் போது புனர்வாழ்வுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். இன்னமும் 2 அல்லது 3 வாரங்களுக்குள் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படும் என்று சட்டமா அதிபர் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன் அவர்களின் பெயர் விவரத்தையும் சட்டமா அதிபர் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளில் சிறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட 23 பேருக்குப் புனர்வாழ்வு வழங்கி விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் யோசனை முன்வைத்திருந்தது. அதற்கு நீதி அமைச்சு, சட்டம் ஒழுங்கு அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சு என்பன ஒப்புதல் வழங்கின.

இதனையடுத்து, 23 பேரையும், அவர்கள் தடுத்து வைத்திருந்த காலத்தை கவனத்தில் எடுத்து, அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களைக் குறைத்து புனர்வாழ்வு வழங்கி சமூகமயப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

23 பேரும் அவர்களது அடுத்த வழக்குத் தவணைக்காக நீதிமன்றங்களில் முற்படுத்தப்படுகின்ற போது, குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டால், புனர்வாழ்வு நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்று சட்டமா அதிபர் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள 23 பேரினதும் பெயர்கள் வருமாறு, செல்லப்பா சிவநாதன் (2009.05.28 கைது செய்யப்பட்டவர்), கணபதிப்பிள்ளை அமரசிங்கம் (2009.05.28 கைது செய்யப்பட்டவர்), தர்மலிங்கம் சத்தியலிங்கம் (2009.08.07 கைது செய்யப்பட்டவர்), தேவராசா சிவபாலன் (2006.08.13 கைது செய்யப்பட்டவர்), இராசையா தேவராசா (2007.06.01 கைது செய்யப்பட்டவர்), டார்வூட் மொஹமட் அஜ்மீர் (2008.02.19 கைது செய்யப்பட்டவர்), குருபன் குருகரன் (2008.07.01 கைது செய்யப்பட்டவர்), நமிந்த சம்பத் கொப்பேகடுவ (2008.07.02 கைது செய்யப்பட்டவர்), செல்ரன் (2008.07.11 கைது செய்யப்பட்டவர்), சுந்தரமணி சிவகுமார் (2008.08.18 கைது செய்யப்பட்டவர்), தட்சணாமூர்த்தி செல்வகுமார் (2008.08.17 கைது செய்யப்பட்டவர்), டேவிட் சுரஞ்சீவ் கிரிசாந்தன் பெர்னான்டோ (2008.08.17 கைது செய்யப்பட்டவர்), பெருமாள் சந்திரமோகன் (2010.10.13 கைது செய்யப்பட்டவர்), கோவிந்தசாமி சுந்தரமணி (2008.04.06), மார்கண்டு நெனிந்தன் (2015.09.25 கைது செய்யப்பட்டவர்), வேதநாயகம் (2015.06.23), ஏ. நகுலராசா (2008.02.02 கைது செய்யப்பட்டவர்), வி.ஞானேந்திரன் (2008. 02. 02), ஜி. கிருபானந்தன் (2008.04.06 கைது செய்யப்பட்டவர்), எம்.ஜூட் சுரேஸ் (2008.05.30 கைது செய்யப்பட்டவர்), வாசு கோபால் (2006.11.29), கதிரவேலு கபிலன் (2009.05.22), ராசலிங்கம் பார்தீபன் (2009.05.22 கைது செய்யப்பட்டவர்). (வ-5-101)

# நாளைய ஊர்வலத்துக்கு சிவில் சமூக அமையம் ஆதரவு

யாழ்ப்பாணம், செப். 23

தமிழ் மக்கள் பேரவை ஏற்பாடு செய்துள்ள ஊர்வலத்துக்கு ஆதரவு வழங்குவதாக, தமிழ் சிவில் சமூக அமையம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

புதிய அரசமைப்பு தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களை உள்வாங்கி தமிழருக்கான தீர்வை சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் வழங்கும் என்பதில் கிஞ்சித்தும் நம்பிக்கையில்லை. புதிய அரசமைப்பு கூட்டாட்சி சனநாயக மாதிரியை கருத்தில் எடுக்கத்தானும், அரசியல் விருப்புக் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை.

அரைகுறை தீர்வொன்று தமிழ் மக்களின் மீது திணிக்கப்படும் முயற்சிகள் தொடர்பில் தமிழ் மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். நாம் எமது தேசிய இனப்பிரச்சினையையும் நீதிக்கான போராட்டத்தையும் மக்கள் மையப்படுத்தி முன்னிறுத்த வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலை முள்ளிவாய்க்காலில் உச்சத்தை அடைந்தது. கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை இன்னும், சிங்கள, பௌத்த மயமாக்கலுக்கூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணயக் கோரிக்கைகளை கட்டவிழ்கின்றது. அரசியல் சூழலில் வரலாற்றுத் தேவையை உணர்ந்து அனைத்து தமிழ் மக்களும் அணி திரள்வது மிகவும் அவசியமாகின்றது என்றுள்ளது. (வ-5)

**சனீஸ்வர ஹோமம்**

நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்தில் நாளை 24.09.2016 சனி அன்றும் 15.10.2016 கடை வார சனி அன்றும் காலை 9 மணி முதல் ந.ப. 12 மணி வரை ஹோமம் நடைபெறும் தோஷமுள்ளவர்கள், அடியார் இதில் பங்கு கொள்ளவும்.

தேவஸ்தானம்

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1299
சீட்டிழுப்பு திகதி 2016.09.22
வெற்றி இலக்கங்கள்
11 27 37 43 N
ரூ. 25,074,260/=

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 553
சீட்டிழுப்பு திகதி 2016.09.22
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
01 05 43 70 Q
சுப்பர் ஜக்பொட்
ரூ.51,775,920/=
வெல்லப்படவில்லை

## ராணுவத்தின் கைக்கூலிகள் இணைந்துள்ள ஊர்வலத்துக்கு நாமும் ஆதரவளிப்பதா?

*கேள்வியெழுப்புகிறார் மாவை எம்.பி.*

தமிழீழ விடுதலைப் புலிகள் போர்க்களத்தில் போராடியவேளையில் நாம் மக்களின் தேவைகளுக்காக போராடியமைக்காக எம் மீது சூடு நடத்தியும் விடுதலைப் புலிகளை இராணுவத்திடம் காட்டிக்கொடுத்தவர்களும் இணைந்து நடத்தும் ஊர்வலத்தில் எம்மையும் இணையுமாறு அழைக்கின்றனர். அதனை ஏற்க முடியுமா? இவ்வாறு கேள்வியெழுப்பினார் மாவை.சோ.சேனாதிராசா.

கோப்பாய் கோமகன் வன்னியசிங்கத்தின் 57வது நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது மக்களுக்கான நிரந்தரத் தீர்வை இந்த ஆண்டு இறுதிக்குள் எட்ட கடும் முயற்சியை மேற்கொண்டு வருகின்றோம். இதனைப் பன்னாட்டுச் சமூகமும் ஏற்று ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். அந்த நிலையில் அரசின் தீர்விற்காக உழைத்தவாறு எதிர்ப்பையும் காட்டுவது இரட்டை நிலைப்பாடாகக் கொள்ளப்படும். பன்னாட்டுப் பங்களிப்புக் காணப்படும் அதேவேளையில், நியாயமான தீர்வை வழங்க வேண்டுமென அரசுக்கு உலக நாடுகள் பல வலியுறுத்தும் சந்தர்ப்பத்தையே இறுகப் பற்ற எண்ணுகின்றோம் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா. (வ-101)

# இரண்டாகப் பிளவுபட்டு நிற்கும் யாழ்.பல்கலைக்கழகச் சமூகம்

யாழ்ப்பாணம், செப்.23

யாழ்ப்பாணத்தில் நாளை நடக்கும் ஊர்வலத்துக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் இரண்டாகப் பிளவுபட்டு நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாளை நடக்கும் ஊர்வலத்துக்கு ஆதரவு வழங்கினால், பொதுபல சேனா போன்ற பேரினவாதக் கட்சிகள் பல்கலைக்கழக சமூகத்தை ஆதரவு திரட்டி ஊர்வலம் நடத்துவதை ஏற்றுக்கொள்ள வேண்டி வரும். எனவே அரசியல் சார்ந்த ஊர்வலத்துக்கு பல்கலைக்கழக சமூகம் ஆதரவளிப்பது தவறு என யாழ்.பல்கலைக்கழக சமூகத்தில் ஒரு பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் இணைந்து கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட யாழ். பல்கலைக்கழகத்தைச் சார்ந்த தரப்பினர் ஊர்வலத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று தெரிவிக்கின்றனர்.

இதனால், நாளைய ஊர்வலம் தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினரிடையே குழப்பமான நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் ஊர்வலத்துக்கு ஆதரவு வழங்குவதாக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் மாணவர் ஒன்றியமும் நேற்றிரவு அனுப்பி வைத்த அறிக்கையில் தெரிவித்துள்ளன.

இது குறித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழ ஆசிரியர் சங்கம் அனுப்பியுள்ள அறிக்கையில், தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாப்பதற்கான உரிமைக் குரலின் அடையாளமாக கருதி ஊர்வலத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

தமிழ்த் தேசியத்துக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராகச் செயற்பட்ட ஜனநாயக விரோத அரசியல் கட்சிகள் தங்களது தவறுகளையும் துரோகங்களையும் மூடி மறைப்பதற்கான களமாக ஊர்வலத்தைப் பயன்படுத்துவதற்கு இடமளிக்க முடியாது.

ஊர்வலம் தொடர்பில் யாழ்ப்பாண வணிகர் சங்கத்தின் அறிவிப்புத் தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஏமாற்றம் அடைகிறது-என்றுள்ளது.

பல்கலைக்கழக மாணவ ஒன்றியம் அனுப்பியுள்ள அறிக்கையில், யாழ். பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கமும், ஊழியர் சங்கமும் ஆதரவளிக்க முன்வந்துள்ள நிலையில் மாணவர்களுக்கான பீடங்களின் ஒன்றியத்தினர்களாகிய நாமும் பல்கலைக்கழக சமூகமாக இணைந்து இந்த ஊர்வலத்துக்கு ஆதரவளிக்க முன் வந்துள்ளோம். எம் சமூகத்தினது இருப்பை நிலைநாட்டிக்கொள்ளவும், எமது கோரிக்கைகளை ஒற்றுமையாக அரசுக்கும் பன்னாட்டு சமூகத்துக்கும் தெளிவுபடுத்தவும் அரசியல் கட்சி பிரதேச பேதங்களை மறந்து தமிழர்களாக ஒன்றிணையுமாறு வேண்டுகிறோம் என்றுள்ளது.

இதேவேளை, 2015 2016 ஆம் ஆண்டுகளுக்கான மாணவர் ஒன்றியத்தினுடைய பதவிக் காலம் முடிவுற்ற நிலையில் 2016 - 2017ம் ஆண்டுகளுக்கான புதிய மாணவர் ஒன்றியம் இன்னமும் அமைக்கப்படாமலுள்ளது.

பீடங்கள் தமது புதிய மாணவர் ஒன்றியங்களை அமைத்துள்ள நிலையில் புதிய பீடங்களின் மாணவர் ஒன்றியங்கள் இணைந்து யாழ் பல்கலைக்கழக இணைந்த பீடங்களின் ஒன்றியங்கள் என்ற வகையில் இவ் அறிக்கையை வெளியிடுகின்றோம் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (வ-4)

வாழ்க்கை பிரச்சனைகளிலிருந்து நம்மை விடுவித்து வாழ்வை வளமாக்கும்

'ஜியோபதிக் ஸ்ட்ரெஸ் ஹீலிங்'



விஞ்ஞானப்பூர்வமாக நிரூபிக்கப்பட்ட இயற்கை சக்திகளின் மூலம் தீர்வு காணலாம்.

எனர்ஜி ஸ்கேனர் மூலம் உடல் நலக் குறைபாடுகளைக் கண்டுபிடித்து தீர்வு பெறலாம்.

வீடு, மனை, வியாபார இடங்களில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு Geopathic Stress Healing மூலம் தீர்வு பெறலாம்.

ரெய்கி தீட்சை பெற்று உடல், மனம் ஆரோக்கியத்துடன் வாழ்க்கை சிறப்பாக அமைய ஆலோசனை பெறலாம்.

* வாஸ்து பார்த்து கட்டிய பின்னும் வீட்டில் பிரச்சனைகளா?
* உடல் நலக்குறைவினால் நிம்மதியின்மையா?
* திருமணத் தடை, குழந்தையின்மை பிரச்சனையா?
* வியாபார முன்னேற்றத்தில் தாமதமா?
* குடும்ப பிரச்சனைகளால் மனதில் குழப்பமா?



Dr.A.Meenakshi M.B.B.S., D.G.O.,
International Grand Master - Reiki

யாழில் இன்று மாலை இலவச அறிமுக நிகழ்வு!

சனி, ஞாயிறு தினங்களில் அற்புத ரெய்கி வகுப்புகள்

முன்பதிவுக்கு முந்துங்கள்!

திருகோணமலையில் ஒக். 1, 2ம் திகதிகளில் பயிற்சி வகுப்புகள்!

முன்பதிவிற்கு:
0755674227
0752467942

email: drameenakshi@yahoo.com | Website: www.energynests.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் தலைதூக்கும் சாத்தியமே இல்லை

## ஜே.வி.பி. தலைவர் கூறுகிறார்

கொழும்பு, செப் 23
விடுதலைப் புலிகள் இலங்கையில் தலைதூக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
போர் அழிவை சந்தித்துள்ள வடக்கு-கிழக்கில் உள்ள மக்கள் மீண்டும் ஒரு போர் ஏற்படுவதை விரும்பமாட்டார்கள்.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது குழுவினர்கள் மாத்திரமே விடுதலைப் புலிகளின் மீள்வருகை குறித்து பேசுகின்றனர். எனினும், அதற்கான சாத்தியக் கூறுகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. வடக்கில் மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்தை ஏற்படுத்துவதற்கான எண்ணம் ராஜபக்ச குழுவினருக்கு இருந்தாலும், தமிழ் மக்களுக்கு இல்லை. வடக்கையும் தெற்கையும் பிரிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அணியும், தமிழர் தரப்பிலுள்ள இனவாதிகளுமே முயற்சி செய்து வருகின்றனர்-என்றார். (த்)

# சந்நிதியில் தவறவிட்டதை பெற்றுக் கொள்ளலாம்

யாழ்ப்பாணம், செப்.23
தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய உற்சவத்தின்போது பக்தர்களால் தவறவிடப்பட்ட ஆபரணங்கள், கைக்கடிகாரங்கள், அடையாள அட்டைகள், கைத்தொலைபேசிகள், கைப்பைகள், ஆவணங்கள் போன்ற பொருள்கள் பிரதேச செயலக உற்சவகால பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
அவற்றை உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி பெற்றுக்கொள்ள முடியும் என பருத்தித்துறை பிரதேச செயலர் தெரிவித்தார். (ற-ரி)

# பெருந்திருவிழா


கொழும்புத்துறை, செப்.23
கொழும்புத்துறை புனித செப மாலை அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா இன்று மாலை 5.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.
நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.30 நடைபெறும். எதிர்வரும் முதலாம் திகதி மாலை 5.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழா நடைபெறும். மறு நாள் காலை 6.30 மணிக்குப் பெருந் திருவிழாத் திருப்பலி யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நிறைவேற்றப்பட்டுத் தேர்ப் பவனியும், திருச்சொரூப ஆசிரும் நடைபெறும். (ற-135)

# இந்திய மீனவர்களின் படகுகளை இலகுவாக விடுவிக்கும் நல்லாட்சி

## ஜி.எல். பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 23
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சியின்போது கைது செய்யப்பட்டு விடுவிக்கப்படாதிருந்த இந்திய மீனவர்களின் படகுகளை மைத்திரி-ரணில் இணைந்த புதிய அரசு இலகுவாக விடுதலை செய்துவருவதாகக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.
கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜி.எல். பீரிஸ் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.
இந்திய-இலங்கை மீனவர் பிரச்சினை குறித்து முன்னைய அரசு இந்திய அரசுக்குத் தொடர்ச்சியான அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தது. எனினும் புதிய அரசு இது குறித்துப் பேச்சுக்குச் செல்லவே தயக்கம் காட்டிவருகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இந்திய மீனவர்களின் படகுகள் விரைவாக விடுதலை செய்யப்படவில்லை. இன்று அப்படியல்ல, இன்று மிக இலகுவாக அந்தப் படகுகள் விடுதலை செய்யப் படுகின்றன. கடந்த ஆட்சியில் இந்திய அரசுக்கு அடுத்தடுத்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வந்தன. நான் வெளிவிகார அமைச்சராக இருந்தபோது, இந்திய வெளி விவகார அமைச்சரைச் சந்தித்தவேளைகளில் இந்த விவகாரம் குறித்து தனிப்பட்ட முறையில் பேச்சு நடத்தியிருந்தேன். இந்தப் பிரச்சினை குறித்து தொடர்ச்சியான கண்காணிப்புகள் அப்போது இருந்தன.
ஆனால் இன்று மீனவப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக்கூட புதிய அரசு தயக்கம் காட்டுகின்றது. சர்வதேச சக்திகளின் தேவை களுக்கு ஏற்றபடியே இந்த நாட்டின் கொள்கைகள் மாற்றப்படுகின்றன-என்றார். (த்)

# நிறைவுக்கு வந்தது நீர்க் காகம் பயிற்சி



கொழும்பு, செப். 23
இலங்கையின் முப்படையினரும் இணைந்து, மூன்று வாரகாலமாக மேற்கொண்டு வந்த நீர்க்காகம் கூட்டுப் பயிற்சி கடந்த செவ்வாய்க்கிழமை நிறைவுக்கு வந்துள்ளது.
இலங்கை இராணுவத்தின் ஒழுங்கமைப்பில் ஏழாவது ஆண்டாக, இடம் பெற்ற இந்தக் கூட்டுப் பயிற்சி கொக்கிளாயில் ஆரம்பித்து, புல்மோட்டைப் பகுதியில் நேற்று முன் தினம் நிறைவடைந்தது.
இந்தக் கூட்டுப் பயிற்சியில் 2,500 இலங்கை இராணுவத்தினர், 638 கடற்படையினர், 506 விமானப் படையினர் மற்றும் பங்களாதேஷ், இந்தியா, சீனா, அமெரிக்கா, ஜப்பான், மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 58 வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.
நேற்றுமுன்தினம் காலை புல்மோட்டை அரிசிமலைப் பகுதியில் இடம்பெற்ற நிறைவு நாள் நிகழ்வில், விமானப்படை மற்றும் கடற்படையின் தரையிறக்கத் தாக்குதல் ஒத்திகை ஒன்றும் இடம்பெற்றது.
இதனை பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, முப்படைகளின் தளபதிகள் நேரில் பார்வையிட்டனர்.
மூன்று வாரங்களாக, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு காடுகள் மற்றும் கடற்கரைப் பகுதியில் நடத்தப்பட்ட இந்த கூட்டுப் பயிற்சியில் சிறப்புப் படை மற்றும் கொமாண்டோப் படைப் பிரிவுகளுக்கான தீவிர பயிற்சிகள் அளிக்கப்பட்டன.
ரோந்து, காட்டுப் பயிற்சிகள், சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் தந்திரோபாயங்கள், திடீர்த் தாக்குதல்கள், பதுங்கித் தாக்குதல்கள், குறி பார்த்துச் சுடுதல், மீட்பு மற்றும் உதவி நடவடிக்கைகள் தொடர்பாக இந்தக் கூட்டுப் பயிற்சியில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. (த்)

# கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 23
யாழ். வணிகர் கழகம் மாற்றுத் திறனாளிகளாக உள்ள முன்னாள் போராளிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணம் வழங்கவுள்ளது. இந்த நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வணிகர் கழகத்தில் நடைபெறவுள்ளது என்று யாழ். வணிகர் கழக உபசெயலாளர் வி.எஸ். பாலச்சந்திரன் தெரிவித்தார்.
வன்னியில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகளால் மாற்றுத்திறனாளிகளாக்கப்பட்ட முன்னாள் போராளிகள் பலர் உள்ளனர். வன்னி விழிப்புலனற்றோர் சங்கம் 268 மாற்றுத் திறனாளிகளான முன்னாள் போராளிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் நடவடிக்கைகளுக்கு உதவுமாறு வேண்டுகோள் விடுத்தது. யாழ். வணிகர் கழகத்தால் 189 மாற்றுத் திறனாளிகளான முன்னாள் போராளிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப் படவுள்ளது. கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழகத்தில் நடை பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5,ரி)

# யானை தாக்கி பெண் சாவு



மூதூர், செப். 23
திருகோணமலை மூதூர் பிரதேச செயலக பிரிவில் உள்ள தங்கபுரம் கிராமத்தில் யானை தாக்குதலுக்கு இலக்காகி பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயெ உயிரிழநந்துள்ளார்.
இவ்வாறு உயிரிழந்தவர் முத்துலிங்கம் ஜானகி (வயது-64) என அடையாளம் காணப்பட்டுள்ளது.
நேற்று முன்தினம் அதிகாலை தமது வீட்டுக்கு அருகில் விளாம்பழம் எடுக்க சென்றிருந்தபோது மரத்தின் கீழ் நின்ற காட்டு யானை தாக்கியதால் அவர் உயிரிழந்துள்ளார் எனக் கிராம மக்கள் தெரிவித்தனர். இந்த விடயம் தொடர்பான விசாரணையை சம்பூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-40)

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி
Spoken English
Veta Fluency Diploma

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon, Wed, FRI 8.30 a.m. | Tue, Thu 3.30 p.m. | Tue, Thu 8.00 a.m. | Mon,Fri 11.00 a.m. | Sat, Sun 8.00 a.m. |
| Sat, Sun 10.30 a.m. | Sat, Sun 3.30 p.m. | Tue, Thu 10.00 a.m. | Mon, Fri 9.00 a.m. | Sat, Sun 10.00 a.m. |
| Sat, Sun 3.30 p.m. | | | | |

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்
DMI COMPUTER EDUCATION
சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்
IELTS
IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு
100%
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.
DMI COMPUTER EDUCATION

| No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | M.M.V. வீதி, நெல்லியடி | No. 174, கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி | No. 130, K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் | No.19,A9 வீதி, கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
வழங்கும்
After AL What Next?
உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற
பல்கலைக்கழகமா? உயர்கற்கை நெறியா? புதிய தொழில் வாய்ப்பா?
உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரேவழி
அதை மேம்படுத்துவதே எமது நோக்கு
Spoken English with Grammar 2 Months
100% பயிற்சி
சர்வதேசத்தரம் கொண்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கி மிகவும் இலகுவான விளக்கங்களுடன் அனைவருக்கும் பயனுள்ள வகையில் கற்பிக்க வகை செய்திருக்கின்றோம். ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர் களுக்காகவே இந் நெறி நடாத்தப்படுகிறது. மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவரும் ஆங்கிலத்தில் உரையாட, சரளமாகப் பேசுவதற்கு இது வழிவகுக்கும்.
100% வெற்றி
Diploma In English 2 1/2 Months
ஒரு தொழில் தேடுவதாயினும், உயர் கல்வியினைத் தொடருவதாயினும், ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதுள்ளது. இவை யாவையும் கருத்திற் கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்படுகிறது. Spoken English Course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாடநெறி.
* வகுப்புகள் யாவும் புதிய தொழில்நுட்பத்திற்கமைவாக (Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
* எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
* கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாகவளின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
* ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்களுக்கு தனிப்பட்ட கவனமும், கூடுதல் பயிற்சிகளும் வழங்கப்படும்.
Spoken English with Grammar
~~Rs.10,000~~ Rs.7,500
Diploma in English
~~Rs.14,000~~ Rs.9,500
Batches Start on
24-09-2016 @ 9.00am
26-09-2016 @9.00am
28-09-2016 @9.00am
01-10-2016 @9.00am
03-10-2016 @9.00am
British College of Higher Studies
No.15, 2/1, Sirambiyady Lane,
(Near Ariyakulam Junction & Above Sathosa SM)
Jaffna. Tel : 021 2224550, 077 7304545

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவைகள் அலுவலர்கள் நியமிக்கப்படாததால் சிரமம்

## வன்னி மாவட்ட மக்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப்.23

வன்னிமாவட்டப்பிரதேசசெயலகங்களில் சமூக சேவைகள் அலுவலர் பதவிகள் நிரப்பப்படாதுள்ளன. அதனால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த பிரதேச செயலகங்களில் சமூக சேவைகள் அலுவலர் இல்லாததால் ஏனைய பிரதேசசெயலகங்களில் கடமையாற்றும் சமூக சேவைகள் அலுவலர்கள் பதில் கடமையாற்றுகின்றனர்.

நிரந்தர சமூக சேவைகள் அலுவலரை நியமிக்குமாறு பிரதேச செயலகங்களில் மக்கள் கேட்கின்றபோது, வடமாகாண சபை தான் நியமனங்கள் வழங்க வேண்டும். அங்கு சென்று முறையிடுங்கள் என்று பதிலளிக்கப்படுகின்றது. வன்னி மாவட்டப் பிரதேச செயலகங்களில் இரண்டு வருடங்களுக்கு மேலாக நிரந்தர சமூகசேவைகள் அலுவலர்கள் இல்லாமல் பதில் கடமை அலுவலர்களே கடமையாற்றுகின்றனர்.

மாகாணத்தில் காணப்பட்ட 13 சமூக சேவைகள் அலுவலர் பதவிகளுக்கு ஆள்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 13 பேருக்கு நியமனங்கள் வழங்கத் தயார் செய்யப்பட்டது. அவர்களில் நான்கு பேரின் கல்வித் தகைமையில் காணப்பட்ட சில குறைபாடுகள் காரணமாக நான்கு பேரினதும் நியமனங்கள் நிறுத்தப்பட்டு, ஏனைய 9 பேருக்கான நியமனங்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் வழங்கப்பட்டன. ஏனையோருக்கான நியமனம் வழங் குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றது. வன்னி மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்களின் கல்வித் தகைமையில் காணப்பட்ட குறைபாடே நியமனத் தாமதத்துக்குக் காரணம். விரைவில் அங்கு காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படும்- என்று வடக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ற-5,9)

# மாணவர் நாடாளுமன்றக் கன்னி அமர்வு

மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் மாணவர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின்பதவியேற்பு நிகழ்வும் மாணவர்நாடாளுமன்றக் கன்னி அமர்வும் இன்று மாலை4 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் பி.தோமஸ் எடிசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினமும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், கௌரவ விருந்தினராக மிருசுவில் கத்தோலிக்க பங்குத் தந்தை அருட் பணி எக்ஸ்.டபிள்யு. ஜேம்ஸ் அடிகளும் கலந்து கொள்வர்.(ற-9)

ஸ்ரீ துர்க்காதேவி ஜோதிடம்
கைரேகை சாஸ்திரம்
பார்க்கப்படும்
சென்டி சாமண்டி மார்த்தாண்டி அபிநயா அருள்பெற்ற கேரளா சோட்டானிக் கரை பகவதி அம்மன் அருள்பெற்ற பட்டுநூல் மந்திரவாதி லஷ்மன் நம்போதரி
KERALA MANTRAVATHI
பிரச்சினை! பிரச்சினை!! பிரச்சினை!!!
யாருக்கு இல்லை பிரச்சினை? எதற்காக பிரச்சினை?
தெரிந்துகொள்ள வேண்டுமா?
உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள், வேலை வாய்ப்பு, ஆரோக்கியம், கணவன் மனைவி இடையே தகராறு, வியாபாரம், திருமணம், சந்தானயோகம், காதல் விவகாரம், அயல் நாட்டு பயணம், பண விவகாரம், நீதிமன்ற பிரச்சினை, மந்திர தந்திராங்கள், செய்வினை இதற்கெல்லாம் பரிகாரம் செய்யப்படும்.
தொடர்பு: பட்டுநூல் மந்திரவாதி
லஷ்மன் நம்போதரி
077 556 9921, 077 558 2237
இல.90, 51/1, கன்னாதிட்டி வீதி,
(மக்கள் வங்கி அருகில் யாழ்ப்பாணம்.

வலி கிழக்கு தென் பகுதி ப.நோ. கூ. சங்கம் நீர்வேலி
கிராமிய வங்கிகளை நவீனமுறையில்
மறுசீரமைத்தல்
கோப்பாய், உரும்பிராய், நீர்வேலி ஆகிய இடங்களிலுள்ள கிராமிய வங்கிகளை நவீன முறையில் மறுசீரமைப்பதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து கேள்வி விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பங்களைத் தலைமைக்கந்தோர் வேலை நாள்களில் பெற்றுக் கொள்ளலாம். (20.09.2016 ஆம் திகதிய இயக்குனர்சபை தீர்மானப்படி)
விண்ணப்ப முடிவு திகதி: 15.10.2016
பொது முகாமையாளர்
வலி கிழக்கு தென்பகுதி ப.நோ. கூ. சங்கம்
நீர்வேலி. 21.09.2016

# கள் உற்பத்தியாளர் நால்வர் மீது பிடியாணை

தென்மராட்சி, செப்.23

நீதிமன்ற வழக்குத் தவணைகள் இரண்டுக்கு வருகை தராத கள் உற்பத்தியாளர்கள் நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

வீடுகளில் அளவுக்கு அதிகமாக கள் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி எட்டுப் பேருக்கு எதிராக சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் வழக்குகள் தாக்கல் செய்தனர். இரண்டாவது தடவையாக வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, நால்வர் வந்திருந்தனர். நால்வரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. வழக்குக்கு வருகை தராத நால்வருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. (ற-9)

# தமக்குத் தேவையான அபிவிருத்தியை கிராமங்களே தீர்மானிக்க வேண்டும்

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சுட்டிக்காட்டு

அரசால் கிராம அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதியில் எந்த விடயம் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என்பதை அந்தக் கிராம மக்களே தீர்மானிக்க வேண்டும். உத்தியோகத்தர்கள் அல்ல.

இவ்வாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட தேராவில் கிராம சேவையாளர் பிரில் அமைந்துள்ள இளங்கோபுரம்பொது மயானத்துக்கு அஞ்சலி மண்டபம் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இளங்கோபுரம், மாணிக்கபுரம், வள்ளுவர்புரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் குறித்த பொது மயானத்தில்தங்கள்உறவினர்களை அடக்கம் செய்கின்றனர். இளங்கோபுரம் பொது மயானம் பற்றைகள் வளர்ந்து சீரின்மையாக இருப்பதால், அதனை சீர்செய்து சுற்றுமதில், கிணறு மற்றும் எரியூட்டும் கொட்டகை அமைத்து தர வேண்டும் என்று இளங்கோபுரம், மாணிக்கபுரம், வள்ளுவர்புரம் ஆகிய கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக புதுக்குடியிப்புப் பிரதேச செயலர் தெரிவித்ததாவது: "தற்போது அபிருவிருத்தித் திட்டங்களை அந்தந்தக் கிராமங்கள் தான் தெரிவு செய்கின்றன. உத்தியோகத்தர்கள் அல்ல. அரசால் வழங்கப்படும் நிதியில் கிராமங்கள் தங்களுக்குத் தேவையானவற்றைத் தெரியப்படுத்துமிடத்து, அதற்கு பிரதேச மட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் இணைத்தலைவர்களின் அனுமதி கிடைத்தால் அந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும். எது தேவை என்பதை கிராமத்தவர்களே தீர்மானிக்க வேண்டும்" - என்றார். (ற-ரி7)

வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணத்திலுள்ள கடை ஒன்றுக்குப் பகுதிநேர வேலைக்கு ஆண்கள் மட்டும் தேவை.
077 336 3766

வீடு விற்பனைக்கு
பருத்தித்துறை வீதி (நல்லூர்) வீரமாகாளி அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள ஒருபரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு.
077 803 0659

வாடகைக்கு உண்டு
யாழ். நகரின் மத்தியில் 75 பேர் பங்குபற்றக்கூடிய, கருத்தரங்கு மற்றும் பயிற்சிப்பட்டறை நடத்தக்கூடிய புரஜக்டர், ஒலிபெருக்கி வசதிகளுடன் கூடிய மண்டபம் வாடகைக்கு உண்டு.
077 730 4545

சைவநெறிக் கூடம்
அருள்மிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில்
இணுவில்
கன்னித் திங்கள் காரி நோன்பு
(புரட்டாதிச் சனி விரதம்)
அண்மையில் திருக்குடமுழுக்கினைக் கண்ட இணுவில் அருள்மிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோயிலில் தனிச் சந்நிதி கொண்டு இணையவராக வீற்றிருந்து அருளாட்சி புரிகின்ற காரி எம்பெருமானுக்கு (சனிச்சுரருக்கு) கன்னித் திங்கள் (புரட்டாதி மாதம்) முழுவதும் ஒவ்வொரு சனிக்கிழமையும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.
காலை 8 மணி முதல் 10.30 மணிவரை அடியார்கள் தங்கள் கரங்களால் பால், நீர் கொண்டு அபிஷேகம் செய்யலாம். முற்பகல் 10.30 மணி முதல் சிறப்பு வழிபாடுகள் ஆரம்பமாகும். நண்பகல் 12 மணியளவில் சனிச்சுரப் பெருமான் திருவீதி எழுந்தருளுவார். நிறைவில் மகேச்சுரப் பூசை இடம்பெறும்.
- சைவநெறிக் கூடம் -

யாழ்.மாநகரில்
White Lotus Campus
WHITE LOTUS CAMPUS
No.154, A1,Navalar Road Jaffna
021 722 3773 / 077 622 3963
UGC Approved
மிகக் குறைந்த செலவில் உங்கள் பட்டப்படிப்பு கனவினை நனவாக்கிக் கொள்வதற்கான அரிய வாய்ப்பு
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
(வெளிவாரிப் பட்டப்படிப்புக்கான விரிவுரைகள்)
- B.Sc - Business Administration
- B.Sc - Public Management
- B.Com
- B.A - Humanity and Social Science
- B.A - Environment and Social Studies
- B.A - English
Coordinators:
P.Rajaram,B.Sc Accounting , CIMA Passed Finalist
(University of Sri jayewardenepura)
T.Sutharsan, B.Sc - Public management. SLACS III
இந்திராகாந்தி பல்கலைக்கழகம்
(இந்தியா)
Bachelors Degree
- B.Com
- B.A
Public Administration
Economics
Political Science
Sociology
English
Masters Degree
- M.BA
- M.A English
- M.A Education
October INTAKES
077 622 3963, 077 932 4255

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உடுவில் மகளிர் கல்லூரி விவகாரம் ஈ.பி.டி.பியின் பிரேரணை பிசுபிசுப்பு

யாழ்ப்பாணம், செப். 23

உடுவில் மகளிர் கல்லூரி விடயத்தைப் பிரேரணையாக ஈ.பி.டி.பியினர் மாகாண சபைக்கு நேற்று எடுத்து வந்தபோதும் அது நிறைவேற்றப்படவில்லை. ஆளும் கட்சியின் கூட்டு எதிர்ப்பை அடுத்துக் கைவிடப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 62 ஆவது அமர்வு கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது ஈ.பி.டி.பி.யின் மையக் குழு உறுப்பினரும் சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான சி.தவராசா, உடுவில் மகளிர் கல்லூரி விடயம் தொடர்பில் பிரேரணை முன்வைத்தார்.

உடுவில் மகளிர் கல்லூரியில் சில முறைகேடான விடயங்கள் இடம்பெறுகின்றன என்று தனக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது என்று சுட்டிக்காட்டி, அது தொடர்பில் முதலமைச்சர் விசாரணைக் குழு அமைத்து விசாரணை செய்ய வேண்டும் என்று பிரேரணையில் கோரப்பட்டிருந்தது.

பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர், பாடசாலையில் நிர்வாகம் - அதிபர் நியமனம் தொடர்பில் நான் எதுவும் குறிப்பிடவில்லை. அதில் தலையிட முடியாது என்பதையும் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் அங்குள்ள மாணவிகள் தொடர்பில் அவர்களின் கல்வி நடவடிக்கை தொடர்பில் நாம் அக்கறை கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேயே இதனைக் கோருகின்றேன் என்று குறிப்பிட்டார்.

ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார். விடயம் பொலிஸ் நிலையம் வரையில் சென்று விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மல்லாகம் நீதிமன்றுக்கு இது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்தத் தருணத்தில் இதனை நாம் இங்கு பேசுவது பொருத்தமற்றது என்று குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவங்கள் பழைய அதிபரின் காலத்தில் நடைபெற்றது என்று சொல்வதனை விட பழைய அமைச்சரின் காலத்தில் நடைபெற்றது என்பதே பொருத்தமானது. இராணுவ டாங்கியோடு அங்கு போய் நின்ற சம்பவமும் உண்டு எனவும் சயந்தன் தெரிவித்தார்.

ஆளும் கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன் எம்மிடமும் ஆயிரம் முறைப்பாடுகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றையும் இங்கு கொண்டு வர முடியுமா ? உடுவில் மகளிர் கல்லூரி விடயம் ஜனாதிபதி, நீதிவான் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட விடயம் - என்றார்.

ஏனைய ஆளும் கட்சி உறுப்பினர்களான பரஞ்சோதி, ஆனோல்ட், அஸ்மின் ஆகியோரும் பிரேரணைக்கு எதிர்ப்பு வெளியிட்டனர்.

அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், முதலமைச்சரின் விசாரணையைக் கோருவதன் ஊடாக முதலமைச்சரை இழுத்துச் சென்று மாட்டி விடுவது போல் உள்ளது. அதனால் இந்த விடயம் முழுமையாக நீக்கப்படுகின்றது. எமது சட்டத்தை நாம் மீற முடியாது.

விடயத்தை முறைப்பாட்டுக் குழு விடம் சமர்ப்பியுங்கள். முறைப்பாட்டுக் குழு தேவை ஏற்படின் அதனை முதலமைச்சருக்கு அனுப்பலாம் - என்றார். (ற-5,101)

## தபால் தலை கண்காட்சி இன்று

தென்மராட்சி, செப்.23

உலக அஞ்சல் வாரம் கடந்த 19ஆம்திகதி தொடக்கம் நாளை மறுதினம் வரை முன்னெடுக்கப்படுகின்றது.

அதை முன்னிட்டு சாவகச்சேரி அஞ்சல் நிலையத்தினர் இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை அஞ்சல் தலைகளின் (முத்திரைகளின்) கண்காட்சியை அஞ்சல் அலுவலகத்தில் நடத்தவுள்ளனர். கண்காட்சியை பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிடலாம் என்று அஞ்சல் அதிபர் தெரிவித்தார்.

கடந்த வருடம் அஞ்சல் தலைகளின் கண்காட்சி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இலங்கையில் முதன் முறையாக வெளியிடப்பட்ட அஞ்சல் தலைகள், கடித உறைகள் உட்பட இதுவரையான அஞ்சல் தலைகளும் கடித உறைகளும் அதில் காட்சிப்படுத்தப்பட்டு ஏராளமான மக்கள் பார்வையிட்டனர். (ற-9)

## தியாகத்திறன் வேள்வி நாளை

யாழ்ப்பாணம், செப். 23

சுவிஸ் காரை அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் தியாகத்திறன் வேள்வி- 2016 மாணவர் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

காரைநகர் இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, இசைப் போட்டி, பொது அறிவுப் போட்டி, வினாடி வினாப் போட்டி, திருக்குறள் மனனப் போட்டி என ஐந்து வகையான போட்டி கள் மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன. (ற-ரி)

## புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டியில் கஞ்சாப் பாவனை அதிகரிப்பு

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

அச்சுவேலி, செப். 23

புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டிப் பகுதிகளில் கஞ்சா, போதைப் பாவனை அதிகரித்துள்ளது. பொலிஸார் உடனடியாக அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

வலி.கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவு பொலிஸ் - பொதுமக்கள் நல்லுறவுக் கூட்டம் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை பிற்பகல் நடைபெற்றது.

கூட்டத்தில் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் அச்சுவேலிப் பொலிஸ் நிலைய உயர் அதிகாரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாகப் பொதுமக்கள் மற்றும் அதிகாரிகளிடம் குறைபாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடும் போது சிறுப்பிட்டி, புத்தூர் மேற்குப் பகுதி தொடர்பான கலந்துரையாடலில் கஞ்சாப் பாவனை மற்றும் அதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகப் பேசப்பட்டது.

கஞ்சா மற்றும் போதைப் பொருள் பாவனை தொடர்பாக பொது மக்கள் மற்றும் கிராமத்தின் பொது நிறுவனங்கள் தகவல் வழங்கி பொலிஸாருடன் ஒத்துழைக்க முன்வர வேண்டும் என்று பொலிஸார் கேட்டுக் கொண்டனர். தெரிவிக்கப்படும் தகவல்கள் இரகசியமாக பேணப்படுவதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு பொருத்தமான பாதுகாப்பும் வழங்கப்படும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். புத்தூர் மேற்குப் பகுதியில் கஞ்சா பயன்படுத்திய இருவர் கைது செய்யப்பட்டனர் என்று அச்சுவேலிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ற-5,11)



## மன்னார் விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள்

யாழ்ப்பாணம், செப்.23

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து 12 மில்லியன் ரூபாய் நிதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட விவசாய உள்ளீடுகள் மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு கடந்த புதன்கிழமை மன்னார் உயிலங்குளம் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் வைபவ ரீதியாக வழங்கப்பட்டது.

மன்னார் விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கான உள்ளீடுகளை வழங்கினார்.

வடமாகாண சபை உறுப்பினர் மருத்துவர் ஜீ.குணசீலன், விவசாய திணைக்கள அதிகாரிகள், பிரதிப்பணிப் பாளர் ஆகியோரும் பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகளை வழங்கினர். (ற-56)

9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





சுப்பிரமணியம் இதயராஜ்
பிறப்பு 09.11.1981
இறப்பு 03.09.2007

சுப்பிரமணியம் கௌசிகன்
பிறப்பு 27.08.1979
இறப்பு 15.12.2007

திதி: சஷ்டி (23.09.2016 வெள்ளிக்கிழமை)
கண்ணீர்ப் பிரளயத்தில் தவிக்கவிட்டு
ஒன்பது ஆண்டுகள் சென்றுவிட்டன
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்து விட்டான் - நாங்களோ
எதுசெய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்
குடும்பத்தினர்.

## இருபாலை கிழக்குக் கிராமத்துக்கு குழாய் மூலம் தண்ணீர் விநியோகம்

### முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.23

இருபாலை கிழக்கு கிராமத்துக்கு நிலத்தடி குழாய் மூலம் குடி தண்ணீரை விநியோகிப்பதற்கு வலி.கிழக்குப் பிரதேச சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

குறித்தொதுக்கப்பட்ட மாகாண விசேட நிதியின் கீழ் பெறப்பட்ட 7.2 மில்லியன் ரூபாவில் அதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது முதற்கட்ட வேலைத்திட்டமாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அருகில் 15ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் கொள்வனவுடைய தண்ணீர் தாங்கி அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதே நேரம் இன்னும் ஓரிருநாள்களில் நிலத்தடிக் குழாய்கள் அமைக்கும்பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு இன்னும் 2 மாதகாலப்பகுதிக்குள் இதன் வேலைகள் யாவும் நிறைவு செய்யப்படவுள்ளன.

இந்தப்பகுதியில் உள்ள குடிதண்ணீர்க் குழாய்க் கிணறு ஊடாக தாங்கிக்குக் குடிதண்ணீர் ஏற்றப்பட்டு அங்கிருந்து நிலத்தடிக்குழாய் வசதி ஊடாக இருபாலை கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட 10 இடங்களில் தண்ணீர் பைப்கள் அமைக்கப்பட்டு பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளது. அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவரும் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற முடியும்.

இருபாலைக் கிராம மக்களுக்கு தற்போது பவுஸர் வாகனம் மூலம் குடிதண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டு சபையினரால் விநியோகிக்கப்பட்டும் வருகின்றது. (ரி, 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. கிழக்கு பிரதேச செயலக பிரிவை இரண்டாகப் பிரிக்குக

## பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை

அச்சுவேலி, செப் 23
வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவை மக்களின் வசதியை கருத்தில் கொண்டு இரண்டு பிரதேச செயலக பிரிவுகளாக பிரித்து (வலி.கிழக்கு தெற்கு, வலி.கிழக்கு வடக்கு) செயற்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளால் வலி. கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பிரிவு யாழ்.மாவட்டத்தில் அதிகூடிய மக்கள் தொகை கொண்ட பிரதேசமாகும். இது 21 ஆயிரத்து 726 குடும்பங்களைக் கொண்டுள்ளது.

வளலாய் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் பொதுப் போக்குவரத்து வசதி குறைவான பாதையில் 15 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்தே கோப்பாய் வந்து தம்து கருமங்களைச் செய்ய வேண்டியுள்ளது. பெருமளவில் விவசாயிகளைக் கொண்ட பிரதேச செயலக பிரிவான வலி.கிழக்குப் பிரிவில் இரண்டுபொலிஸ்நிலையங்கள், இரண்டு பிரதேச வைத்தியசாலைகள் செயற்படுவதோடு பெரும்பாக கமநல சேவைநிலையங்களும் இரண்டு அமைந்துள்ளன. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தலா இரண்டு செயற்படுகின்றன. வலி.கிழக்குப் பிரதேச சபை அச்சுவேலி, நீர்வேலி, உரும்பிராய், கோப்பாய், புத்தூர் என்ற வகையில் ஐந்து உப அலுவலகங்களைக் கொண்டு செயற்படுகின்றது.

பொது மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு பிரதேச செயலகத்தையும் வலி.கிழக்கு வடபகுதி, வலி.கிழக்கு தென் பகுதி என்று செயற்படுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கூட்டத்தில் வலியுறுத்தப் பட்டது.

பொது நிறுவனங்களின் பிரதிகள் முன்வைத்த கருத்தை மிக அவதானமாக செவிமடுத்த இணைத் தலைவர்கள் வலி. கிழக்குப் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் மற்றும் அதிகாரிகளிடம் மேலதிக விவரங்களைக் கேட்டறிந்ததோடு மாவட்ட நிலையில் இது தொடர்பாக கலந்துரையாடி நடவடிக்கை எடுப்போம் என்று குறிப்பிட்டுள்ளனர். (ற-5,11)

## மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், செப்.23
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உடுப்பிட்டி வி.சி, நாச்சிமார் கோயிலடி, எள்ளங்குளம், இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, வெள்ள றோட், உடுப்பிட்டிச் சந்தி, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோயிலடி, பாரதிதாசன் வாசிகசாலையடி, கம்பர்மலை, பழையபொலிஸ் நிலையம், வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி வாசிகசாலைச் சந்தி, வல்லைவீதி, பொக்கணை, கெருடாவில், தொண்டமானாறு, மயிலியதனை, சிதம்பரா, அக்கரை, பாரதி வீதி, மாலுசந்தி, வதிரிச் சந்தி, இரும்பு மதவடி, சக்களாவத்தை ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.

வவுனியாவில் ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, தோணிக்கல் சிவன் கோயில் பிரதேசம், குட்செட்வீதி, பெரிய பூந்தோட்டம், பெரியார்குளம், தெற்கிலுப்பைக்குளம் கிராமம், கொம்புவைத்தகுளம் இராணுவமுகாம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும். (ற-ரி)

## ஆன்மிக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 23
நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் இன்று வெள்ளிக் கிழமை ஆன்மிக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆன்மிக நிகழ்வில் காயமே கோவிலாக எனும் தலைப்பில் புற்றளை மகாவித்தியாலய அதிபர் ஆ.சிவநாதனின் சிறப்புச் சொற்பொழிவும், கதிர்காமக் கந்தன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும் நடைபெறவுள்ளன.

யாழ். கதிர் கலையக ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவ. வை. சோமஸ்கந்தக்குருக்கள் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ரி)

## ஆய்வுகூட திறப்பு விழா

மிருசுவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடத்திறப்புவிழாவும் வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வும் நாளை பி.ப.1.30 மணிக்கு வித்தியாலய அரங்கில் இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் த.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) த.கிருபாகரனும், கௌரவ விருந்தினராக வடமாகாண திறை சேரி பிரதம கணக்காளர் வே.கலைச்செல்வனும் கலந்து கொள்வர். (ற-9)

## கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையை சந்தித்துப் பேசினார் கனேடிய தூதுவர்



மன்னார், செப்.23
இலங்கைக்கான கனேடிய தூதுவர் செல் வைட்னி , மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் அருட்கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆகியோருக்கு இடையில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் நடைபெற்றது.

சமகால அரசியல் நிலமைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் சென்ற இலங்கைக்கான கனேடியத் தூதுவர் செல் வைட்னிக் மன்னார் ஆயர் இல்லத்துக்குச் சென்று மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் அருட் கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையினை சந்தித்து உரையாடினார். மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் அடிகளார், ஆயரின் செயலாளர் அருட்தந்தை முரளிதரன் அடிகளார் ஆகியோரும் அதில் கலந்து கொண்டனர்.

கனேடிய அரசால் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சகல விதமான உதவித் திட்டங்களுக்கும் மன்னார் ஆயர் இல்லம் சார்பான நன்றிகள் தெரிவிக்கப்பட்டது. சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது.

உலக கனேடிய பல்கலைக் கழக சேவை நிறுவனத்தால் முகாமைத்துவ பயிற்சியை பூர்த்தி செய்த, மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் - பெண்கள் 30 பேருக்கு புலமைப் பரிசில்கள் கனேடியத் தூதுவரால் வழங்கப்பட்டன. (ற-5,56)

## வவு. மருத்துவமனை மருத்துவர் மீது அரச ஊழியர் தாக்குவதற்கு முயற்சி

வவுனியா, செப்.23
வவுனியா பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு பொறுப்பு மருத்துவர் மீது நேற்றுக்காலை அங்கு பணியாற்றும் அரச ஊழியர் ஒருவர் தாக்குதல் நடத்த முயற்சித்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா பொது வைத்தியசாலையின் வெளிநோயளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்கு, மாவட்டச் செயலகத்தில் சாரதியாக பணியாற்றும் சகோதர இனத்தவர் அரச ஊழியர்களுக்காக ஒதுக்கப்பட்ட சிகிச்சை நிலையத்தில் காத்திருந்துள்ளார். வெளிநோயாளர் பிரிவில் மருத்துவர், நோயாளர் ஒருவருக்கு சிகிச்சையளித்துக்கொண்டிருந்துள்ளார்.

சாரதியாகப் பணியாற்றும் நபர், தான் மாவட்டச் செயலக ஊழியர் எனவும், தனக்கு உடனடியாக சிகிச்சையளிக்குமாறும் மருத்துவரிடம் கேட்டுள்ளார். கடமையிலிருந்த மருத்துவர், நோயாளர் ஒருவருக்கு சிகிச்சையளித்துக் கொண்டிருப்பதைத் தெரிவித்ததுடன் அவரது இலக்கம் வந்ததும் உள்ளே வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

இதை ஏற்காத சாரதிக்கும், மருத்துவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. மருத்துவரைத் தாக்க சாரதி முயற்சித்தார் என்றும் இதன் போது அங்கு கடமையிலிருந்த தாதிய ஊழியர் அவரைத் தடுத்தார் என்றும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வைத்தியசாலைப் பணிப்பாளருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. சிறிது நேரத்தில், மாவட்டச் செயலக ஊழியர் வவுனியா மாவட்டச் செயலருடன் வைத்தியசாலைக்கு வந்தார்.

வைத்தியசாலைப் பணிப்பாளரால், மாவட்டச் செயலருக்கு நிலைமை எடுத்துக்கூறப்பட்டதைத் தொடர்ந்து முரண்பாடு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது என்று தெரிவிக்கபப்பட்டது. (ற-5)

## 754 வழித்தட பஸ் சேவையை மீள ஆரம்பிக்க கோரிக்கை

தென்மராட்சி, செப்.23
போக்குவரத்துச் சேவையை மீள ஆரம்பிக்குமாறு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பல தடவைகள் வலியுறுத்தியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்படும் கோரிக்கையையாவது கவனத்தில் எடுத்து போக்குவரத்துச் சேவையை மீள ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

சாவகச்சேரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து வரணி மந்துவில் ஊடாக நடத்தப்பட்டு வந்த 754 மார்க்க பஸ் சேவை நீண்ட காலமாக இடம்பெறவில்லை. பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று பல தடவைகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் முறைப்பாடு செய்தபோதிலும் இதுவரை அந்தச் சேவை நடத்தப்படவில்லை. பருத்தித்துறை பஸ் சாலையில் இது தொடர்பில் முறையிட்டால் சேவையில் வருமானம் போதாது எனத் தெரிவிக்கின்றனர்.

முன்னர் இந்தப் பஸ் சேவை பருத்தித்துறை வரணி மந்துவில் வேம்பிராய் கனகன்புளியடி நுணாவில் சந்தி ஊடாகச் சாவகச்சேரி சென்றடைந்து மீண்டும் அதே மார்க்கமாக பருத்தித்துறை செல்லும். இந்தப் பகுதிகளிலுள்ள மக்கள், மாணவர்கள், விவசாயிகள், வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் போன்றோர் பயன்பெற்று வந்தனர். மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு, மந்துவில் வடக்கு, வேம்பிராய், மீசாலை வடக்கு போன்ற கிராம அலுவலர் பிரிவகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் சாவகச்சேரியில் உள்ள கல்லூரிகளில் கல்வி கற்று வருகின்றனர். இந்த மாணவர்கள் தினமும் சைக்கிள்களிலும், நடந்தும் மீசாலை புத்தூர் சந்திக்குச் சென்று அங்கிருந்து தமது பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை இந்தப் பாதை ஊடாகவே சாவகச்சேரி சந்தைக்குக் கொண்டு செல்கின்றனர். இவர்களும் சிரமங்களின் மத்தியிலேயே செல்ல வேண்டியுள்ளது.

இந்தச் சேவையை வரணி, மந்துவில், வேம்பிராய், மீசாலை வடக்கு டச்சு வீதி ஊடாக நடத்தினால் பெருமளவானோர் பயன் பெறக்கூடியதாக இருக்கும். சாவகச்சேரி வைத்தியசாலைக்குச் செல்லும் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த நோயாளர்களும் பயன்பெறக் கூடியதாக இருக்கும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. (ற-5,9)

## உள்ளூராட்சி மாதத்தை முன்னிட்டு வரி அறவீட்டு நடமாடும் சேவைகள்

சாவகச்சேரி, செப்.23
சாவகச்சேரி நகரசபை அடுத்த மாதம் நடத்தவுள்ள உள்ளூராட்சி மாத நிகழ்வுகளின் ஓர் அங்கமாக சபையின் வருமான அதிகரிப்பு செயற்றிட்டத்தின் கீழ் சபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களிலும் வரி அறவீட்டு நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

உள்ளூராட்சி சேவைகள் மாதமான ஒக்ரோபர் மாதத்தில் பிரதி திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் வரி அறவீட்டு நடமாடும் சேவை வட்டார ரீதியில் நடத்தப்படவுள்ளது.

உள்ளூராட்சி மாதத்தை முன்னிட்டு ஆயுள்வேத மூலிகைக் கண்காட்சியை சாவகச்சேரி பொதுச் சந்தையில் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மனித வாழ்வுக்கு ஆயுள்வேத மூலிகைகளின் பயன்பாடு என்னும் பொருளில் இந்த மூலிகைக் கண்காட்சி நடத்தப்படவுள் ளது.

உள்ளூராட்சி மாதத்தில் வாசிப்பை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி, நுணாவில், மீசாலை பொது நூலகங்களில் நூல்களின் கண்காட்சியும் நடத்தப்படவுள்ளது. உள்ளூராட்சி மாதத்தில் வரியிறுப்பாளர்கள் உள்ளூராட்சி மன்றங்களில் பெறக்கூடிய அதி உச்ச பயன்பாடுகள் தொடர்பான கருத்தரங்குகளும் நடத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப் பட்டது. (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக நிலையங்களை மூடுமாறு எவரும் அழுத்தம் கொடுக்கக் கூடாது

## வலி. தெற்கு வர்த்தக சம்மேளனம் தெரிவிப்பு


யாழ்ப்பாணம், செப்.23
வர்த்தக நிலையங்கள் மூடப்பட வேண்டும் என்று எவரும் வர்த்தகர்களுக்கு அழுத்தம் கொடுக்கக் கூடாது.
இவ்வாறு வலி.தெற்கு வர்த்தக சம்மேளனம் தெரிவித்தது.
குறித்த சம்மேளனம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
தமிழ் மக்கள் தமது அடக்கப்பட்ட – நசுக்கப்பட்ட – வாழ்வுரிமைக்காக பன்னாட்டுச் சமூகத்துக்கு ஓங்கிக் குரல் கொடுப்பதற்காக அன்று பொங்கு தமிழை நடத்தினார்கள். அந்தப் பொங்கு தமிழில், தமிழனின் செங்குருதி வியர்வை ஆறாகப் பாய்ந்தது. உண்மை உணர்வு வெளிக்கொணரப்பட்டது. தரணியெங்கும் அதன் ஒலி வியாபித்து பன்னாட்டுச் சமூகத்தின் செவிகளில் ஓங்கி அறைந்தது. ஒவ்வொரு தமிழ் மகனும் உண்மை உணர்வுடனேயே பொங்கு தமிழில் பங்குகொண்டான். தற்போது நடைபெறவுள்ள ஊர்வலம் அதனைக் கொச்சைப் படுத்துவதாக அமைந்து விடக்கூடாது.
அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்க வேண்டும், வடக்கில் அமைக்கப்படுகின்ற விகாரைகள் அகற்றப்பட வேண்டும், மக்கள் தமது சொந்த நிலங்களுக்குச் செல்ல வேண்டும் போன்ற கோரிக்கைகள் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான். அவை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்துக் கிடையாது. தமிழ் மக்கள் தாங்களாக உணர்வெழுச்சியுடன் மேற்கொண்ட பொங்கு தமிழைத் தமது அரசியல் இருப்புக்காகக் கொச்சைப்படுத்துவதை தமிழுணர்வுள்ள தன்மானத் தமிழர்கள் எவரும் ஏற்கார்.
வர்த்தக நிலையங்களை மூடப்பட வேண்டும் என்று எவரும் வர்த்தகர்களைத் திணிக்கக் கூடாது. கடந்த காலங்களில் சர்வாதிகார ஆட்சியாளர்கள் வர்த்தக நிலையங்களில் இலங்கையின் சுதந்திர தினத்துக்குக் கடைகளுக்கு முன்னால் தேசியக் கொடி கட்டும்படி திணித்தார்கள். கட்டாதவர்களைத் தாக்கவும் செய்தார்கள். அரசுடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக் குழு தம்மால் வெளியிடப்படுகின்ற பத்திரிகைகளை சகல வர்த்தகர்களுக்கும் திணித்து விற்றார்கள். வர்த்தகர்களும் பயத்தின் காரணமாக அத்தனைக்கும் அடிபணிந்து செயற்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை காணப்பட்டது.
தற்போதுதான் வர்த்தகர்கள் ஓரளவுக்காவது மிகவும் சுதந்திரமாகத் தமது தொழில்களைச் செய்கின்ற ஏது நிலைமை காணப்படுகின்றது. அவர்களைத் தமது அரசியல் சுயலாபங்களுக்காக – தாம் ஆற்றுகின்றவற்றுக்கெல்லாம் – தலையசைக்க வேண்டும் என்று எவரும் கருதக் கூடாது. மக்களின் நாளாந்த இயல்பு நிலைக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் எவரும் செயற்படக்கூடாது. அவர்கள் உண்மை உணர்வுடன் வர்த்தக நிலையங்களை வேண்டுமாயின் மூடலாம். அது தப்பில்லை. அவர்களை மிரட்டி வர்த்தக நிலையங்களை மூட வைப்பதை நாம் என்றைக்கும் ஏற்கமாட்டோம் – என்றுள்ளது. (ற-5)

## ஒத்திகை பயிற்சி

யாழ்ப்பாணம், செப்.23
இடர் முகாமைத்துவ பிரிவால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு ஒத்திகைப் பயிற்சி செயற்பாடுகள் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வலளாய்ப் பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு நடத்தப்படவுள்ளன.
இந்த நிகழ்வு தொடர்பில் பொது மக்கள் அச்சமடையத் தேவையில்லை. இது ஓர் ஒத்திகைச் செயற்பாடு என்பதையும் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கிறார்கள். (ற)

## யாழ். பல்கலை. அடிதடி குற்றப்பத்திரத்தை முன்வைக்குமாறு நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம் , செப். 23
சிங்கள மற்றும் தமிழ் மாணவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுப் பத்திரங்களை ஒரே நேரத்தில் தாக்கல் செய்யுமாறு யாழ்.நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.
யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் இடம்பெற்ற மோதல் தொடர்பான வழக்கில் சரணடைந்த சிங்கள மாணவர்கள் 4 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கு யாழ்.நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. இருதரப்பு மாணவர்களும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். அதன்போதே மன்று இவ்வாறு உத்தரவிட்டது. இந்த வழக்கு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (வ-4)



வவுனியாவிலுள்ள பாடசாலை ஒன்றில் இருந்து பிஸ்ரல் அங்கி ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். பாடசாலை வளவில் புதிய கட்டடம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்றன. அங்கு பணிபுரிந்த தொழிலாளர்கள் நிலத்தை தோண்டியபோது பிஸ்ரல் அங்கி, அலைபேசிக்கான சார்ஜர் என்பன கண்டுபிடிக்கப்பட்டன. இது தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சோமரத்தின விஜயமுனி தலைமையிலான குழு விசாரணையை மேற்கொண்டது. (ற-5)

## யாழ். பண்ணைச் சுற்றுவட்டத்தில் வசதிப்படுத்தும் சேவை நிலையம்

யாழ்ப்பாணம், செப்.23
யாழ். பண்ணைச் சுற்று வட்டப்பகுதியில் பொது மக்களுக்கான வசதிப்படுத்தும் சேவை நிலையம் ஒன்றை மாநகராட்சி மன்றம் அமைக்கவுள்ளது.
அதற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
பண்ணை சுற்றுவட்டத்தில் உள்ள பொழுதுபோக்கு பூங்கா பகுதியில் இந்த சேவை நிலையம் அமைக்கப்படவுள்ளது. சுமார் 11 மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் அது அமைக்கப்படும். உணவகம், தேநீர்ச் சாலைகள், மலசலகூட வசதிகள், குளியலறை என்பவற்றுடன் இந்தச் சேவை நிலையம் அமைக்கப்படவுள்ளது.
பண்ணைச் சுற்று வட்டப் பூங்காவுக்கு வருகை தரும் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதி கருதி இந்த வசதிப்படுத்தும் நிலையம் அமைக்கப்படவுள்ளது என்று மாநகர அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-17)

# வடக்கு மாகாண சபை நிர்வாகத்தில் ஆளுநர் தலையிடுவது முறையற்றது

## அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் சுட்டிக்காட்டு

அம்பாறை, செப்.23
வடமாகாண சபை மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபையாகும். வடமாகாண சபை நிர்வாகத்தில் ஆளுநரின் தலையீடுகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும். இத்தகைய தலையீடுகள் தொடருமானால் அதனை ஆட்சேபித்து நாமும் போராட வேண்டிய நிலைமை உருவாகும்.
இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவரும், தொழிற்சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.
அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர்களுக்கான விசேட கூட்டம் யாழ்.நல்லூர் செட்டியார் தெருவிலுள்ள சங்கத்தின் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் இணைப்பாளர் ஆர்.ராகவனின் அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது.
கூட்ட ஆரம்பத்தில் தியாகதீபம் திலீபன் மற்றும் மரணித்தவர்களுக்கான இரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.
அதனைத் தொடர்ந்து சங்கத் தலைவர் லோகநாதன் தெரிவித்ததாவது:
மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட வடமாகாணசபை நிர்வாகத்தில் வடமாகாண ஆளுநரின் தலையீட்டையோ, அவரது கெடுபிடிகளையோ ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.
மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட மாகாணசபையின் சிறந்த செயற்பாடுகளுக்கு ஊக்கமளிப்பவராகவும், ஒத்துழைப்பு நல்குபவராகவுமே ஆளுநர் திகழவேண்டும்.
அதை விட்டும் அதிகார மமதையுடன் மாகாணசபை நிர்வாகத்தில் தலையீடு செய்வதுடன், முட்டுக்கட்டைபோட முனைவதை ஒருபோதும் ஏற்க முடியாது.
இத்தகைய செயற்பாடுகள் மாகாணசபை நிர்வாகத்தை மட்டுமன்றி சபையின் மக்கள் சேவைக்கும் பாதிப்பாக அமையும்.
இந்த நிலைமை மேலும் தொடருமானால் மக்களுக்காக நாமும் அகிம்சை வழியில் போராட்டங்களைத் தொடரவேண்டிய நிலைமை உருவாகும்.

### அதிகாரிகள்

மகாண சபையின் மக்கள் சேவையை உதாசீனம் செய்யும் வகையில் செயற்படும் அதிகாரிகளை இனம் கண்டு முதலமைச்சர் உரிய நடவடிக்கையெடுப்பதுடன், பதவிநீக்கம் செய்யவும் தயங்கக்கூடாது. அதேபோல் ஊழல் செய்யும் அதிகாரிகள் தொடர்பிலும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### மாற்றம் வேண்டும்

வடமாகாண சபை அமைச்சுக்களில் மோசடி, துஷ்பிரயோகங்கள் நடந்திருக்கலாம் என்றும் அதை முதல்வர் குழு அமைத்து விசாரணை செய்ய இணக்கம் காணப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்த விடயத்தில் உண்மை நிலைகண்டறியப்படுவதுடன் அமைச்சரவை மாற்றம் ஒன்றைச் செய்யவும் முதலமைச்சர் முன்வரவேண்டும்.
மாகாணசபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், சி.வீ.கே.சிவஞானம் போன்ற அனுபவமிக்கவர்களுக்கும் பொறுப்பு வாய்ந்த அமைச்சுக்கள் வழங்கப்படுவது சிறப்பாக அமையும்.

### முஸ்லிம்கள்

வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்களின் மீள் குடியேற்ற விடயங்களில், வடமாகாண சபை அக்கறையுடன் செயற்படுகின்றது என்று–முஸ்லிம்கள் மத்தியில் கருத்து நிலவுகின்றது. இந்த முஸ்லிம் மக்கள் வடக்கில் பூர்வீகமாக வாழ்ந்த நம் சகோதர மக்களாவர். இவர்களது மீள்குடியேற்ற விடயத்தில் வடமாகாண முதலமைச்சர் மாற்றாந்தாய் மனப்பாங்குடன் செயற்படக்கூடாது.
அவர்களது மீள் குடியேற்றத்தைத் துரிதப்படுத்தும் விடயத்தில் மாகாணசபையும், முதலமைச்சரும் முழுமனதுடன் செயற்பட முன்வர வேண்டும்.
இன்றைய முக்கியமான கால கட்டத்தில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மேலோங்குவதற்கு இத்தகைய செயற்பாடுகள் வழிவகுக்கும்.
இந்த மீள்குடியேற்ற விடயத்தில் முதலமைச்சரினதும், வடக்குத் தமிழ் மக்களின் அரசியல் தலைமைகளதும் முன்மாதிரியான நடவடிக்கைகள் எடுத்துக்காட்டாக அமைய வேண்டும்.

### அதிகாரப் பகிர்வு

இன்றைய சூழலில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் நாம் எதிர்பார்த்து நிற்கும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் முஸ்லிம் மக்கள் கொண்டுள்ள அச்ச நிலைமை தீர்க்கப்பட வேண்டும்.
முஸ்லிம் மக்களின் சந்தேகங்கள் தீர்க்கப்பட தமிழ்த்தலைவர்கள், முஸ்லிம்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற முஸ்லிம் காங்கிரஸ் தலைமைகளுடன் பேசி புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றையும் செய்து கொள்ள வேண்டும்– என்றார்.
சங்க உபதலைவர் ஏ.அன்ரனி, வவுனியா–வன்னி இணைப்பாளர் ஏ.புண்ணியமூர்த்தி, முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் எஸ்.சண்முகராஜா, யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.சசிகரன், ஆலோசகர் எஸ்.ஜெயசங்கர், யாழ்.மாவட்ட செயலாளர் எஸ்.சிவசண்முகராசா, யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் இணைப்பாளர் ஆர்.ராகவன், மேலதிக யாழ்.மாவட்ட இணைப்பாளர் வீ.பொன்னம்பலம் உட்பட சங்க முக்கியஸ்தர்கள் பலரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ற-30)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் தேசிய கூட்டமைப்பு, வட மாகாண சபை எதற்கு எதிராக ஊர்வலத்தில் முழக்கம்?

## ஈ.பி.டி.பி. எழுப்புகிறது கேள்வி

யாழ்ப்பாணம், செப்.23

மக்கள் பேரவை ஊர்வலத்தில் எழுப்பப்படும் கோசம், வடக்கு மாகாண சபைக்கு எதிராகவா அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவா என்று கேள்வி எழுப்பியுள்ள ஈ.பி.டி.பி, இந்தக் கேள்விகளுக்கு ஊர்வலத்தில் விடை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு தமது ஆதரவாளர்கள் ஊர்வலத்துக்கு அணிதிரண்டு வர வேண்டும் என்று அறைகூவல் விடுத்துள்ளது.

தமிழ் மக்கள் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஊர்வலத்துக்கு ஆதரவு தெரிவித்து ஈ.பி.டி.பி. விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

எமக்கென்று ஓர் இலட்சியக் கனவுண்டு. அது தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகளை வென்றெடுப்பதாகும். அதற்காக நாம் குரல் எழுப்ப வேண்டிய தருணங்களில் குரல் எழுப்பியும், செயலாற்ற வேண்டிய சூழலில் செயலாற்றியும் அந்தந்தச் சூழலுக்கு ஏற்றவாறு இடையறாது உழைத்து வந்திருக்கின்றோம்.

நாம் வகுத்துக் கொண்ட அரசியல் வழிமுறையின் ஊடாக, எம்து அரசியல் பலத்திற்கு ஏற்றவாறு மக்களின் பிரச்சினைகள் பலவற்றிற்குத் தீர்வு காண்பதிலும் வெற்றி கண்டிருக்கிறோம். ஆனாலும் எமது மக்களின் ஆழ்மனங்களில் இருந்து எழுந்து வரும் உணர்வுகளை எமது இலட்சியக் கனவுகளாக ஏற்றிருக்கும் நாம் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்காத வரை ஒருபோதும் ஓயப்போவதில்லை.

தமிழ் தேசிய இனத்தின் உணர்வுகள் எல்லாமே ஒன்றுதான். எமது மக்கள் எழுப்பும் நீதியான உரிமைக் குரலும் ஒன்றுதான். ஆனாலும் எமது மக்கள் ஆதரிக்கும் கட்சிகளும், அவற்றின் அணுகுமுறைகளும் வெவ்வேறானவை. எரியும் பிரச்சினைகள் மீது நீரூற்றி நெருப்பை நிரந்தரமாக அணைக்கவே நாம் விரும்புகிறோம். மாறாக எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றி அதை பூதாகரமாக வளர்ப்பவர்கள் நாமல்லர்.

சக தமிழ் அரசியல் கட்சிகளின் வழிமுறைகளிலிருந்து நாம் எமது யதார்த்த அரசியல் வழிமுறையில் வேறுபட்டு நின்றாலும், எமது மக்களின் தேசிய அரசியல் உணர்வுகளின் நலன்களில் நின்று பொது உடன்பாட்டுத்தளத்தில் இணைந்து செயலாற்ற நாம் ஒருபோதும் பின்னிற்கப் போவதில்லை.

உணர்வுகளால் ஒன்றுபட்ட எமது மக்களை அரசியல் முரண்பாடுகளாலும், வெறும் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளாலும் பிரித்து வைத்திருப்பதில் நியாயமில்லை. தேர்தலுக்காக மட்டுமன்றி எமது மக்களின் தேசிய அபிலாசைகளை வென்றெடுக்கும் நோக்கிலும் தமிழ்க்கட்சிகள் ஒருமித்துக் குரல் கொடுப்பதையே நாம் விரும்புகிறோம்.

கடந்தகால வரலாற்று அனுபவங்கள் அர்த்தமுள்ள படிப்பினைகளை எமது மக்களுக்கு தந்திருக்கின்றன. அழிவுகளில் இருந்து விடுபட்டு அரசியல் உரிமை பெற்று மீண்டெழும் அரிய வாய்ப்புகளை சக தமிழ்க்கட்சித் தலைமைகள் பலவும் கடந்த காலங்களில் தவறவிட்டிருக்கின்றன.

இன்றும் அவ்வாறானதொரு அரசியல் சூழல் கனிந்து வந்திருக்கிறது. இதனைப் பயன்படுத்தி எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கும் வாய்ப்பு புதிய அரசில், அரசியல் பலத்தோடு இணைந்திருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிடமே உண்டு. ஆனாலும் எமது மக்களின் பிரச்சினைகள் எதுவும் இன்னமும் தீரவில்லை.

மாகாண சபைகளுக்கு கிடைத்திருக்கும் அதிகாரங்கள் எமது மக்களுக்கான முழுமையான தீர்வு அல்ல. ஆனாலும் கிடைத்த அதிகாரங்களைக்கூடப் பயன்படுத்த விரும்பாமல், கொழும்பு அரசினால் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிதி கூட மக்களுக்கோ, அபிவிருத்திக்கோ உரிய முறையில் பயன்படுத்தப்படாமல் திறைசேரிக்கு திரும்பி போகும் நிலையில் வட மாகாணசபை தூங்கிக் கிடக்கின்றது. இந்த நிலையில் மக்கள் பேரவையின் ஊர்வலத்தில் எழுப்பப்படும் முழக்கங்கள் யாரை நோக்கியது என்று எமது மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

கொழும்பு அரசை நோக்கியா? அல்லது அரசியல் பலத்தோடு புதிய அரசுக்கு ஆதரவளித்துக் கொண்டு எதையும் சாதிக்க விரும்பாமல் இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பையா? அல்லது தமிழரசுக் கட்சியை நோக்கியா? அல்லது கிடைத்த அதிகாரங்களையே பயன்படுத்தத் தவறி வரும் வட மாகாண சபையை நோக்கியா? இந்த கேள்விகளுக்கு ஊர்வலத்தின் ஊடாக விடை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு எமது மக்களை அணிதிரண்டு வருமாறு நாம் அறைகூவல் விடுக்கின்றோம். எமது மக்களுக்கு சரியான திசை வழியைக் காட்டிட, சரியான திசை வழி நோக்கி நடக்கும் பாதை எதுவென வகுத்திட, ஊர்வலத்தில் அலை கடலென அணிதிரள்வோம்.

கடந்தகால அனுபவங்களில் இருந்து கற்றுக்கொண்டு எமது மக்களை வழி நடத்திச் செல்லும் புதியதொரு வரலாற்றை படைக்கும் முன்னெடுப்பாக இந்த ஊர்வலத்தை வெற்றிபெறச் செய்வோம். எமது உரிமைப் போராட்டத்திற்கு பலம் சேர்க்க மக்களே அணிதிரண்டு வாருங்கள் - என்றுள்ளது. (ற-5)

## பேரணிக்கு வருவோர் சிறிதர் தியேட்டர் முன்பாக கூடுங்கள்

*- டக்ளஸ் வேண்டுகோள்*

யாழ்ப்பாணம், செப். 23

தமிழ் மக்கள் பேரவையின் ஊர்வலத்தில் பங்கெடுக்கும், ஈ.பி.டி.பி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் அனைவரையும் நாளை சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு ஸ்ரான்லி வீதியிலுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமைக் காரியாலத்தில் ஒன்று கூடுமாறு அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேட்டுள்ளார்.

இது தொடர்பில் நேற்று அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (ற-5)

## உடையார்கட்டில் மிருக வைத்திய சேவை ஞாயிறன்று

முல்லைத்தீவு, செப்.23

முல்லைத்தீவு மாவட்ட கால்நடை சுகாதாரத் திணைக் களத்தின் ஏற்பாட்டில் மாவட்டக் கால்நடை வளர்ப்பாளர் களின் நலன் கருதி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் மிருக வைத்திய சேவை ஒன்று நடத் தப்படவுள்ளது.

கால் நடை வளர்ப்போர் தங்கள் கால் நடைகள் தொடர்பான பிரச்சினைகளுக்குச் சரியான ஆலோசனைகளையும் , மிருக வைத்திய சிகிச்சை, நோய்களுக்கான சிகிச்சைகளும் ஆலோசனைகளும், செல்லப் பிராணிகளுக்கான கருத்தடை, சத்திர சிகிச்சைகள், பண்ணைப் பதிவுகள், இலவச மருந்துகள், கனியுப்புக்கள், புற்துண்டங்கள் என்பவற்றை பெறலாம் - என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி7,102)

# ஒற்றுமையை உலகுக்குக் காட்ட முதலமைச்சர் அணி திரள அழைப்பு

யாழ்ப்பாணம், செப் 23

தமிழ் மக்களுக்கு உரித்தான கூட்டாட்சி அரசமைப்புத் தேவையை வலியுறுத்தவும், தமிழ் மக்களின் ஒற்றுமையை உலகுக்கு காட்டவும், தமிழ் மக்கள் பேரவையின் ஊர்வலத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் தெரிவித்துள்ளதாவது:

அரசமைப்பை எமக்குச் சாதகமாகத் தருவோம் என்று அறிவித்திருக்கும் அரசு அதே நேரத்தில் வடக்கு - கிழக்கில் எமது இருப்பையும் தனித்துவத்தையும் பாதிக்கும் வண்ணம் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. இது அரசின் உள் நோக்கம் பற்றி சந்தேகங்களை எழுப்புகின்றது.

நாட்டில் எங்கும் புத்தர் சிலை எழுப்ப முடியும், அது எமது சுதந்திரம் என்று சில புத்த பிக்குமார் கூறித் திரிகின்றார்கள். நடை முறையிலும் சிலைகளையும் விகாரைகளையும் எழுப்பி வருகின்றார்கள்.

நாடு முழுவதும் பரந்து வாழ்ந்த தமிழ்ப் பேசும் மக்களைத் தமது வாழ்விடங்களில் இருந்து 1958, 1961,1974, 1977, 1983ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கலவரங்களின் ஊடாகவும் வேறு விதங்களிலும் இடம்பெயர வைத்து அவர்களின் வசிப்பிடங்களையும், ஆலயங்களையும் கைவிட்டுச் செல்ல நடவடிக்கைகள் எடுத்து, முக்கிய நகரங்களை விட மற்ற இடங்களில் தமிழ்ப் பேசும் மக்களின் பரம்பலை ஏறத்தாழ இல்லாமல் ஆக்கி, போர்க் காலத்தில் பல விதமான கொடூரங்களில் ஈடுபட்டு போர்க் குற்றங்களில் ஈடுபட்டு எமது மக்களுள் பலரை நிர்மூலமாக்கி பலரை நாட்டை விட்டு ஓடிப் போகச் செய்து, வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் போர் முடிந்து 7 ஆண்டுகள் முடிந்த பின்னரும் தொடர்ந்திருந்து எமது வாழ்விடங்களை விட்டகலாது வாழ்வாதாரங்களைச் சுரண்டுவதும், வடக்கு கிழக்கு மாகாண மண்ணை விட்டு, மேலும் மாகாணங்களின் கரையோர இடங்களை விட்டு நீங்காது, நாட்டில் எங்கும் புத்தர் சிலை வைப்பதற்கு சுதந்திரம் இருப்பதாகக் கூறுவது பக்கத்து வீட்டுக்காரன் எமது காணிக்குள் அத்து மீறி வந்து, இது எமது நாடு, நான் எங்கும் இருக்கலாம், எதனையும் கட்டலாம், எவ் வாறாகவும் நடந்து கொள்ளலாம் என்று கூறுவது போல் இருக்கின்றது.

பெரும்பான்மையின் ஊடுருவல் பல விதங்களில் எமது பாரம்பரிய தமிழ்ப் பேசும் இடங்களில் பரவி வருவது கண்டிக்கப்பட வேண்டியதொன்று. தமிழ்ப் பேசும் மக்களின் அடையாளங்களையும் அவர்களின் தனித்துவத்தையும் பேணுவோம், அதற்கான அரசமைப்பினைத் தவறாது தருவோம் என்று உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கூறி வந்தவர்கள் பெரும்பான்மையின் மக்களின் இராணுவத்தினரை வடக்குக் கிழக்கில் தொடர்ந்தும் பரந்து வாழ இடமளிப்பதும் புத்த விகாரைகளை அவர்கள் துணை கொண்டு எழுப்புவதும், நடந்து போன போர்க் குற்றங்களை முறையாக ஆராயாது அவற்றில் இருந்து விடுபட எத்தனிப்பதும், எல்லாவகையான ஏமாற்று வேலைகளைச் செய்யலாம் எனத் திட்டமிட்டு எமது வாழ்விடங்களை ஆக்கிரமித்து எமது இனத்தின், மொழியின், மதங்களின் அடையாளங்களைப் படிப்படியாக அழிக்கும் ஓர் அந்தரங்க செயற்பாட்டின் அங்கமே என்பது கண்கூடு.

உரிமைகளைக் கொடுப்போம் என்று பன்னாட்டுச் சமூகத்துக்கு ஒரு புறம் கூறிவிட்டு மறுபுறத்தில் எமது உரிமைகளைப் பறித் தெடுப்பதைத்தான் 13 ஆவது திருத்தச்சட்டம் வந்த போது அரசு செய்தது. இந்திய அரசிடம் இணக்கம் தெரிவித்தவாறு இலங்கை அரசு 13 ஆவது திருத்தச் சட்டத்தை எமக்கு இயைபாக ஆக்க முன்வரவில்லை. ஒரு கையால் கொடுப்பது போல் கொடுத்து மாகாண சபைகள் சட்டத்தால் மறுகையால் அதிகாரங்களைத் திருப்பி எடுக்கும் காரியத்தில் இறங்கியது.

அதனையே இப்பொழுதும் காண்கின்றோம். தருவது போல் தரணிக்குக் கூறிவிட்டு எமது தனித்துவத்தைத் தவிடு பொடியாக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கின்றார்கள் என்று தெரிகின்றது. உடனேயே சட்டபூர்வமற்ற சகல பௌத்த விகாரைகளும் புத்தர் சிலைகளும் பௌத்த கோயில்களும் எமது மண்ணில் இருந்து அகற்றப்பட வேண்டும். சட்டப்படி உரியவாறு அனுமதி கேட்டு எமது மண்ணில் எந்த மதத் தலத்தையும் கட்டுவதை நாம் எதிர்க்கவில்லை. பலாத்காரமாக இவற்றைச் செய்வதையே நாம் கண்டிக்கின்றோம். இவ்வாறான பௌத்த மயமாக்கல் திட்டமிட்ட இன, மொழி, மதப் பரம்பலைப் பாதிக்கும் செயல்களே என்பது எமது ஏகோபித்த முடிவு.

அரசமைப்பை அரசு கொண்டு வர இருக்கின்றதே என்பதற்காக நாம் மௌனம் காத்தோமானால் புதிய அரசமைப்பிலும் நாம் ஏமாற்றப்படுவோம். நாம் வாழும் வாழ்விடங்களிலும் ஏமாற்றப்படுவோம். எனவே தான் பேரவையின் ஊர்வலம் ஏற்றதொரு உபாயமாக எமக்குப்பட்டுள்ளது. வன்முறைநாடாமல், வசை பாடாமல், வஞ்சிக்கப்பட்டு வரும் எமது அண்மைய வரலாற்றை உலகறியச் செய் வதற்கே இந்தப் பேரணி. கட்சி பேதமின்றி, ஆண் பெண் வித்தியாசமின்றி, வயது பேதமின்றி, பிரதேச பேதங்கள் இன்றி, வர்க்க பேதம் இன்றி, சாதி பேதமின்றி யாவரும் சேர்ந்து பெரும்பான்மையினரால் நடத்து விக்கப்பட்டு வரும் தவறான நடவடிக்கைகளைக் கண்டிப்போம். தமிழ் மக்களுக்கு உரித் தான கூட்டாட்சி அரசமைப்பின் தேவையை வலியுறுத்துவோம். எமது ஒற்றுமையை உலகறியச் செய்வோம் - என்றுள்ளது.

(ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவுடன் மோதியது எதிரணி

## அவன்கார்ட் ஊழல் ஆதாரப் படம் சபையில் வெளியிடப்பட்டதையடுத்து

கொழும்பு, செப். 23
அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அவன்கார்ட் ஊழல் தொடர்பான புகைப்பட ஆதாரமொன்றை நேற்று முன்தினம் சபையில் முன்வைத்த போது கடும் சர்ச்சையும் வாக்குவாதமும் ஏற்பட்டது.
கடந்த ஆட்சிக்கால ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பல்வேறு தகவல்களையும் அமைச்சர் சரத் பொன்சேகா வெளியிட்டமையால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒன்றிணைந்த எதிர்க் கட்சி உறுப்பினர்களுடன் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.
நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொது மனு தாக்கல் வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் , நிலையியற்கட்டளை 23/2 இன்கீழான விசேடக்கூற்று ஆகியவற்றின் பின்னர் சுயாதீன ஆணைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் சம்பளம் கொடுப்பனவுகள் தொடர்பான பிரேரணை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து விவாதமும் ஆரம்பமானது.
இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் சரத் பொன்சேகா மேற்கண்ட விடயங்களை முன் வைத்தார்.
இலஞ்சஊழல்தடுப்பு ஆணைக்குழுவின் தற்போதைய செயற்பாடுகள் பாராட்டத்தக்கன. கடந்த ஆட்சியின்போது எத்தனையோ மேசாடிகள் இடம்பெற்றன. ஊழல்கள் நிறைந்திருந்தன. மிகவும் மோசமான ஆட்சியொன்றே முன்னெடுக்கப்பட்டது. எதிர்த்துப் பேசியவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள் எனத் தனது உரையைக் கடும்தொனியில் பொன் சேகா முன்னெடுத்துக்கொண்டிருந்த போது, சீற்றமடைந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆதரவு அணி உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பியதோடு மட்டுமன்றி, உரத்த தொனியில் எதிர்க்கோசங்களை எழுப்பிக்கொண்டிருந்தனர்.
இதனையடுத்து அமைச்சர் சரத் பொன்சேகா ஆம். காட்டுக்குள் சிங்கம் காலடி எடுத்து வைக்கும்போது அச்சத்தில் குரங்குகள் மரம்விட்டு மரம் தாவும்–கீழே விழும். ஆனால், சிங்கத்தின் முன் அவை வராது. இப்படித்தான் இங்கும் நடக்கிறது"–என்றார்.
இந்தக் கூற்றால் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்த்தன, கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்டவர்கள் ஒழுங்குப் பிரச்சினைகளை அடுத்தடுத்து எழுப்பினார்கள். அவர்கள் எழுந்து நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயரைக் கூறி கருத்து வெளியிடுவது தவறு. ஆகவே அவற்றை ஹன்சாட்டில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபாலவிடம் கோரிக்கை விடுத்தனர்.
இதற்கு பதிலளித்த பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால நிலையியற் கட்டளைக்கு முரணான விடயங்கள் நீக்கப்படும். அமைதியாக இருங்கள்–என்றார்.
தொடர்ந்த பொன்சேகா, நான் பெயர் குறிப்பிட்டு அவர்களைக் குற்றவாளியெனக் கூறவில்லை. இப்படிச் சம்பவம் நடந்துள்ளது என்றுதான் கூறினேன். உண்மைக் காரணிகளை நீக்க வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்தார். பொன்சேகாவுக்குச் சார்பாக ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரலெழுப்பினார்கள்
இதன்போது உரையாற்றிய சரத் பொன் சேகா "கூச்சலிடாதீர்கள். இன்னும் கூறுகின்றேன். இதில் என்ன நடந்திருக்கின்றது எனக் கூறி அவன்கார்ட் விவகாரம் தொடர்பில் புகைப்படமொன்றையும் சபையில் வெளிப்படுத்தினார். இதற்கு முன்னரும் புகைப்பட ஆதாரத்தை வெளியிட்டேன். இதோ தற்போது மீண்டுமொரு படத்தை வெளியிடுகிறேன். இதில் அமைச்சர் ஒருவர் இருக்கின்றார்–என்றார்.
இதனையடுத்துக் கடுமையான கூச்சல் குழப்பங்களை ஒன்றிணைந்த எதிரணியினர் வெளிப்படுத்தினர். இருப்பினும் அதற்கு மத்தியில் சில நிமிடங்கள் உரையாற்றிய பொன்சேகா, தனது உரையை நிறைவு செய்தார். பிரதிச் சபாநாயகர் கடுமையான தொனியில் சபையை கட்டுப் படுத்தினார். (த்)

# தீவிரவாத முறியடிப்பு மாநாடு புதுடில்லியில்

## தெற்காசிய நாடுகளின் புலனாய்வு அமைப்புத் தலைவர்கள் பங்கேற்பு

கொழும்பு, செப். 23
தீவிரவாத முறியடிப்புக்கான பொறிமுறையை உருவாக்குவது தொடர்பாக தெற்காசிய நாடுகளின் புலனாய்வு அமைப்புக்களின் தலைவர்களின் முக்கிய மாநாடு புதுடில்லியில் நேற்று ஆரம்பமாகியது.
சார்க் அமைப்பில் உள்ள இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம், பூட்டான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் புலனாய்வு அமைப்புகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.
எனினும் பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பின் பணிப்பாளர் அப்டாப் சுல்தான், இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை.
இந்தியா– பாகிஸ்தான் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை அடுத்தே, பாகிஸ்தான் தனது புலனாய்வுப் பிரிவு தலைவரை புதுடில்லிக்கு அனுப்புவதில்லை என்று முடிவு செய்துள்ளது.
தீவிரவாத முறியடிப்புத் தொடர்பான பொறிமுறையை உருவாக்குவது குறித்து சார்க் நாடுகளின் புலனாய்வுத் தலைவர்களுக்கிடையில் நடத்தப்படும் இரண்டாவது கூட்டம் இதுவாகும்.
இந்தியாவின் உள்ளகப் புலனாய்வு அமைப்பான ஐ.பியின் பணிப்பாளர் தினேஸ்வர் சர்மா இந்த மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்.
தெற்காசியப் பிராந்தியத்தின் உறுதிப்பாடு, பாதுகாப்பு, பிராந்தியத்தின் வளர்ச்சி ஆகியவற்றுக்குப் பிரதான அச்சுறுத்தலாக மாறியுள்ள தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து, இந்த மாநாட்டில் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளது.
தற்போதுள்ள தீவிரவாத முறியடிப்புப் பொறிமுறைகள், அவற்றின் குறைபாடுகள், குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான பரிந்துரைகளையும் இந்த மாநாட்டில் புலனாய்வுத் துறைகளின் தலைவர்கள் ஆராயவுள்ளனர். (த்)

# ஆணைக்குழுக்களின் சம்பளப் பிரேரணை நிறைவேறியது

கொழும்பு, செப். 23
இலஞ்சஊழல்தடுப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் உட்பட அனைத்துச் சுயாதீன ஆணைக் குழுக்களினதும் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான மாதாந்தச் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்கான பிரேரணை 68 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.
குறித்த பிரேரணைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் புதன்கிழமை விவாதத்துக்குச் சமர்ப்பிப்பித்திருந்தார். இதனையடுத்து மாலையில் குறித்த பிரேரணைகள் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.
இதன்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆதரவணியான ஒன்றிணைந்த எதிரணியினர் சர்ச்சையை ஏற்படுத்தியவாறு வாக்கெடுப்பி லிருந்து வெளியேறியிருந்தனர்.
இதேவேளை,–பிரதான எதிர்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மூன்று உறுப்பினர்களும், ஜே.வி.பி சார்பில் இரண்டு உறுப்பினர்களும் பிரசன்னமாகி ஆதரவை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த்)

# ஹிருணிகா எம்.பிக்கு மேல்நீதிமன்று பிணை

தெமட்டக்கொடை பகுதியில் இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்று தாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரா உள்ளிட்ட 9 பேரைப் பிணையில் செல்ல கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதித்தது.
இந்த விவகாரம் தொடர்பில் 24 குற்றச் சாட்டுக்களின் கீழ் சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பத்மினி என் . ரணவக்க முன்னிலையில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ள நிலையில் அது தொடர்பிலான முதலாவது விசாரணை நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே அவர்களுக்கு இவ்வாறு பிணை வழங்கப்பட்டது.
தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் இந்த 9 பேரும் விடுவிக்கப்பட்டதுடன், அவர்களின் வெளிநாட்டுப் பயணம் தடை செய்யப்பட்டது. தெமட்டகொடப் பகுதியில் வைத்து ஹிருணிகா பிரேமச்சந்திராவுக்குச் சொந்தமான டிபென்டர் வாகனத்தில், அமில பிரியங்கர எனும் இளைஞர் கடத்திச் செல்லப்பட்டு அச்சுறுத்தப்பட்டதாகவும், சட்ட விரோதமாகச் சிறைப்படுத்தி வைக்கப்பட்டிருந்தாகவும் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. 24 குற்றச்சாட்டுக்கள் ஹிருணிகா உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு எதிராகச் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மன்றில் ஹிருணிகா உள்ளிட்ட 9 பிரதிவாதிகள் சார்பிலும் மூத்த சட்டத்தரணி அஜித் பத்திரண உள்ளிட்ட குழுவினர் முன்னிலையாகினர்.
தனது சேவைப் பெறுநர்களான பிரதிவாதிகளுக்கு நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ள நிலையில், அவர் களால் இதுவரை சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படவில்லை எனவும், அதனால் மேல் நீதிமன்றமும் பிணை வழங்கவேண்டும் எனவும் மூத்த சட்டத்தரணி அஜித் பத்திரண கோரினார்.
இதனையடுத்து இது குறித்த வழக்கை எதிர்வரும் ஜனவரி 10 ஆம், 11 ஆம் திகதிகளில் விசாரணை செய்ய நீதிமன்று உத்தரவிட்டது. (த்)

# தமிழர் சார்புச் செய்தி வெளியிட்ட பி.பி.சி. செய்தியாளர் நிரபராதி

## பிரிட்டன் நடுவர் மன்றம் தீர்ப்பு

லண்டன், செப்.23
இலங்கை தமிழர்களின் நிலமை தொடர்பாக அவர்களுக்கு ஆதரவாக செய்தி வெளியிட்டார் என்ற குற்றச் சாட்டில் பதவி விலக்கப்பட்டிருந்த பி.பி.சி.சிங்கள சேவையின் பத்திரிகையாளர் ஒருவர் மேன் முறையீடு செய்து வெற்றி பெற்றிருப்பது பற்றிய செய்தியொன்று வெளியாகியுள்ளது.
இலங்கையில் பிறந்தவரான சந்தன பண்டார என்பவர், கடந்த 2015 ஓகஸ்ட் 15ஆம் திகதி பி.பி.சி.சிங்கள சேவையின் இணையத்தில் இளவரசர் சாள்ஸின் பிறந்தநாள் தொடர்பாக செய்தியொன்றை வெளியிடாமல் விட்டார் என்பதின் பேரில், அந்த நிறுவனம் பதவி நீக்கம் செய்திருந்தது.
இதை எதிர்த்து மேல் முறையீடு செய்த பண்டார அன்றைய தினம் இலங்கையில் கறுப்பு ஜூலை (இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம் இடம் பெற்று ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்ட நாள்) என்பதால் அரச குடும்ப உறுப் பினர் ஒருவரின் பிறந்த நாள் செய்தியை வெளியிடாமல் தவிர்த்ததாக வாதிட்டிருந்தார். இந்த வழக்கை விசாரித்த நடுவர் மன்றம் இளவரசர் பிறந்த தினம் தொடர்பான விடயத்தில் பண்டாரவுக்கு இறுதியான எச்சரிக்கை விடுத்ததன் மூலம் பி.பி.சி. நிர்வாகிகள் தவறிழைத்துள்ளார்கள். முன்னதாக 18 ஆண்டு காலம் அவர் நன்னடத்தையுடன் பணியாற்றியிருப்பதை அவர்கள் கவனத்தில் எடுக்காமையை நடுவர்கள் குறை கூறினார்கள்.
சந்தன பண்டாரவுக்குச் சாதகமாக சாட்சியமளித்தவர்களில் இலங்கைப் போரில் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டமை தொடர்பாக நோ பயர் ஸோன் ஆவணப் படம் தயாரித்தவரான கலம் மக்ரேயும் அடங்குவார்.
மக்ரே இந்தத் தீர்ப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்தபோது, பண்டார குற்றமற்றவர் என்று அறிவிக் கப்பட்டிருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இது ஒரு வெட்கப் படும்படியான செயற்பாடு. பி.பி.சி. சிங்கள பிரிவு அரசு சார்ந்த கொள்கையைக் கடைப்பிடிப்பது இதன்மூலம் தெரிகின்றது. பண்டார உண்மையை எடுத்துக்கூற முயன்று அதை நிலைநாட்டியுள்ளார்– என்றார்.
பண்டார தமது வாதத்தில் தமிழர்கள் இலங்கையில் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஆட்சியாளர்களால் கொடுமைகளுக்குள்ளாகி வருகிறார்கள் என்று கூறியிருந்தார். (த-ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகம் கண்டுகொண்ட தமிழீழ தாய் தேசத்தின் தியாக மானுடம்

லோகதயாளன்

எங்கும் சோகத்தின் ஆரவாரம். அதன்வழியேவிடுதலைஉணர்வின் தேடல்.தமிழின விடியலுக்கான இலட்சிய வேள்வி எல்லோர் மனங்களிலும் சுடர்விட வேண்டும் என்பதான உறுதியுரை தன்னிலை பெற்று எல்லோரிடமும் இயைபுறுகிறது.இந்தத் தருணங்களிடை தியாகப் பயணத்தின் 12 ஆம் நாள் புலர்கிறது.எந்த மாற்றங்களும் தென்படவில்லை.மக்கள் அனைவரும் ஒருவரையொருவர் முகம் பார்த்துக் கொள்கின்றனர்.ஆனால் உரையாட மனதில் திடமின்றி இருந்தனர்.மருத்துவரை அழைத்துவரத் தயாராகின்றனர். யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அப்போது கடமையில் இருந்த மருத்துவர் கலாநிதி சிவகுமாரன் திலீபனை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திநிலமைகளை அறிந்துகொண்டு மக்களுக்கு அதனை தெரியப்படுத்தினார்.

அன்றைய நாளில் என்ன நடந்தது என்பதை இப்படி விவரிக்கின்றார்

போராளிகள் இருவர் வைத்திய சாலைக்கு வருகை தந்தனர்.திலீபனின் உடல்நிலை தொடர்பில் என்னிடம் எடுத்துக்கூறினர்.நோயாளர் காவு வண்டியில் எல்லோருமாக ஏறிக் கொண்டோம். நல்லூரை நோக்கி வேகமாகப் பயணிக்கிறோம். நோயாளர் காவு வண்டியானது புறப்பட்டு சில நிமிடங்களில் வீரமாகாளி அம்மன் கோவிலை அடைகின்றது.எங்கும் மக் கள் கூட்டம்.வாகனத்தில் செல்ல சாரதி முயற்சிக்கின்றார்.முடியவில்லை. நல்லூர் ஆலய முன்றலை நோக்கி நடக்க ஆரம்பித்தோம். அதுவும் முடியாத காரியமாகவே இருந்தது.

நீண்ட முயற்சிகளின் பின்பு மேடையை அடைந்தோம்.திலீபனின் நாடித் துடிப்பினை அறிய முயன்ற போது அவனது ஆத்மா அணைந்து விட்டதை உணர்ந்து கொண்டேன். அவனது பாதத்தினை தொட்டுவணங்கி அங்கே கூடியிருந்த மக்களைப் பார்த்தும் வணங்கினேன்.அனைவரும் நிலமையைப் புரிந்துகொண்டனர். அப்போது எழுந்த மக்கள் குரல் இப்போதும் ஞாபகங்களை கண்ணீரிடை கனதியாக்குகிறது.

நேரம் சரியாக 10.48 மணி என நினைக்கிறேன். மக்கள் கூட்டத்திடை இருந்து எழுந்த அழு குரல்களையும் அவல ஓசைகளையும் எவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. திலீபனின் உடலை மேடையிலிருந்து கீழே இறக்கி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்காக வாகனத்தில் ஏற்றினோம்.அப்போது நேரம் நண்பகலைத் தாண்டியிருந்தது.

இராணுவச் சீருடை தரித்த திலீபனின் பூதவுடல் தலைவரின் அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து நல்லையின் வீதியில் அவன் தியாக வேள்வியை ஆரம்பித்த அதே மேடையிலே மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படுகின்றது.மக்கள் சோகத்தை வார்த்தைகளில் வர்ணிக்க முடியவில்லை.இந்த நிலையிலே 2 மணி நேர கால அவகாசம் வழங்கப்படும். திலீபனின் உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதான உத்தரவினை இந்திய இராணுவம் புலிகளிடம் தெரியப்படுத்துகின்றது.புலிகள் மேலும் கோபம் கொள்கின்றனர். உத்தரவுகளை செவிமடுக்கவுமில்லை தமது மன உறுதியை கைவிடவுமில்லை.

நிலமைகளை உணர்ந்துகொண்ட இந்திய இராணுவம் மாலை வேளையிலே ஊரடங்கு அறிவித்தலை வெளியிடுகின்றது. எதனையும் பொருட்படுத்தாது லட்சக்கணக்கான மக்கள் நல்லையின் வீதியெங்கும் ஒன்றுகூடுகின்றனர். மிக அமைதியாக தமது இறுதி வணக்கத்தினை செலுத்துகின்றனர்.அங்கிருந்து திலீபனின் தியாக உடல் அஞ்சலிக்காக குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் ஊர்வலமாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துச் செல்லப்பட்டது.

மருத்துவபீட மாணவனாக இருந்து தியாகச் சாவடைந்த இலட்சிய வேள்வியில் உயர்ந்தவனின் இன்னுமோர் எண்ண மேலீடு ஏற்றுக்கொள்ளப்படுகிறது.அவனது புகழுடல் மருத்துவ பீட மாணவர்களின் கற்கைக்காக ஒப்படைக்கப்பட்டது. தமிழீழத்தின் உன்னத தியாக வரலாற்றை உலகெங்கும் பறைசாற்றியது.பல பாடங்களை உலகறியச் செய்தது



# மகிந்தவின் கட்சி பதிவு தோல்வியில்

## இப்போது முடியாதென எடுத்துரைத்தார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்

கொழும்பு, செப் 23

மகிந்த ராஜபக்ச தலைமையில் செயற்படும் கூட்டு எதிரணியினர் புதிய அரசியல் கட்சி ஒன்றைப் பதிவு செய்வதற்கு எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

புதிய அரசியல் கட்சியை இப்போது பதிவு செய்ய முடியாது என்று, கூட்டு எதிரணியினருக்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் கட்சியைப் பதிவு செய்வது தொடர்பாக, பசில் ராஜபக்ச தலைமையில், கூட்டு எதிரணியின் தலைவர்கள் சிலர் நேற்று முன் தினம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இதன்போது கருத்து வெளியிட்ட மகிந்த தேசப்பிரிய, புதுக்குடியிருப்பு- கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைகளுக்கான தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட சூழலில், இப்போது புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்ய முடியாது. இந்தத் தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து, புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்குப் பிரதான தடையாக இருந்து வருகிறது.

தேர்தல்கள் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரிய பின்னரே, புதிய அரசியல் கட்சிகள் பதிவு செய்ய முடியும்.

எனினும், புதுக்குடியிருப்பு கரைத்துறைப்பற்று தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில், இவ்வாறு விண்ணப்பங்களைக் கோர முடியாது என்று தெரிவித்தார். (கு)



# கடல்சார் ஒத்துழைப்பு குறித்து அமெரிக்கா- இலங்கை பேச்சு

கொழும்பு, செப் 23

கடல்சார் ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது குறித்து, அமெரிக்க கடற்படைத் தளபதிகளுக்கும், இலங்கைக் கடற்படைத் தளபதிக்கும் இடையில் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

22 ஆவது அனைத்துலகக் கடல் சக்தி கருத்தரங்கில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள இலங்கைக் கடற் படைத் தளபதி வைஸ்அட்மிரல்ரவீந்திர விஜயகுணவர்த்தன, நேற்று முன் தினம் அமெரிக்க கடற்படையின் நடவடிக்கைகளுக்கான தளபதி அட்மிரல் ஜோன் எம். ரிச்சட்சன் மற்றும் அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் கப்பல்படையின் தளபதி அட்மிரல் ஸ்கொட் எச். ஸ்விப்ட் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

தற்போதைய மற்றும் எதிர்காலப் பயிற்சிகள், நிபுணத்துவ மற்றும் அனுபவப் பரிமாற்றங்கள், கடல்சார் பாதுகாப்புச் சவால்கள் மற்றும் ஏனைய பரஸ்பரம் ஆர்வமுள்ள விடயங்களை உள்ளடக்கியதாக, இரண்டு நாடுகளின் கடற்படைகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இந்தச் சந்திப்புகளில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

வலுவான கடல்சார் பங்காளர்கள் என்ற தொனிப்பொருளில், இந்த ஆண்டுக்கான அனைத்துலகக் கடல் சக்தி கருத்தரங்கு, ரோட் தீவில் நியூபோர்ட் நகரில் உள்ள அமெரிக்கப் போர்க் கல்லூரியில், இடம்பெற்று வருகின்றது. நேற்று முன் தினம் ஆரம்பமான இந்தக் கருத்தரங்கு இன்று வரை இடம்பெற வுள்ளது. இதில் 80 நாடுகளின் கடற்படைத் தளபதிகளும், 15 நாடுகளின் கடலோரக் காவல்படைகளின் தளபதிகளும் கலந்து கொண்டுள்ளனர். (கு)

# இராணுவ அருங்காட்சியகம் உவர்மலையில் திறந்துவைப்பு

கொழும்பு, செப் 23

திருகோணமலை, உவர்மலையில் உள்ள 22 ஆவது டிவிசன் தலைமையகத்தில், இலங்கை இராணுவம் புதிய இராணுவ அருங்காட்சியகம் ஒன்றைத் திறந்துள்ளது.

புதிய இராணுவ அருங்காட்சியகத்தை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா கடந்த 19ஆம் திகதி திறந்து வைத்தார்.

திருகோணமலைத் துறைமுகத்தை நோக்கியதான உவர் மலையில் அமைக்கப்பட்டுள்ள இந்தத் திறந்தவெளி அருங்காட்சியகம், நாட்டிலேயே மிகப் பெரியதாகும்.

இந்த அருங்காட்சியகத்தில், கண்காட்சிப் பகுதி, காலாட்படை ஆயுதங்கள், கவச வாகனங்கள், ஆட்லறி பீரங்கிகள் மற்றும் போர்த் தளபாடங்கள் இடம்பெற்றுள்ளன. காலனித்துவ காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் தொடக்கம், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் வரை இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இங்கு விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உள்ளே புதைந்து கிடக்கும் உண்மைகளைப் புரிதல்!

மிக அண்மையில் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பினால் நாளை சனிக்கிழமை நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள ஊர்வலத்தில் பங்குகொள்ளுமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்திருக்கும் அதேநேரத்தில், ஈ.பி.டி.பி. கட்சியும் அதே ஊர்வலத்தில் பங்கெடுக்குமாறு தனது ஆதரவாளர்களுக்கு உறுதியான அழைப்பை விடுத்துள்ளது.

ஈ.பி.டி.பி. கட்சி 1994இல் தேர்தல் களத்தில் குதித்தபோது வெறும் 10 ஆயிரம் வாக்குகளுடன் அதற்கு 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். அதன் பின்னர் வந்த தேர்தல்களில் எல்லாம் அந்தக் கட்சி தொடர்ச்சியாக வாக்குச் சரிவைச் சந்தித்து 2015 தேர்தலில் மிச்சத்தில் சொச்ச வாக்குகள் மூலம் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மட்டுமே பெற்றது. அதன் அரசியல் பயணம் வீழ்ச்சியைச் சந்தித்திருக்கும் நிலையில், அதிலிருந்து எழுந்து நிற்பதற்கு இந்த ஊர்வலத்தை அந்தக் கட்சி பயன்படுத்திக்கொள்கிறது என்பது வெளிப்படை.

இந்த ஊர்வலத்தில் வலியுறுத்தப்படப் போவதாகக் கூறப்படும் பௌத்தமயமாக்கலை நிறுத்துதல், கூட்டாட்சித் தீர்வை வலியுறுத்துதல், போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக்கான பன்னாட்டு விசாரணையை வலியுறுத்துதல் ஆகிய கோரிக்கைகளை ஏற்றே அந்தக் கட்சியும் இந்த ஊர்வலத்தில் பங்கேற்கப்போவதாக அறிவித்திருப்பது வியப்பூட்டத் தக்கதல்ல.

அரசியல் தோல்வியை எதிர்கொண்டுள்ள ஈ.பி.டி.பி., அதிலிருந்து மீள்வதற்கு மக்கள் பிரச்சினைகளில் தனக்கும் அக்கறை இருக்கிறது என்கிற வஞ்சக நாடகத்தை அரங்கேற்றவே ஊர்வலத்தில் கலந்துகொள்ளப்போவதாக அறிவித்திருக்கிறது என்பதை அரசியல் தெரிந்த எவராலும் இலகுவில் புரிந்துகொள்ள முடியும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் அதிகாரம் மிக்க அமைச்சரவை அமைச்சர் பதவியை வகித்தவர் ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா. இப்போது அவரும் அவரது கட்சியினரும் கலந்துகொள்ளப்போகும் ஊர்வலம் வலியுறுத்தும் கோரிக்கைகள் அனைத்துக்கும் அந்த ஆட்சியின் போதே அடித்தளம் இடப்பட்டது. தமிழர்களுக்கு எதிரான கொடுமைகள் அனைத்தும் செய்யப்பட்டன. ஆனால்; டக்ளஸ் தேவானந்தாவோ அவரது ஈ.பி.டி.பி. கட்சியோ அதற்கு எதிராகக் குரல்கூட எழுப்பியதில்லை.

அப்போது அந்த அநியாயங்களில் எல்லாம் பங்காளியாக இருந்துவிட்டு இப்போது மக்கள் நலனுக்காகக் குரல் கொடுக்கிறேன் என்பது வெறும் போலி வேசம் என்பது புரிந்துகொள்வதற்குக் கடினமானதன்று.

மக்கள் நலனைவிடத் தங்கள் அரசியல் நலன்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே ஈ.பி.டி.பி. இந்த அரசியல் நிலைப்பாட்டை எடுத்துள்ளமை வெள்ளிடைமலை. கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு மக்களுக்காகக் குரல் கொடுப்பதாகக் காட்டிக்கொள்வது, ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதைதான்.

ஈ.பி.டி.பி. கட்சிக்கு என்று மட்டுமல்ல, தங்கள் சொந்த அரசியல் நலன்களுக்காக மக்கள் பிரச்சினைகளைத் தூக்கிப்பிடித்து அதில் குளிர்காய முனையும் அனைத்துத்தரப்புக்களுமே, நனையும் ஆடுகளுக்காக அழும் ஓநாய்கள்தான். தமிழ் மக்கள் அதனைச் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

நிலையான அரசியல் தீர்வுக்கும் தமிழ் மக்களின் விடிவுக்கும் அது மிக மிக அவசியம்.

# உலக அமைதிக்குப் பேராபத்தாக உருவாகிவரும் வடகொரியா

**ஜப்பானியர்கள் 1910 ஆம் ஆண்டு கொரியாவைக் கைப்பற்றினார்கள். 1945 ஆம் ஆண்டளவில் இரண்டாவது உலகப்போரில் ஜப்பான் தோல்வியுறும்வரை, ஜப்பானின் ஆதிக்கம் அங்கு நிலவியது.**

சேரலாதன்

வடகொரியாவின் தன்னிச்சையான செயற்பாடுகள், உலக அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன. குறிப்பாக வடகொரியா மேற்கொண்டுவரும் அணுஆயுதப் பரிசோதனைகள், ஏவுகணைப் பரிசோதனைகள் ஆகியவை கொரிய தீபகற்பத்திலும், அதற்கு அப்பாலும் அதிர்ச்சியான உணர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

கொரியாவின் வரலாறு மிகவும் நீண்டது. சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்னர் சீன நாட்டின் வடபகுதியிலிருந்து கொரிய தீபகற்பத்துக்குச் சென்று சீனர்கள் குடியேறினர். இந்தக் குடியேற்றத்துடன் கொரிய வரலாறு ஆரம்பமாகின்றது.

ஜப்பானியர்கள் 1910 ஆம் ஆண்டு கொரியாவைக் கைப்பற்றினார்கள். 1945 ஆம் ஆண்டளவில் இரண்டாவது உலகப் போரில் ஜப்பான் தோல்வியுறும் வரை, ஜப்பானின் ஆதிக்கம் அங்கு நிலவியது. போரில் வெற்றியீட்டிய நேசநாடுகளான அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் கொரியாவைப் பங்கிட்டுக் கொண்டன. கொரியாவின் வடபுறம் வடகொரியா என்றும் தென்புறம் தென்கொரியா எனவும் அடையாளப்படுத்தப்பட்டு இரு வேறு நாடுகள் உருவாக்கப்பட்டன.

தென்கொரியாவுக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தமது ஆதரவை வழங்கி வருகின்றன. வடகொரியாவைச் சீனா, ரஷ்யா உள்ளிட்ட சில நாடுகள் ஆதரித்து வருகின்றன. தென்கொரியா தொழில்நுட்பத்துறையில் பெரு வளர்ச்சி பெற்றுக் காணப்படுகின்றது. இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் உலக சந்தையை ஆக்கிரமித்து நிற்கின்றன. இவற்றின் விற்பனையால் ஆண்டுதோறும் பல பில்லியன் ரூபா அளவில் அந்த நாட்டுக்கு வருமானம் கிடைத்து வருகின்றது. தொழிற்துறை அங்கு பெரு வளர்ச்சி அடைந்துள்ளதால், ஏராளமான வெளிநாட்டவர்கள் அங்கு சென்று பணி புரிகின்றனர்.

ஆனால் வடகொரியாவில் இத்தகைய தொழில் நிலை காணப்படவில்லை. பெருமளவு மலைப்பகுதிகளைக் கொண்ட வடகொரியாவில் 18 சதவீதமான நிலப்பகுதியே விவசாயம் செய்வதற்கு ஏற்றதாகக் காணப்படுகின்றது. அத்துடன் மின்சாரப் பற்றாக்குறையும், உர வகைகளுக்கான தட்டுப்பாடும் நிறையவே காணப்படுகின்றன. இயற்கைகூட, இந்த நாட்டை வஞ்சிக்கத் தவறவில்லை. வறட்சியும் வெள்ளமும் மாறி மாறித் தாக்கி வருகின்றன. 1990ஆம் ஆண்டு வடகொரியா கடுமையான பஞ்சத்தை எதிர்கொண்டது. உணவு கிடைக்காமல் மாண்டவர்களின் எண்ணிக்கை சுமார் 20 இலட்சமென அப்போது கூறப்பட்டது.


அமெரிக்காவின் அணு ஆயுதங்கள் தென்கொரியாவில் இருக்கும்வரை, சர்வதேச அணு ஆற்றல் நிறுவனத்தின் ஆய்வுகளுக்கு வடகொரியா இணங்கவில்லை. ஆனால் அணுசக்தி தொடர்பான பரீட்சார்த்த நடவடிக்கைகள் அங்கு தொடரவே செய்தன. இதேவேளை-வடகொரியா இரண்டு ஏவுகணைகளைத் தனது நாட்டின் கிழக்குக் கரையோரப் பகுதியை நோக்கி நகர்த்தி வைத்துள்ளதாக தென்கொரியாவிலிருந்து செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த நடவடிக்கை காரணமாக ஜப்பான் மற்றும் ஆசிய பசுபிக்கில் அமைந்துள்ள அமெரிக்காவின் தளங்களுக்குப் பெரிய அளவிலான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இதனால் ஏவுகணை ஆயுதங்கள் உள்ளிட்ட இராணுவ தளபாடங்களை அமெரிக்கா கொரிய தீபகற்பத்தை நோக்கி நகர்த்தி வருவதைக் காணமுடிகின்றது. வடகொரியாவின் நடவடிக்கைகளால் கொரிய தீபகற்பத்தில் எந்தவேளையிலும் அணு ஆயுதப் போர் தொடங்கி விடலாமென அஞ்சப்படுகின்றது.

இதேவேளை-வடகொரியா தனது ஐந்தாவது அணுகுண்டுச் சோதனையை நடத்தியுள்ளதால் தென்கொரியாவில் பதற்றம் அதிகரித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களையெல்லாம் வடகொரிய அதிபர் கிம் யோங் உன் தொடர்ந்து உதாசீனம் செய்து வருகின்றார். சீனாவின் உதவிகள் தொடர்ந்து கிடைத்து வருகின்றமை, அந்த நாட்டுத் தலைவருக்குப் பெரும் உத்வேகத்தை அளித்து வருகின்றது. ரஷ்யாவும் மறைமுகமான வழிகளில் வடகொரியாவுக்கு உதவி வருகின்றது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர்களாக இருக்கும் இந்த இரு நாடுகளும் வடகொரியாவுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றமை, அமெரிக்கா உள்ளிட்ட அதன் நேசநாடுகளுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளன.

இதேவேளை-வடகொரியாவில் ஒரு சர்வாதிகார ஆட்சி இடம்பெறுவதையே காணமுடிகின்றது. அந்த நாட்டின் அதிபர் இடும் கட்டளைகளை எவருமே மீறிவிட முடியாது. அண்மையில் அவர் கலந்து கொண்ட நிகழ்வொன்றின்போது அசதியால் தூங்கியவர்கள் சாவுத்தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர். நாட்டின் தலைவரை அவமதித்துவிட்டார்கள் என்பதே அவர்கள் மீதான குற்றச்சாட்டாகும்.

கட்டுக்கடங்காமல் இடம்பெறுகின்ற வடகொரியாவின் அதிரடி நடவடிக்கைகளால் அதன் அயல் நாடுகளான ஜப்பானும், தென்கொரியாவும் பெரும் கலக்கத்தில் ஆழ்ந்துள்ளன. ஏற்கனவே அமெரிக்கா வீசிய அணுகுண்டுகளின் தாக்கத்திலிருந்து விடுபட முடியாமல் திணறிவரும் ஜப்பான், வடகொரியாவின் அணு ஆயுதச் சோதனைகளால் பெரிதும் ஆடிப் போய்விட்டது. அணுகுண்டுகளை வீசி அமெரிக்காவை அழித்துவிடுவோமென வடகொரியா விடுத்த சூளுரை வேறு, அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. மத்திய கிழக்கில் தனது எண்ணம் போன்று செயற்பட்டு ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்ட அமெரிக்கா, வடகொரியாவின் விடயத்தில் அமைதியாகச் செயற்படுகின்றமை வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

உலகின் மிக உயர்ந்த நிறுவனமான ஐக்கிய நாடுகள் சபை தீர்க்கமான முடிவொன்றை மேற்கொண்டு, வடகொரியாவின் கொட்டத்தை அடக்குவதற்கான தருணம் இதுதான். இதைத் தவறவிட்டால் அதன் விளைவுகள் பயங்கரமானவையாக மாறிவிடும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களமூலம்- சந்துன் ஜீவந்த (மவ்பிம)
தமிழில்- வீ.எஸ்.ரீ

# மலேசிய சம்பவத்தால் உறுதிப்படுத்தப்படும் உண்மை!

"போரின் முக்காற்பங்கை முடித்து வைத்தவள் நானே" என்கிறார் சந்திரிகா. "உண்மையில் போரை முன்னெடுத்து முடித்தது நானே. இந்த ஊழல் ஆட்சியாளர்கள் அது விடயத்தில் எதுவுமே பெரிதாகச் செய்து விடவில்லை" என்கிறார் சரத் பொன்சேகா. அதே சமயம் ஜனாதிபதி மைத்திரி பாலவோ "நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்தது தான் போரை முடிவுக்குக் கொண்டு வந்தோம்" - என்கிறார்.

இவற்றிலிருந்து ஒன்று மட்டும் தெளிவாகப் புரிகிறது. மகிந்த ராஜபக்ச போரை முடிவுக்குக் கொண்டு வரவில்லை என்று நிறுவவே இவர்கள் அனைவரும் முயல்கின்றனர். சந்திரிகாவும் - சரத் பொன்சேகாவும் போர் வெற்றிக்கான கௌரவத்தைத் தத்தமது கணக்குகளில் சேர்த்துக்கொள்ள முனைகின்றனர். மைத்திரிபால சிறிசேனவோ அந்தக் கௌரவத்தை பொதுக் கணக்குடன் கூட்டி, மகிந்தவுக்குக் கிட்டவுள்ள கௌரவத்தைக் கழித்துக் காட்ட முனைகிறார்.

ஆனால், உண்மையில் போர் வெற்றிக்கான முழுக் கௌரவமும் எவருக்குக் கிட்ட வேண்டும் என்பது கடந்த வாரத்தில் மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்சவின் மலேசியாவுக்கான பயணத்தைக் கண்டு, மலேசியாவிலுள்ள விடுதலைப்புலிகள் ஆதரவு புலம்பெயர் தரப்புக்கள் வாலில் தீ பற்றவைக்கப்பட்ட அனுமான் போன்று நடந்து கொண்டுள்ளனர்.

மகிந்தவின் மலேசியாவுக்குகான பயணத்தால் குழம்பிப்போன மலேசிய விடுதலைப்புலிகள் ஆதரவு புலம்பெயர் தரப்புக்கள், மகிந்தவின் படம் பொறிக்கப்பட்ட பதாகைகளுக்குத் தீயிட்டு குழப்பம் விளைவித்தமை, பிரபாகரனது சாவுக்கான பழியை மகிந்த மீது சுமத்தும் முனைப்பிலாகும். மகிந்த செல்லவிருந்த பௌத்த வழிபாட்டுத் தலத்துக்கு முன்பாகக்கூட ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட அந்தத் தரப்பினர், கடைசியில் குறித்த அந்த பௌத்த வழிபாட்டுத்தலத்தின் பௌத்த மதகுருமார் மீதும் தாக்குதல் மேற்கொண்டிருந்தனர்.

இந்தக் குழப்பங்களது உச்சக்கட்டமாக, கடைசியில் மலேசியாவிலுள்ள இலங்கைத் தூதுவரை விமான நிலையத்தில் வைத்து அவர்கள் தாக்கியமையைக் குறிப்பிட்டாக வேண்டும். இலங்கை அரசின் பிரதிநிதியான தூதுவரொருவர், வெளிநாடொன்றின் விமான நிலையத்தில் வைத்துத் தாக்குதலுக்கு உள்ளான சம்பவம் இலேசில் மறந்து விடக்கூடிய ஒன்றல்ல. அது ஒரேநாடு என்ற வகையில் இலங்கைக்கு ஏற்படுத்தப்பட்டதொரு அவமானமாகக் கொள்ளத்தக்கது.




முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் பிரிட்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கிறிஸ் நோனிசும், இத்தகைய தாக்குதல் ஒன்றுக்கு முகம் கொடுக்க நேர்ந்திருந்தது. சுதந்திரக் கட்சியின் தற்போதைய அம்பலாங்கொடை மாவட்ட அமைப்பாளர் சஜித் வாஸ் குணவர்த்தனாவே கிறிஸ் நோனிசைத் தாக்கியதாக அந்த வேளையில் குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

ஆனால், கிறிஸ் நோனிஸ் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மற்றும் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் மீதான தாக்குதல் என்பவற்றுக்கிடையே எந்தவொரு ஒற்றுமையையும் இனம் காண இயலாது. கிறிஸ் நோனிசுக்கும் சஜித் வாஸுக்கும் இடையேயான மோதல் சம்பவம் தனிப்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இடம்பெற்றதொன்றாகும். ஆனால், மலேசியாவின் விடுதலைப் புலிகள் ஆதரவுத் தரப்பினர்கள், மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் மீது மேற்கொண்ட தாக்குதல், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மலேசியாவுக்குச் சென்றமை தொடர்பாக எழுந்த ஆத்திரம், குரோதம் காரணமானது.

மகிந்த வெளிநாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம், அந்தந்த நாடுகளில் வாழும் விடுதலைப் புலிகள் ஆதரவு புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள், அவரது பயணங்கள் குறித்த அதிருப்தியால், அவருக்கெதிராக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதுபோன்று, மைத்திரிபால சிறிசேனவோ, ரணில் விக்கிரமசிங்க மற்றும் சரத் பொன்சேகாவோ அந்த விதம் வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளும்போது அத்தகைய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தீவிரமாக முன்னெடுப்பதில்லை. இதிலிருந்து விடுதலைப் புலிகள் ஆதரவு புலம்பெயர் தமிழ் அமைப்புக் களுக்கு மகிந்தவின் மீதே வைராக்கியம் அதிக அளவில் நிலவுகிறது. கொன்று உண்ண முடியுமானால் அவர்கள் மகிந்தவைக்கூட கொன்று தின்று பசியாறியிருப்பார்கள்.

2010ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு-கிழக்கு தமிழ் வாக்காளர்களில் 80 வீதமானோர் சரத் பொன்சேகாவுக்கே வாக்களித்திருந்தனர். போரை முன்னெடுத்து விடுதலைப் புலிகளை முறியடித்தவர் சரத் பொன்சேகாவாக இருந்திருந்தால், அந்த 80 வீத தமிழ் வாக்காளர்களும், சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக வாக்களித்து இருந்திருக்க மாட்டார்கள், இதிலிருந்து போரை முடிவுக்குக் கொண்டு வந்து விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தவர் மகிந்த ராஜபக்ச தான் என்பது உறுதியாகின்றதல்லவா?

அதேவேளை, மலேசியாவிலுள்ள விடுதலைப் புலிகள் ஆதரவு புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள்கூட தமது மிலேச்சத்தனமான தாக்குதல் சம்பவங்கள் மூலம் மீண்டும் மீண்டும் மேற்குறிப்பிட்ட நிலைப்பாட்டையே உறுதிப்படுத்தி வருகின்றனர்.

---

## நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்துவதில் ஏட்டிக்குப் போட்டி இழுபறி நிலை

தென்மராட்சி ஜே /303 (சாவகச்சேரி வடக்கு) கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு மில்லியன் ரூபா நிதியை, அரசடி சனசமூக நூல் நிலையக் கட்டட நிர்மாணத்துக்கு வழங்குவதென கடந்த மே மாதம் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், அது பொருத்தமானதல்ல என வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தெரிவிக்கப்பட்டதையடுத்து, கிராம மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சங்கத்தானை சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் ஸ்ரீமுருகன் முன்பள்ளி அமைந்துள்ள இடத்தில் நூல் நிலையத்தைக் கட்டுவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனுமதியளித்ததுடன் அதற்கான ஒப்பந்தமும் செய்யப்பட்டது.

அந்தச் சனசமூக நிலையத்தைச் சார்ந்த இளைஞர்கள் நெற்றி வியர்வை சிந்தி உடல் உழைப்பை நல்கி, அத்திபாரம் வரை கட்டியுள்ளனர். வேண் டாத கேளிக்கைகளில் ஈடுபடும் இளைஞர்களைப் போலல்லாது குறிப்பிட்ட பகுதி இளைஞர்கள் தமது ஓய்வு நேரங்களை நற்பணியில் ஒன்றிணைந்து செயற்படுவது ஏனைய கிராம இளைஞர்களுக்கும் ஓர் முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

காலத்தின் வரையறையை உணர்ந்து, கிராமத்தின் அபிவிருத்திக்கு அப் பணம் பயன்பட வேண்டும் (திரும்பிச் செல்லக்கூடாது) என்ற உயர் நோக்குடன் சம்பந் தப்பட்ட அதிகாரிகள் நியாயமான முடிவை எடுத்துள்ளனர் என இந்தப் பிரதேச மக்கள் அவர்களுக்கு நன்றி பாராட்டுகின்றனர்.

இத்தகைய நிலையில், 2016.09.19 ஆம் திகதி தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத்[illegible] ஒருவரால், இந்தக் கட்டட நிதி தொடர்பாக வெளியிடப் பட்ட கருத்தும், குறித்த அந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும் என்ற அறிவித்தலும் முன்மாதிரியாகச் செயற்படும் இளைஞர்களை மனம் நோக வைத்துள்ளது. அதுவே இந்தக் கடிதத்தை எழுதத் தூண்டியமைக்கான காரணம்.

ஒப்பந்தத்தை இரத்துச் செய்தால், அந்த நிதியை எதற்குப் பயன்படுத்துவது என்பது தொடர்பாக ஆராயப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறாயின் மீண்டும் சங்கத்தானை சனசமூக நிலையத்துக்கே வழங்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கும். முன்னெடுக்கப்பட்டுவரும் ஒரு செயற்பாட்டைத் தடைசெய்துவிட்டு, மாற்றுத் திட்டம் தொடர்பாகவும் ஆராயப்படாதது அந்த நிதியை மீள அரசுக்குக் கையளிப்பதாகவே அமையும். இதுவா ஒருங்கிணைப்புக் குழுவின் நோக்கம்?

மேலும், அரசடி சனசமூக நிலையத்தினர் கட்டடம் அமைக்கவுள்ள இடத்தின் பொருத்தமின்மை தொடர்பாக எவரோ சிலர், எனது பெயரில் முறையீடொன்றை மேற்கொண்டுள்ளனர்.

ஆளுநர், அரசஅதிபர் காரியாலயங்களிலிருந்து அது தொடர்பாக எனக்குக் கடிதம் வந்த பின்பே அந்த விடயம் குறித்து நான் அறிந்தேன்.

கு.சதாசிவமூர்த்தி.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப [illegible] விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உலகின் செல்வந்த நாய்

பீஜிங், செப்.23
சீனாவின் செல்வந்தவரான வாங் ஜி ஜாலின் என்பவரின் மகனான வான் சி ஜொங் என்பவரது நாய் உலகின் அதிக வசதிகளை அனுபவிக்கும் நாயாக குறிப்பிடப்பட்டது.
கோகோ என பெயரிடப்பட்ட குறித்த நாய் அனுபவிக்கும் சொகுசு வாழ்க்கை வியக்கத்தக்க வகையில் உள்ளது. சமீபத்தில் வெளியான அப்பிள் 7 அலைபேசிகளில் 8 அலைபேசிகளை வான் சி ஜொங் குறித்த நாய்க்கு பரிசளித்தார். போதாதென்று இரு கால்களில் நவீன அப்பிள் மணிக்கூடுகள், வர்ண ஆடைகள், உயர் ரக காலணிகள், பிரத்தியேக கார், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், ஜெட் விமான பயணம் என கோகோ அனுபவிக்கும் சொகுசு வாழ்க்கைப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இந்தச் செய்தி சமூக வலைத்தளங்களில் வெளியானதும், உணவுக்கு பல மக்கள் அல்லல்படும் நேரத்தில் ஒருநாய்க்கு இத்தகைய பரிசுப்பொருள்கள் அவசியம்தானா எனப் பலரும் வான் சி ஜொங் இனை கடுமையாக விமர்சித்து வருகின்றனர். (ம-ரி4)

## அகதிகளை ஆதரியுங்கள்; ஐ.நா. உரையில் ஒபாமா


வோஷிங்ரன், செப். 23
உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் தம்மால் இயன்ற அளவுக்கு அகதிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.
ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஒபாமா இவ்வாறு தெரிவித்தார்.
இன்னமும் 50 நாடுகள், 3 லட்சத்து 60 ஆயிரம் அகதிகளை ஏற்றுக்கொள்ளலாம். அகதிகள் பிரச்சினையை ஒவ்வொரு நாடும் தனது தேசியப் பிரச்சினையாகக் கருத வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து, அகதிகளுக்கு இடம் வழங்க வேண்டும். வீடு அற்றவர்களை ஆதரியுங்கள், உலகம் மிகவும் சிறியது, இதற்குள்தான் நாம் வாழ்ந்தாக வேண்டும். சுவர் எழுப்புவது, இவற்றுக்கு தீர்வாகாது. கடல்மட்ட உயர்வும், வெப்பநிலை அதிகரிப்பும், மாறிவரும் கால நிலை மாற்றமும் மனித வாழ்க்கைக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள் ளன.
அடுத்த வருடம் ஒரு லட்சத்து 10 ஆயிரம் அகதிகளை அனுமதிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என ஒபாமா மேலும் தெரிவித்தார்.
எதிர்வரும் நவம்பர் மாதம் அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே ஒபாமா அமெரிக்க ஜனாதிபதி என்ற அந்தஸ்துடன் ஐக்கிய நாடுகள் சபையில் ஆற்றிய கடைசி உரை இதுவே. (ம-ரி4)




## இந்தியாவுடன் பேச பாகிஸ்தான் தயார்

### நவாஸ் தெரிவிப்பு

காஷ்மீர் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அமைதியான முறையில் தீர்வுகாண இந்தியாவுடன் பேச்சுவார்த்தைக்குத் தயார் என அறிவித்தது பாகிஸ்தான்.
அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டம் நடைபெற்று வருகிறது. அங்கு உரையாற்றுகையிலேயே பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் இவ்வாறு தெரிவித்தார்.
ஜம்மு-காஷ்மீர் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அமைதியான தீர்வு காண இந்தியாவுடன் தீவிரமான, உறுதியான பேச்சுவார்த்தைக்கு பாகிஸ்தான் தயார். காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்மானம் எட்டும் வரை இருநாடுகளிடையே அமைதியை நிலைநாட்டுவதில் வெற்றிகொள்ள முடியாது. பேச்சுவார்த்தைக்கு ஏற்றுக்கொள்ளமுடியாத முன்நிபந்தனைகளை இந்தியா முன்வைக்கிறது. காஷ்மீர் மக்கள் சுய நிர்ணய உரிமை கோரிக்கைக்கு பாகிஸ்தான் முழு ஆதரவு அளிக்கிறது. காஷ்மீரில் இடம்பெறும் வன்முறை குறித்து, சுதந்திரமான நீதி விசாரணை தேவை. ஐக்கிய நாடுகள் சபையின் உண்மை அறியும் குழு காஷ்மீர் சென்று ஆராய வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று நவாஸ் மேலும் தெரிவித்தார்.
காஷ்மீரின் ஊரிப்பகுதியில் உள்ள இந்திய இராணுவ முகாம்மீது பாகிஸ்தான் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 21 சிப்பாய்கள் சாவடைந்தனர். இதனையடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் உறவு போரின் விளிம்பில் உள்ளது. இந்த நிலையிலேயே நவாஸ் இவ்வாறு தெரிவித்தார். (ம-ரி4)





## ஐ.எஸ்.ஐ.எ… இரசாயன …

### அமெரிக்கா வெளியி…

வோஷிங்ரன், செப். 23
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியிருக்கலாம் என்று அமெரிக்கா நேற்று சந்தேகம் வெளியிட்டது.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி, அவற்றை ஓர் தனிநாடாக அறிவித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. உலகுக்கே "இந்த அமைப்பு பெரும் அச்சுறுத்தலாக விளங்குவதால், அந்த அமைப்புக்கு எதிராக உலகநாடுகள் பலவும் ஒன்றிணைந்து போராடி வருகின்றன. அமெரிக்காவின் தலைமையில் கூட்டுப்படைகளும் ரஷ்யாவும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக குண்டுமழை பொழிகின்றன. மனித உடலுறுப்புத் திருட்டு, பயங்கரமான கொலைகள், பன்னாடுகளிலும் குண்டு

வெடிப்புக்கள், சிரிய, …
யல் அடிமைகளாக …
போன்ற அடாவடித் த…
ஐ.எஸ்.ஐ.எஸ். அ…
இரசாயன ஆயுத உ…
சில மாதங்களுக்கு மு…
றஞ் சாட்டியது. சிரியா…
றையும் அந்த அமை…
தனது கருத்துக்குச் …
அமெரிக்கா, கடந்த சி…
அந்த ஆலையைத் த…
தொடர்பான புகைப்ப…
டது. ஆனால், அந்…
ஆயுதங்களைப் பய…
உறுதிப்படுத்தப்படா…
தற்போது அமெரிக்…
பாவனையும் ஐ.எஸ்…



லண்டன் மெழுகுச்சிலை அருங்காட்சியகமான மடேம் ருசோட்ஸின் நிர்வாகம், ஏஞ்சலீனா- பிரட் பிட் தம்பதியரின் மெழுகுச் சிலைகளை பிரித்து வைத்துள்ளது. இருவரும் விவாகரத்துப் பெறப் போவதாக நேற்றுமுன்தினம் அறிவித்தனர். இதனையடுத்து இருவரின் மெழுகுச் சிலைகளை பிரித்து வைத்ததாக நிர்வாகம் தெரிவித்தது. ஏஞ்சலீனா பிரட் பிட் இருவரது மெழுகுச் சிலைகளுக்கு நடுவே வேறொருவரின் சிலை வைக்கப்பட்டது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மின் உற்பத்தி …
## 1.5 மில்லியன் …

சான்ஜுவான், செப். 23
அமெரிக்க எல்லைக்குள் அமைந்…
உறபத்தி நிலையத்தில் ஏற்பட்ட தீ…
இருளில் மூழ்கியது.
எதிர்பாராத நேரத்தின் ஏற்பட்…
போக்குவரத்துக்கள், தொழிற்சா…
ஆனால் தொலைத் தொடர்பாடல் …
தொடர்ந்தும் இயங்கி வருகின்றன. …
தீவிபத்து பெரிய அளவில் விளை…
உயிரிழப்புக்களோ, காயங்களோ …
நிலைய அதிகாரிகள் தெரிவித்தன…
ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலி…



இரசாயன ஆயுதங்களைப் பரிசோதிக்கும் அமெரிக்கக் குழு

# எஸ். இடம் ஆயுதங்கள்

## டுகிறது சந்தேகம்

ிய, ஈராக் பெண்களை பாலி
ாக வைத்திருத்தல், விற்றல்
த் தனங்களை செய்துவரும்
மைப்பு, தடைசெய்யப்பட்ட
உற்பத்தியிலும் ஈடுபடுவதாக
கு முன்னர் அமெரிக்கா குற்
ரியாவில் அணுவாலை ஒன்
மைப்பு வைத்திருந்தமையை
தச் சான்றாகத் தெரிவித்த
த சில நாள்களுக்கு முன்னர்
த் தரைமட்டமாக்கியது. இது
ப்படங்களையும் வெளியிட்
அந்த அமைப்பு இரசாயன
பயன்படுத்தியதா என்பது
டாமல் இருந்த நிலையில்,
ரிக்கா இரசாயன ஆயுதப்
எஸ்.ஐ.எஸ். அமைப்பிடம்
இருந்திருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிட்டது. ஈராக் இராணுவத்தினரின் விமானப்படை தளத்தில் அண்மையில் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களில் சில இரசாயன ஆயுதங்களாகும். ஆனால் அவை உரிய முறையில், உயர் தரத்தில் செய்யப்படாததால் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஈராக் இராணுவத்துக்கு எதிராக தாக்குதலை மேற்கொண்டு வருவது ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு மட்டுமே. இதனை அடிப்படையாக வைத்தே அமெரிக்கா குறித்த அமைப்பிடம் இரசாயனப் பாவனை இருந்திருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிட்டது. தாக்குதல் நடத்தப்பட்ட இடமும் கிடைக்கப்பட்ட ஆயுதங்களும் தொடர்ந்தும் தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. (ம-ரி4)



## தி நிலையத்தில் தீ
## ர் மக்கள் இருளில்

மந்துள்ள போட்ரிக்கோ தீவின் மின்சார
ட தீ விபத்துக் காரணமாக குறித்த தீவு

பட்ட இந்த மின்தடை காரணமாக,
சாலைகள் என்பன முடங்கியுள்ளன.
ல் சேவைகளும், விமானச் சேவைகளும்
றன. மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட
ளைவை தோற்றுவித்துள்ளது. ஆனால்,
ளா ஏற்படவில்லை என மின் உற்பத்தி
தனர். விபத்து குறித்து விசாரணைகள்
ாலிஸார் தெரிவித்தனர். (ம-ரி4)

**வெனிசுலா**

# அட்டைப் பெட்டியில் குழந்தைப் பராமரிப்பு பொருளாதார நெருக்கடியின் எதிரொலி

கரகாஸ், செப். 23
அட்டைப் பெட்டிகளில் குழந்தைகளை வைத்து பராமரிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது வெனிசுலா.
இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து வெனிசுலா கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. விடுதிகளிலிருந்து கொட்டப்படும் குப்பைகளுக்குள் இருக்கும் உணவுப்பொருள்களை எடுக்க மக்கள் போட்டி போட்டனர். உணவு, எரிபொருள், மருந்துப் பொருள்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. வெனிசுலாவின் அயல்நாடான கொலம்பியாவுக்குச் சென்று தமக்குத் தேவையான பொருள்களை கொள்வனவு செய்துவர சில நாள்கள் எல்லைகள் திறந்துவிடப்பட்டன. தற்போது பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கும் நாடுகளின் பட்டியலில் வெனிசுலாவுக்கும் பிரதான இடமுண்டு. இந்த நிலையில் அந்த நாட்டின் மருத்துவமனைகளில் குழந்தைகளை அட்டைப் பெட்டிக்குள் வைத்துப் பராமரிக்கும் படங்கள் தற்போது வெளியாகி, பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.
ஆனால், இந்தத் தகவல்களை மறுத்த அரச தரப்பு, 2 ஆயிரம் அவசர சிகிச்சைப் பிரிவுகளை நிறுவியதாகவும், மருத்துவத்துறையில் எந்தவித தளம்பல்களும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்தது. (ம-ரி4)



**சிரியா**

# நள்ளிரவில் நடத்தப்பட்ட தாக்குதலில் நான்கு மருத்துவப் பணியாளர்கள் சாவு

டமஸ்கஸ், செப். 23
சிரியாவில் நேற்றுமுன்தினம் நள்ளிரவில் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் நான்கு மருத்துவர்கள் உயிரிழந்துள்ளனர்.
சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரும், கிளர்ச்சிக் குழுக்களும் முகாமிட்டுள்ளன. அமெரிக்காவின் தலைமையில் கூட்டுப்படைகளும், ரஷ்யாவும் அந்த அமைப்புக்களுக்கு எதிராக குண்டுமழை பொழிந்து வருகின்றன. இந்த நிலையில் சிரியாவின் அலப்போ நகரின் தென்மேற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் நான்கு மருத்துவர்கள் சாவடைந்தனர். குறித்த பகுதி ஜய்ஷ் அல் பற்றா ஆயுத அமைப்பினரிடம் உள்ளது. இது சிரிய அரசுக்கு எதிரான போராட்டக்குழு. இந்தக் குழுக்களுக்கு அமெரிக்கா தனது ஆதரவை வழங்கி வருகிறது. இதனால் இந்தத் தாக்குதலை ரஷ்யா அல்லது சிரியப் படை நடத்தியிருக்க வேண்டும் என்று சந்தேகம் வெளியிடப்பட்டது. (ம-ரி4)





# மீனவருக்கு கிடைத்த அதிர்ஷ்டம்

பீஜிங், செப்.23
சீன மீனவர் பிடித்த மீன் ஒன்று இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட ஒன்றரைக் கோடிக்கு விற்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. சோவுசான் மாகாணத்தில் கடந்த வாரம் குறித்த சம்பவம் இடம்பெற்றது. 5.2 அடி உயரமுடைய குறித்த மீன் 105 பவுண்டுகள் எடையுடையது. குறித்த வகை மீன் இவ்வாறு பெரிய அளவில் கிடைப்பது மிகவும் அரியது. ஒரு லட்சத்து 27 ஆயிரம் பவுண்டுகளுக்கு விற்பனை செய்யப்பட்டது. அதாவது இலங்கை மதிப்பில் இதன் பெறுமதி ஒன்றரைக் கோடிக்கும் அதிகம். (ம-ரி4)



# உலகின் சோகமான கரடி

பீஜிங், செப். 23
சீனாவின் குவாங்சு மாகாணத்தில் வணிக வளாகம் ஒன்றில் உள்ள கரடியொன்று உலகின் சோகமான கரடி எனும் பெயரைப் பெற்றது.
குறித்த வணிக வளாகத்தில் தனித்து விடப்பட்ட, 'பீட்சா' என்று பெயரிடப்பட்ட குறித்த கரடி மிக மன அழுத்தத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரிட்டன் வனவிலங்கு பூங்காவில் கரடியைக் கொண்டு போய் சேர்க்க ஆர்வலர்கள் தீர்மானித்தனர். இந்த முடிவுக்கு ஆதரவாக 5 லட்சத்து 80 ஆயிரம் பேர் கையொப்பமிட்டனர். ஆனாலும், வணிக வளாக அதிகாரிகள் கரடியை பிரிட்டன் வனவிலங்கு பூங்காவிடம் ஒப்படைக்க தொடர்ந்து மறுப்பு தெரிவித்து வருகின்றனர். போதுமான இட வசதியும், தட்பவெப்ப மாற்றங்களையும், சிறந்த உணவுகளையும் வழங்கி வருகிறோம் என வணிக வளாகம் தெரிவித்தது. உரிய வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால் போதாது. அதன் இனத்துடன் வாழும் உணர்வும் அவசியம் எனத் தெரிவித்த பிரிட்டன் வனவிலங்கு பூங்கா நிர்வாகம் கரடியைத் தாம் பொறுப்பேற்கத் தயார் என்று தெரிவித்தது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த கிழமைப் பலன்கள்




***கிழமைகள், ஒருவரது பண்பு நலன்களுக்கும் அதன் விளைவான அவர்களுடைய செயற்பாடுகளின் பலா பலன்களுக்கும் காரணமாக அமைவது உண்டு.***
***எண்கணித அடிப்படையில், குறிப்பிட்ட கிழமையில் பிறந்த அன்பர்களது குணநலன்கள், அவர்களுக்கான பலாபலன்கள், அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பரிகார வழிபாடுகள் குறித்து விளக்கப்பட்டிருக்கிறது.***

**ஞாயிறு**
கடின வேலைகளையும் மிக எளிதாகவும் திறமையாகவும் முடித்துச் சாதனை படைப்பார்கள். சொன்னதைச் செய்வார்கள். இயலாது எனில் மௌனம் சாதிப்பார்கள். உற்றார்- உறவினருக்கு உதவும் குணம் கொண்டவர்கள். இவர்களது தலைமையின் கீழ் பலபேர் பணிபுரிவார்கள். நல்லன அருளும் திகதிகள்: ஞாயிற்றுக்கிழமையுடன் 1, 10, 19, 28 ஆகிய திகதிகள் இணைந்திருக்க பிறந்தவர்களுக்கு எதிலும் இரட்டிப்பு மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை இந்தத் திகதிகளில் துவங்கலாம்.

*வளம் தரும் கிழமை: வெள்ளி*

**திங்கள்**
சாந்தமான மனம் படைத்தவர். இனிமை, அன்பு, உதவும் உள்ளம் உள்ளவர்கள். எதிரிகளையும் நண்பர்களாக பாவிப்பார்கள். தர்ம- நியாயங்களைக் கடைப்பிடிப்பதில் உறுதி உள்ளவர்கள். இவர்களுக்குச் சொந்தத் தொழில் கைகொடுக்கும். குளிர்ச்சியான தேகம் உடையவர்கள். இவர்கள் 2, 7, 11, 16, 20, 25, 29 ஆகிய திகதிகளில் புதிய தொழில் தொடங்குதல், பொருள்களை வாங்கி சேகரித்தல், சுப நிகழ்ச்சிகள் செய்வது சிறப்பு.

*வளம் தரும் கிழமை: திங்கள்கிழமையே!*

**செவ்வாய்**
செவ்வாய்க்கிழமையில் பிறந்தவர்கள் பலரிடமும் பலவிதமான யோசனைகளைக் கேட்பார்கள். ஆனாலும் தான் வைத்ததே சட்டம்; தான் நினைப்பதே சரி எனும் மனப்போக்குடன் திகழ்வார்கள். நல்லவர்களுக்கு நல்லவர்; கெட்டவர்களுக்கு கெட்டவராகத் திகழ்வார்கள். அதனாலேயே பலருக்கும் இவர்களைப் பிடிக்காது. ஆனால், அதைப் பற்றி இவர்கள் கவலைப்பட மாட்டார்கள். நியாய- தர்மத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். 9, 18, 27 ஆகிய திகதிகளில் புதிய முயற்சிகளை கையிலெடுத்தால் பல நன்மைகள் கிடைக்கும்.

*வளம் தரும் கிழமை: வியாழன்*

**புதன்**
இந்தக் கிழமையில் பிறந்தவர்கள் நல்ல அறிவாளிகளாகத் திகழ்வார்கள். இயந்திரம், வைத்தியம், சோதிடம், துப்பறியும் கலை, ஓவியம் ஆகியவற்றில் திறமைசாலிகளாக விளங்குவர். ரகசியம் காப்பதில் வல்லவர்கள்.
மற்றவர்களின் மனதில் உள்ளதைத் துல்லியமாக அறிந்து, அதற்கேற்ப செயற்படுவார்கள். பலதுறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள். மருத்துவர், நீதிபதி, பொறியியலாளர், எழுத்தாளர் என்று உயர்ந்த நிலையில் வாழ்வார்கள். நல்லன அருளும் 5, 14, 23 ஆகிய திகதிகளில் புதிய முயற்சிகளைத் துவங்கினால் வெற்றி கிடைக்கும்.

*வளம் தரும் கிழமை: வியாழன்*

**வியாழன்**
வியாழனன்று பிறந்தவர்கள் நீதி-தர்மத்துக்குப் பக்கபலமாக விளங்குவர். குறுக்கு வழியில் செல்பவரையும் திருத்தி நல்வழிப் படுத்துவதற்கு பாடுபடுவர். உற்றார்- உறவுகளுக்கு உதவிபுரிவர்.
எந்தத் துறையில் ஈடுபட்டாலும் முன்னேற்றம் அடைவர்.
3, 12, 21, 30 ஆகிய திகதிகளில் புதிய முயற்சிகளைத் தொடங்கினால் ஏற்றம் உண்டாகும்.

*வளம் தரும் கிழமை: வெள்ளி*

**வெள்ளி**
இந்தக் கிழமையில் பிறந்தவர்கள், பிறக்கும் போதே புத்திசாலிப் பிள்ளை என்று பெயரெடுப்பார்கள். பேச்சாலேயே மற்றவர்களைத் தன் வயப்படுத்துவார்கள். தமது பேச்சை கேட்காதவர்களைப் புறக்கணித்து விடுவார்கள்.
எந்த வேலையையும் சிரமம் இல்லாமல் மற்றவர்களின் துணையுடன் முழுமை செய்வார்கள். கணவன் அல்லது மனைவியின் அளவற்ற அன்பிலும் பாசத்திலும் மூழ்கித் திளைப்பர்.
4, 8, 13, 17, 26, 31 ஆகிய திகதிகள் நலம் பயக்கும்.

*வளம் தரும் கிழமை: திங்கள்.*

**சனி**
இந்தக் கிழமையில் பிறந்தவர்கள் பொறுமைசாலிகள். வேலை என்று வந்துவிட்டால் அதை முடித்துவிட்டே மற்ற வேலைகளைத் துவங்குவர். சான்றோரிடமும் ஆன்றோரிடமும் மிகுந்த பக்தி உள்ளவர்கள். எப்போதும் தான் உண்டு தன்வேலை உண்டு என நினைப்பவர்கள்.
8, 17, 26 ஆகிய திகதிகளில் சிறப்பான நன்மைகள் பல பெற்றிடுவர்.

*வளம் தரும் கிழமை: வியாழன்*

# பலத்தை எமக்கு வழங்கும் பயம்

சி.நற்குணலிங்கம்



பயம் என்பது சிறிது நேரத்தில் நடக்கவிருக்கும் ஏதாவது ஒரு விடயத்துக்கான உடனடிச் சலனமாகும். பயம் அகத்தே இருந்து தான் வருகின்றது. பயமென்பது அச்சத்தை வெளிப்படுத்தும் ஓர் உணர்ச்சி வயப்பட்ட வெளிப்பாடாகும். உள்ளார்ந்த மன உணர்வுகளின் வெளிப்பாடுகளில் ஒன்று என்பதும் உளவியலாளர் கருத்தாகும். பயம், மோசமான சூழல் அல்லது தொடரும் ஏற்கமுடியாத சூழல் போன்ற பெரும்பாலும் வருங்கால நிகழ்வுகளை எண்ணியே ஏற்படுகிறது. பயம் உங்களைப் பலப்படுத்துவதற்கே உதவுகின்றது. பயப்படும் மனமே பலப்படுகின்றது. மனோபலம் கூடும்போது செயலில் தெளிவும், முழுமையும் நிகழும். பயத்துக்கும் பலத்துக்கும் மிக நெருக்கமான தொடர்புண்டு. பயத்தினால் காரியத்திலிருந்து விலகிக்கொள்ளாது பலமடைய வேண் டும்.
என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ? எனச் சிந்தித்துக்கொண்டிருப்பதால் மனதில் பயம்தான் ஏற்படும். எனவே சிந்தித்துக் கொண்டிருப்பதை விட முயற்சித்துப் பார். கிடைத்தால் வெற்றி, இல்லையேல் அனுபவம். இரண்டுமே நமக்குத் தேவைதானே! முதலில் உங்களுக்குள் காணப்படும் பயத்தை வெல்லுங்கள். பின்னர் அடுத்தவர்களின் பயத்தை அகற்ற முன்வாருங்கள்.
பயம் வருவது இயல்புதான். பெரும்பாலும் அன்பு உள்ள மனதில் தான் பயமிருக்கும் என்பார்கள். நமக்கு வரும் பயத்தை எப்படிப் பார்த்தாலும் அதிலே ஒரு பலம் இருப்பதைக் காணலாம். அறிவைச் சரியாகப் பயன்படுத்தினால் பயம் ஒரு பலமாகும். வெற்றிகள் யாவும் பயம் தந்த பரிசுகள் தான். பயமில்லாமல் சாதனைகளும் இல்லை.
பயமறியாதவன் கல் நெஞ்சக்காரன். பயப்படுபவன் ஒரு போதும் பயமுறுத்தமாட்டான். பெற்றோருக்கு, உறவினருக்கு, சட்டத்துக்குப் பயப்படாதவர்கள்தான் இன்று வாள்வெட்டுக் கலாசாரத்திலும் போதைவஸ்துக் கடத்தல்களிலும், கலாசார சீரழிவுகளிலும், ஈடுபட்டுத் தம்மையும் குடும்பதையும், தமது சமூகத்தையும் பாழாக்குகிறார்கள். இவ்வாறான காரியங்களில் நாம் ஈடுபடக் கூடாது, இதனால் எமது கௌரவம், எதிர்காலம் ஆகியன சிதைவடையும் என மனம் பயம் கொள்ளுமாக இருந்தால் நிச்சயமாக, கீழ்த்தரமான இந்தச் செயற்பாடுகளில் இறங்க மாட்டார்கள். எனவே பயம் நல்லவற் [illegible]
பயத்துடன் கல்வி கற்கும் மாணவர்கள் பரீட்சையில் தோல்வியடையக்கூடாது என்ற நினைப்புடன் மிகவும் அவதானத்துடன், ஆழமாக, நிதானமாக, நேரத்தை வீண்விரயம் செய்யாது தேவையற்ற பொழுது போக்குகளில் ஈடுபடாது, கலாசார சீரழிவுக்கும் செல்லாது, போதைக்கு அடிமையாகாது, கல்வி இலக்கின் அடிப்படையில் கற்று இறுதியில் பட்டத்துடன் வெளியேறுவார்கள். இவர்கள்தான் சமூகத்துக்கு ஆரோக்கியமான, பொருத்தப்பாடுடையவர்களாக மிளிர்வர்.
உணவுப் பழக்கத்தில் கவனம் செலுத்து, உடற்பயிற்சி அவசியம், வயிற்றைப் பாரமாக்காதே, உயரத்துக்கு ஏற்ற உடல் நிறை, இவற்றை மனதில் கொள்ளாது எதற்கும் பயமில்லாமல் வாழ்க்கையை உண்பதிலும், குடிப்பதிலும் நிறைவு செய்பவர்கள் இறுதியில் நோயாளியாகின்றனர். பயத்தை வைத்து நோய்க்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்குபவர்கள் மிகப்பெரிய சுகதேகிகளாக வெளிவருகிறார்கள். எனவே மூன்றெழுத்துப் பயம் மூன்று எழுத்துப் பலத்தை எமக்கு வழங்குகின்றது. பயம் வந்தாலன்றி பக்திகூட வராது. பயமறியாத சிலர் ஆலயங்களில் திருடுகிறார்கள். பக்திக்கான உருவங்களையே திருட முன்வருகின்றனர். இவர்கள் முதலில் பயப்படவேண்டும். 'அரசன் இன்று அறுப்பான் இறைவன் நின்று அறுப்பான்' என்ற பயப்பாடு மனதில் தோன்றினால் மட்டும்தான் பயத்தினால் நன்மை கிட்டும். ஒவ்வொருவரும் பயபக்தியுடன் நடந்து கொண்டால் எதிர்காலம் ஒளிமயமாகும்.
மற்றவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்களோ என்ற பயம் மனதில் குடிகொள்ளுமாக இருந்தால் எச்சரிக்கையாகவும், கௌரவமாகவும், மற்றவர்கள் மதிக்கத்தக்கவர்களாகவும், மனித நேயம் உள்ளவராகவும், மிருகக் குணம் அற்றவர்களாகவும் வாழமுடியும். பயம்தான் ஒவ்வொருவரையும் எச்சரிக்கையாக வாழவைக்கிறது. இளம் வயதில் தம் இஷ்டத்துக்கு வாழ்ந்துவிட்டு முதுமை வரும்போது அவதிப்படுபவர்கள் பலர். பொதுவாக 40 வயது என்பது நோய்களின் ஆரம்ப கட்டமாகும். இளமையிலேயே முதுமை பற்றி எண்ணிப்பார்த்து ஆபத்தான காரியங்களில் ஈடுபடக்கூடாது. முதுமை குறித்துப் பயப்படுங்கள். நீங்கள் பயப்பிடும் அளவுக்கு முதுமையில் நிச்சயம் இளமையாகவும், நிம்பதியாகவும் வாழலாம். எந்த நட வடிக்கையானாலும் பொதுவாக மக்களுக்கு ஒரு பயம் மனதில் ஏற்பட வேண்டும். பயத்தை உரமாக்கிக்கொண்டு வாழப் பழக வேண்டும். பலம் மிக்க செயல்கள் நடக்கும். எல்லாமே ஆக்கபூர்வமாக மாறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “நாய்படாப் பாடுபடுத்தும் நோய்கள் வாய்விடாச் சாதிகளை அதிகம் வருத்துவதில்லையே”

கே.எஸ்.சிவஞானராஜா

நம் தொப்பையைக் குப்பையாக்கினால் அப்பனாலும் காப்பாற்ற முடியாது. ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது.

நாயிற்கடையாய்க் கேவலமாய் இருந்த என்னைத் தாயினும் சாலப் பரிந்து பாவியேனுடைய ஊனினை உருக்கிஉள்ளொளிபெருக்கிஉலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து சுகமளிக்கும் மருந்தைக் காண்பாரும் அருகிவிட்டனர். உண்பாரும் அருகி விட்டனர். தேடுவாரும் தூர விலகிவிட்டனர். அறுபது என்ற ஓய்வு எல்லை வயது வரையும், பெரும்பாலானவர்களுக்குக் கடமை என்கின்ற பொறுப்பு இருப்பதனாலன்றோ உடலும், உள்ளமும், உணவும் சீராகி நீடித்த பெறுமதியையும், பேறினையும், ஆயுளையும் பெறுகிறது. அன்று காலை ஒன்பது மணியிலிருந்து மாலை நான்கு மணிவரை எந்தவொரு அலுவலகமும் வலுக்கச்சிதமாக இயங்கும். மக்கள் அனைவருமே பயன்பெற்றார்கள். இப்போ என்னவென்றால், அலுவலகத்தில் கடவுளுக்குப் பயந்தவர்கள் மட்டும் கதிரையில் இருக்கிறார்கள். கடவுளையும், கடமையையும், கதிரையையும் ஏமாற்றுபவர்கள் பெரும்பாலும் சுயநலம் கருதிய ஹலோ! ஹலோ என்பதிலேயே அலுவலகத்தில் காலத்தைக் கடத்திப், பலப் பல நோய்களுக்குள் வீழ்ந்து விடுகின்றார்கள்.

“என் கடன் பணிசெய்து கிடப்பதேயல்ல
என் கடன் ஹலோ செய்து இருப்பதே”

இது ஒரு விதமான வருத்தமே. அலுவலக வேலை நிமித்தம் கதைத்தாலும் மன்னிக்க முடியும். அது சம்பந்தப்படாத, தனிப்பட்ட, குடும்ப, சிநேகித, வர்த்தக, வியாபார, சீட்டு, புடைவை, பிரத்தியேக வகுப்பு, வாகன, விழா, வெளியீடு இவ்வாறு பணிக்கு ஒவ்வாத, வேலைகளுக்கு அலுவலகங்களைப் பயன்படுத்துவதால் பொதுமக்களே பாவிகளாகின்றனர். இதன்மூலம் பாவிகளின் (சாபங்களே தற்போது பலிதமாகின்றன.) சாபங்களும் மனிதர்களுக்கு நோய்களைத் தந்து மனிதர்களைப் படாதுபாடு படுத்துகின்றன. ஆகவே இதிலிருந்து, நாம் தெரிந்து கொள்ளவேண்டியது யாதெனில், எந்தவொரு அலுவலகமோ, எந்தவொரு நிறுவனமோ அதனதன் இலக்குக்கும் சேவைக்கும் கடமைக்கும் பங்கம் ஏற்படுமளவுக்கு ஒரு நபரோ அல்லது ஒரு குழுவோ, அல்லது பலரோ இயங்குவார்களாக இருந்தால் அவர்கள் நோய்களைத் தமக்கு மட்டுமல்ல, தம் குடும்பத்தவர் களுக்கே விலைக்கு வாங்கும் மனித முகவர்களாக இருப்பார்கள்.

### உண்மை

ஒரு தடவை முக்கிய விடயமாக ஓர் அரச அலுவலகத்துக்குச் சென்றிருந்தேன். நேரம் இரண்டு மணியைத் தாண்டி விட்டது. (ஹலோ! என்று தொடங்கினார். ஒப்படைக்கக் கொண்டு சென்ற விடயதாதிகளோடு அந்தப் பெரிய அறைக்கு முன்பாக இருத்தப்பட்டேன். சுமார் முப்பது நிமிடங்களாகக் காத்திருந்தேன். ஏன்நோய் என்று கூடக் கவனிக்கவேயில்லை. வேறு வழியின்றி அலுவலகத் துவார பாலகரிடம் கையளித்து விட்டு, முச்சக்கர வண்டியில் ஏறி வந்து விட்டேன். இன்றுவரை அது கிடைத்தது பற்றி எந்தவிதத் தகவலும் இல்லை. ஹலோ என்று தொடங்கினால், அது எவராக இருந்தாலும் அவரது கண்போற போக்கையும், அவரது வாய்படும் பாட்டையும், அவரது உடல் மொழிகளையும் நாம் பார்த்து புழுங்கி அவிய வேண்டியதுதான்.

வந்தவரை என்ன எது என்று விசாரிக்க முடியாத ஓர் அலுவலர் தேவை தானா? நல்லூர் முருகனையும், சந்நிதி முருகனையும் மிகவும் எளிதாகச் சந்தித்துப் பேசித் திரும்பிவிடலாம். மனிதனை அதுவும் கொஞ்சம் படித்தவனைச் சந்திப்பதென்றால் நோய் வந்தால் தான் சந்திக்கலாம். அல்லது ஓய்வூதியம் இளைப்பாறிய பின் மிக இலகுவாகச் சந்தித்து விடலாம். பதவியிலிருக்கும்போது (ஒரு சிலருக்கு) ஆணவ நோய் பீடிப்பது ஒரு வருத்தந்தான். இதற்கு மருந்துகள் பல உண்டு. மருந்து கொடுத்தால்தானே! அதைச்சாப்பிட்டால் தானே! மருந்து சாப்பிடச் சுகம் வரும்.

அலுவலக நோயினால் (ஒவ்வொரு வீட்டிலும் என்று சொல்ல முடியாது) பொரும்பாலான வீடுகளில் பின்னப்பட்ட வருத்தங்கள் தொடர்கின்றன. ஒரு தலைவனுக்கோ அல்லது ஒரு தலைவிக்கோ, அல்லது ஒரு பிள்ளைக்கோ (அதுவும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எடுக்கின்ற பிள்ளையாக இருக்க வேண்டும்) அழுத்தம் இருக்குமாயின் அந்தக் குடும்பம் என்ன வசதியாக இருந்தாலும் நாய் படாதபாடு படும்.



எனவே தொ(ல்)லை பேசிகளினாலேயே, கொலை, கொள்ளை, களவு, கடத்தல், கற்பழிப்பு, பயமுறுத்தல், சீர்கேடு, துஷ்பிர யோகம், போலிகள், போலித்திருமணம், கூடாநட்பு, கூடாவொழுக்கம், பாலியல் சுரண்டல்கள், ஆபாச வெளிப்பாடுகள், இரகசிய தொடர்புகள், போதைப் பொருள்கள் என்று பலப்பல துன்பங்களைச் சுமப்பதனால் நோய் வசமாகி வாகனங்களின் வேகமதில் சுழன்று ஒவ்வொரு நிமிடத்தையும் தொலைத்து வருகின்றோம்.

நாம்படும் இப்பாடுகள் வாய்விடாச் சாதிகளை ஒருபோதும் வருத்துவதில்லை. அவை எவற்றை யும் ஒளிவுமறைவின்றி வெளிப்படையாகச் செய்வதனால், நோய்கள் எதுவுமே வாட்டுவதில்லை. அப்படி வாட்டினால்கூட, சுதந்திரமாகத் திரிந்து, தேடி, மூலிகைப் புல்லைச் சாப்பிட்டு குணமாக்கும். கட்டாகாலிகளாக வீதிகளில் அலைந்து திரியும் பிராணிகளும், கால்நடைகளும் தாம் தமக்குக் கைவைத்தியம்போல, மாற்றுவகை மருந்துத் தீனிப் புற்களை உண்டு, நோய்களைக் குணமாக்கிவிடும். அதற்கும் குணமாகாவிடின், பட்டினிகிடந்து, நோய்களைப் பறக்கச் செய்யும்.

நாம் ஒழுங்காகக் கடமைகளிலோ அல்லது சாப் பாட்டிலோ கவனம் செலுத்தாத காரணத்தினால், நாம் நாய் படாப் பாடு படுத்தும் நோய்களினால் அவதிப்படுகின்றோம். இதற்கு விடுதலை இல்லையா? உண்டு. எப்படி? எதையும் ஆற அமர–தீர இருந்து–யோசித்து அவதிப்படாமல், அவசரப்படாமல், நடைமுறைப்படுத்துவதே அவசியம் தேவை. அடுத்து பன்றிகள் மாதிரி கண்ட கண்ட சாப்பாடுகள் உண்பதை அறவே விடுத்து நேரத்துக்கு வீடுகளிலே சாப்பிடுவதுதான். மிகவும் வேண்டற்பாலதாகும். இதற்கு மாறாகப் பெற்றோரும் வீட்டில் இருப்பதில்லை என்பதுதான் யதார்த்தமான உண்மையாகும். அடுக்

> நாம் எதிலுமே ஒழுங்காகக் கடமைகளிலோ அல்லது சாப்பாட்டிலோ கவனம் செலுத்தாத காரணத்தினால், நாம் நாய் படாப் பாடுபடுத்தும் நோய்களினால் அவதிப்படுகின்றோம். இதற்கு விடுதலை இல்லையா? உண்டு எப்படி? எதையும் ஆற–அமர–தீர இருந்து யோசித்து அவதிப்படாமல், அவசரப்படாமல், நடைமுறைப்படுத்துவதே அவசியம் தேவை. அடுத்து பன்றிகள் மாதிரி கண்ட கண்ட சாப்பாடுகள் உண்பதை அறவே விடுத்து நேரத்துக்கு வீடுகளிலே சாப்பிடுவதுதான், மிகவும் வேண்டற்பாலதாகும்.

களை புகைப்பதில்லை, அம்மியோ அரைப்பதில்லை, தடுக்கினில் இருப்பதில்லை, தாம்பத்தியம் இனிப்பதில்லை. இவை யாவும் ஒருங்கு சேர்ந்து மனித வம்சத்தையே நோய்களின் சாம்ராச்சியமாக்கி விட்டது. இதிலிருந்து மீளவே வழியில்லையா? உண்டு. உல்லாசமாக வாழ நினைக்காதே. குளிரூட்டிய வாகனத்தில் உலா வருவதற்குத் துணியாதே. எது எளிமையானதோ, எது இலகுவானதோ, எது சாதாரணமானதோ அதை விரும்புவாயாக. நோகாமல்–கொள்ளாமல் எது வந்தாலும், அது பணமாக இருந்தாலும் சரி, சீதனமாக யிருந்தாலும்சரி அவை உன்னை நாய் படாப் பாடுபடுத்தும். வேணுமென்றால் வாங்கிப் பார்! பையப் பையத் தோற்றுக் கொண்டே போவாய். பிற கென்ன உனக்கும் வருத்தம் தான். பணம் சொகுசாக வருவதில்லை!

### இதைவிட

இதயக்கோளாறு, மாரடைப்பு, காசநோய், நுரையீரல் புற்றுநோய், எச்.ஐ.வி.நோய், கொலரா, டெங்கு, சின்னம்மை, பெரியம்மை, தொழுநோய், மூளைக்காய்ச்சல், கக்குவான்இருமல், சிபிலிஸ், எபோலா, பிளேக், சிக்குன்குனியா, பன்றிக் காய்ச்சல், மலேரியா, பறவைக்காய்ச்சல், நெருப்புக்காய்ச்சல், நீரிழிவு, கொலஸ்ரோல், ரூமெற்றிக் ஆகியன மனிதர்களோடு நெருக்கமாக உறவாடுகின்றன. அவர்களைச் சிப்பிலியாட்டுகின்றன. கொஞ்ச நஞ்சமல்ல படாதபாடு படுத்துகின்றன.

இதயக்கோளாறு காரணமாக உலகில் ஒன்றே முக்கால் கோடி மக்கள், 2011 தொடக்கம் 2012 வரை சாவடைந்தனர். எச்.ஐ.வி. நோயினால் மூன்றுகோடி மக்கள் இதுவரை சாவடைந்துள்ளனர்.

காசநோய், நுரையீரல் புற்றுநோய் காரணமாக, இருபத்தேழு லட்சம் பேர் சாவடைந்துள்ளனர்.


மற்றைய நோய்கள் எல்லாவற்றையும் தொகுத்துப் பார்ப்போமாக இருந்தால் நாள் தோறும் லட்சோப லட்சம் மக்கள் நோய்களினால் இறந்து கொண்டே போகிறார்கள்.

மற்றும் விபத்துக்கள், தற்கொலை, கொலை ஆகியவற்றினால் ஏற்படும் இறப்புக்கள் பற்றித் தினமும் ஊடகங்கள் மூலமாக வாசித்து ஏங்குகின்றோம்.

இந்த நிலையில், வாய்விடாச்சாதிகளிலும் பார்க்க மனிதன் தன் ஒழுக்க விழுமியங்களிலிருந்து தவறுவதனால் நாய் படாப்பாடுபடுத்தும் நோய்களுக்குள் அகப்பட்டு மீள அடிமையாகி விட்டான். இனி என்ன? அவ்வளவு தான் மனிதன் மாறிவிட்டான். உலகை மாற்றியும் விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறைகளை நிறைவாக்கிய அன்பு உள்ளம்...!



ஒரு கிராமத்தில் ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தன்னுடைய வீட்டுக்குத் தேவையான தண்ணீரைத் தினமும் ஆற்றிலிருந்து எடுத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

தண்ணீர் எடுத்து வருவதற்கென அவன் இரண்டு பானைகளையும் தன்வசம் வைத்திருந்தான். அந்தப் பானைகளை ஒரு நீளமான தடியின் இரண்டு முனைகளிலும் தொங்க விட்டு, தடியைத் தோளில் சுமந்து செல்வான்.

அந்த இரண்டு பானைகளில் ஒன்றிலே சிறிய துவாரம் இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும் பொழுது, பாதியளவு நீரே இருக்கும்.

எந்தக் குறையுமின்றி குழு நிறைவாக இருந்த பானை தன் திறமையைப் பற்றி பெருமையாகக் கூறிக் கொண்டது. குறையுள்ள பானையைப் பார்த்து எப்பொழுதும் கிண்டலும் கேலியும் செய்து கொண்டே இருந்தது.

இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. கேலியையும் கிண்டலையும் பொறுத்துக் கொள்ள முடியாத பானை அதன் எஜமானனைப் பார்த்துப் பின் வருமாறு கேட்டது.

''ஐயா! என் குறையை நினைத்து நான் மிகவும் மன வருத்தமடைகிறேன். என்மீதுள்ள குறையால் வரும் வழியெல்லாம் தண்ணீர் சிந்துகிறது. உங்களின் வேலைப் பளு வினை அதிகரிக்கிறது. இதனால் எனக்கு மிகவும் கவலையாகஉள்ளது. என் குறையை நீங்கள் தயவு கூர்ந்து சரி செய்யுங்களேன்" என்று பானை கூறியது.

அதற்கு விவசாயி, "பானையே! நீ நாம் வரும் பாதையில், உன் பக்கம் இருக்கும் அழகான பூச்செடிகளின் வரிசையைக் கவனித்தாயா? உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னரே தெரியும். அதனால்தான் தண்ணீர் சிந்தும் வழிகளில் பூச்செடி விதைகளை விதைத்து வைத்தேன். அவை இன்று பெரிதாக வளர்ந்து தினமும் அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்து நான் வீட்டை அலங்கரிக்கிறேன். மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன்" என்றான்.

இதைக் கேட்ட பானை மனம் மகிழ்ந்து தான் சொல்லாமலே தனது குறையை அறிந்து கொண்டு அதனையும் நிறைவாக மாற்றிய விவசாயிக்கு மனதிற்குள் நன்றி சொன்னது.

அன்றிலிருந்து தன்னைக் கீழ் நிலைப் படுத்தி எண்ணுவதை நிறுத்திக் கொண்டது. அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப் படாமல் தன் வேலையைக் கருத்துடன் செய்யத் தொடங்கியது.


இறைவன் என்னும் தலைவன் நாம் சொல்லாமலேயே எமது குறைகளை அறிந்து கொண்டு அதனையும் நிறையாக்க வழி வகுத்திருக்கின்றான்.!!

அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டிருந்தால், எங்களால் எந்த ஒரு வேலையையும் சரிவரச் செய்து முடிக்க இயலாது என்பதே இக் கதையின் நீதி.

என்.துஜா.

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....





உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.



ஜெ.நிதுஷன்,
தரம் - 3
யா/நல்லூர் ஸ்தான சீசீ தக பாடசாலை.

## வரலாற்றில் இன்றைய தினம்



1641 - மேச்சன்ற் றோயல் கப்பல் ஒரு பில்லியன், அமெரிக்க டொலர் பெறுமதியான பொக்கிசத்துடன் பயணித்த வேளை, நிலம் முடிவு எனும் பகுதியில் கடலில் காணாமல் போனது.

1846 - விண்ணியலாளர்கள் ஏர் பைன் ஜீன் யோசப் லே ஹெியர் ஜோன் கொட் அடம்ஸ் மற்றும் ஜோன் கொட் பிறைட் கோல் ஆகியோர் இணைந்து நெப்ரியூன் கண்டு பிடிப்பில் ஈடுபட்டனர்.

1908 - கனடா அல்பேட்டாவில் அல்பேட்டா பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

1911 - அமெரிக்க அஞ்சல் திணைக்களத்தின் கீழ் முதன் முதலாக அதிகார பூர்வமான விமானத்தால் ஏர்ள் ஒவிங்ரன் விமானியால் கடிதங்கள் விநியோகிக்கப்பட்டன.

1932 - ஹெஜாஸ் மற்றும் நெஜ்ட் இராச்சியங்கள், சவூதி அரேபிய இராச்சியம் என மீள் பெயரிடப்பட்டன.

1943 - இத்தாலிய சோஸலிஸ்ட் குடியரசு எனும் பெயரில் நாஸி பொம்மை அரசு உருவாக்கப்பட்டது.

1983 - ஒயின் கிற்ஸ் மற்றும் நெவிஸ் ஆகிய மேற்கு இந்தியத் தீவுகள் ஐ.நா.சபையில் இணைந்தன.

1999 - மார்ஸ் கிளைமேற் ஒபிற்றர் எனும் 1988இல் ஏவப்பட்ட செயற்கைக் கோளுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டதாக நாஸா அறிவித்தது.

2002 - புரிந்துணர்வு உடன்படிக்கையை அலட்சியம் செய்துவிட்டு, நெடுந்தீவில் மிகப்பெரிய கடற்படை முகாம் அமைப்பு என கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் கடும் ஆட்சேபம்.

2004 - ஹெய்ட்டியில் ஜீன் எனும் பெயரிடப்பட்ட சூறைக் காற்றில் ஏற்பட்ட பெருவெள்ளம், நிலச்சரிவு ஆகியவற்றில் 3000 பேர் உயிரிழந்தனர்.

2006 - யாழ்.பற்றிக்ஸ் கல்லூரியில் கைதான இளைஞர்கள் நீதிமன்றால் விடுவிப்பு.
- தமிழ்-முஸ்லிம்கள் படுகொலை குறித்துப் பக்கச் சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கொழும்பு பேராயர் கோரிக்கை.
- மண்டைதீவில் மீளக் குடியமர படையினர் புதிய நிபந்தனை.
- பெரும் சிக்கலில் குடாநாடு என ஐ.நா. அமைப்புக்கள் எச்சரிக்கை
- சு.க.ஜே.வி.பி முறுகல் முற்றி வெடித்தது. சோமவன்சாவால் கட்சி நாசம் என மைத்திரிபால சாடல்.
- தமிழக் கூட்டமைப்பைத் தொடர்ந்து சங்கரியும், சித்தார்த்தனும் இந்தியப் பயணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவும் மக்கள் பேரவையும் ஒரு நோக்கம் இரு கோசம்

2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி ஆட்சிப் பீடத்திலிருந்து மகிந்த ராஜபக்ச அகற்றப்பட்டார். அதனைத் தொடர்ந்து ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் அவரால் ஆட்சிப் பீடத்துக்கு வர முடியவில்லை.

ஜனாதிபதியாக இருந்து அகற்றப்பட்ட பின்னர், இலங்கையின் முன்னாள் தலைவர்கள் எவரும் மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கு ஆசைப்படவில்லை. ஆனால் மகிந்த ராஜபக்ச மாத்திரம் அதற்கு விதிவிலக்கு. இலங்கையின் ஆட்சிப் பீடத்தை மீண்டும் தான் அலங்கரிக்க வேண்டும் என்பதில் வேணவாவுடன் இருக்கின்றார்.

மகிந்த தேர்தலில் தோற்றவுடன் ஒதுங்கவில்லை. ஆட்சியை மீளக் கைப்பற்றுவதற்காகத் தனது போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றார். நல்லாட்சி அரசுக்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் நஞ்சை விதைக்கின்றார். "இன வாதம்" என்பது மாத்திரமே அவரின் வாக்கு ஆயுதமாக இருக்கின்றது.

மகிந்த ஆதரவு அணியினரால் இரண்டு தடவைகள் சிங்கள மக்களை ஒன்றிணைத்து ஊர்வலம் நடத்தப்பட்டது. படையினரை நல்லாட்சி அரசு காட்டிக் கொடுக்கின்றது, சிங்கள மக்களின் பிரச்சினைகளை இந்த அரசு தீர்த்து வைக்க முயலவில்லை என்ற கோசங்களை முன்னிறுத்தி ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.

ஆட்சித் தரப்பாக இருக்கின்ற மைத்திரி - ரணில் அரசுக்கு எதிராக, சிங்கள மக்களைத் திசை திருப்பும் வகையில் ஊர்வலங்களில் கோசம் எழுப்பப்பட்டிருந்தது. சிங்கள மக்களின் நலன்களில் அக்கறை கொண்டவர்போல் மகிந்த இதனூடாகத் தன்னைக் காண்பித்துக்கொண்டார். ஆனால், அவரது நோக்கம் முழுவதும், சிங்கள மக்களின் நலன்களைப் பகடைக்காயாக வைத்து, மீண்டும் ஆட்சிப் பீடம் ஏறுவதுதான்.

மறுபுறம் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் மகிந்தவின் வழியையே பின்பற்றிக் களமிறங்கியிருக்கின்றனர்.

தமிழ் மக்களால் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டு வருகின்ற இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினரும், பொதுத் தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றவர்களும் இணைந்து உருவாக்கிய தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் ஊர்வலம் நடைபெற இருக்கின்றது.

தாம் இழந்துபோன பதவிகளை, அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தமிழ் மக்கள் பேரவையை இவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றார்கள்.

தமிழர் தாயகத்தில் சிங்கள பௌத்த மயமாக்கலை உடன் நிறுத்தக் கோரியும், தமிழர் தேசத்தில், தனித்துவமான இறைமை, சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான கூட்டாட்சித் தீர்வை வலியுறுத்தியும், போர்க் குற்றங்களுக்கும், இனப் படுகொலைக்குமான பன்னாட்டு விசாரணையை வலியுறுத்தியும் கோசங்களை, முன்வைத்து ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ச எவ்வாறு சிங்கள மக்களின் நலன்களை முன்னிறுத்தும் கோசங்களை வெளிப் பார்வைக்கு வைத்தாரோ அதேபோன்றுதான், இவர்களும் தமிழ் மக்களின் நலன்களை வேணவாக்களை முன்னிறுத்தும் கோசங்களை முன்வைத்துள்ளனர்.

ஆனால், உண்மையான நோக்கம் முழுவதும் பதவியை மீளப் பெற்றுக் கொள்வதற்கான ஆதரவைத் திரட்டுவது மாத்திரம்தான். தமிழ் மக்களின் நலன்களில் அக்கறை உள்ளவர்களாக இருந்திருந்தால், மகிந்த ஜனாதிபதியாக ஆட்சியில் இருந்தபோதும் இதே அநீதிகள் நடைபெற்றபோது, இவ்வாறு கிளர்ந்தெழுந்திருப்பார்கள். ஆனால் அப்போது அவர்கள் எதையும் செய்ய முன்வரவில்லை.

புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பு வரைவு சமர்ப்பிக்கப்பட இருக்கின்றது. இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் மற்றும் அமைச்சர்கள் தென் பகுதி மக்களிடம், தமிழ் மக்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதைப் பல்வேறு விதமாக எடுத்துச் சொல்லி வருகின்றனர்.



இந்தச் சூழ்நிலையில் சாதாரண சிங்கள மக்களின் மனங்களில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கும், அதனூடாக மகிந்தவுக்குச் சாதகமான நிலை ஏற்படுத்துவதற்குமே, இந்த ஊர்வலம் வழிசமைக்கப் போகின்றது. தமது அதிகார பதவிக்காக தமிழ் மக்களுக்காகக் கனிந்து வரும் நல்ல காலத்தைக் குழப்பியடிப்பதை மாத்திரமே இந்த ஊர்வலம் விளைவாகத் தரப்போகின்றது. இதைத் தவிர வேறு எதுவும் இந்த ஊர்வலத்தால் கிடைக்கப் போவதில்லை.



# புரட்டாதி மாத சனிக்கிழமைகளில் சனீஸ்வர வழிபாடு

காரை.எம்.பி.அருளானந்தன்

புரட்டாதி மாதந்தோறும் வரும் சனிக்கிழமைகளில் இந்துப் பெருமக்கள் விரதம் அனுஷ்டித்து வருகின்றார்கள். சனிபகவானை நினைத்து அனுஷ்டிக்கப்படும் விரதம் இது. சனியைப் போன்று கொடுப்பவனும் இல்லை. கெடுப்பவனும் இல்லையென்று சொல்வார்கள்.

அதிகாலையில் எழுந்து நீராடி தோய்த்துலர்ந்த ஆடையணிந்து ஆலயம் சென்று சனிபகவானுக்கு அர்ச்சனை வழிபாடுகளை நிறைவேற்றி வீடுவந்து சைவமுறைப்படி சமைத்து, காகத்துக்குச் சாதம் வைத்து விரதம் அனுஷ்டிப்பர், வாழை இலையிலே பழம், பாக்கு, வெற்றிலையுடன் அன்னம், அதற்கு உகந்த கறிகளைச் சேர்த்து சனீஸ்வரனுக்கு நிவேதனம் பண்ணிவிட்டுச் சாப்பிட வேண்டும்.

சூரிய பகவானுக்கும், சாயாதேவிக்கும் மகனாகப் பிறந்தவர் சனி பகவான். இவர் காசிக்குச் சென்று தன்னுடைய பெயரில் ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்து தினமும் வழிபாடு செய்து வந்தார். அதனாலே சிவபெருமானின் அருளைப்பெற்றார். அது மட்டுமல்ல சிவனிடமிருந்து ஈஸ்வர பட்டத்தைப் பெற்றார் சனீஸ்வரர்.

கிரகங்களில் ஈஸ்வர பட்டம் பெற்ற பெருமை சனிக்கு மட்டுமே உண்டு. இயமன் ஒரு முறை தன் தண்டத்தால் சனியின் ஒரு காலில் அடித்ததால் ஊனம் ஆனார். இதனால், ஒரு காலை விந்தி, விந்தி மெதுவாக நடப்பார். சனீஸ்வரருக்கு குளிகன் என்ற மகன் இருக்கிறார்.

வாழ்க்கையிலே ஒருவருக்குப் பொங்கு சனி வந்துவிட்டால் பொன்னும் பொருளும் வந்துசேரும். மங்குசனி வந்தால் நோய், துன்பங்களைக் சந்திக்க வேண்டிவரும். ஒவ்வொருவருடைய ராசியிலும் அவர்களுடைய ஆயுள் முடிவதற்குள் ஏழரை வருடம் சஞ்சாரம் செய்பவர் சனீஸ்வரர்.

உயிருக்கு ஆபத்து, பொருள் விரயம் முதலான நோய்களைக் கொண்டு மானுடர்களை ஆட்டிப்படைப்பவர் சனி.

நிடத நாட்டு அரசன் நளச்சக்கரவர்த்தி. இவன் விதர்ப்பநாட்டு இளவரசியான தமயந்தியைத் திருமணம் செய்து கொண்டான்.

இந்த சுயம்வரத்தில் கலந்து கொண்ட தேவர்கள் தமயந்தி தங்களுக்குக் கிடைக்காத வெறுப்பில் நளனைச் சனியால் சங்கடங்களை ஏற்படுத்தச் சூழ்ச்சி செய்தனர்.

இதன்படி நளனைச் சனி பிடித்தது. அதிலிருந்து சூதாட்டத்தின் காரணமாக நாட்டை, வீட்டை, மனைவியை இழந்து கார்க்கோடன் என்ற பாம்பினால் கடியுண்டு சுய உருவத்தை இழந்து காட்டில் திரியலானான் நளன்.

இந்த வேளையில் நாரதர் நளனைச் சந்தித்து "நீ தீர்த்தயாத்திரை செய்," திருநள்ளாறு தலத்துக்குச் சென்று சனி பகவானை வழிபாடு செய்-என்றார். இவ்வாறு புண்ணிய தீர்த்தங்களில் நளன் மூழ்கி எழுந்து திருநள்ளாறு சென்று சனி பகவானை வழிபட்டு வேண்டினார்.

சனி அவனை விட்டுவிலகினார். அத்துடன் சனிபகவான் நளனைப்பார்த்து நளராஜனே! எவர் உன்னுடைய வாழ்க்கையான நளசரிதத்தைப் படிக்கிறார்களோ அவர்களை நான் தொடமாட்டேன். என்னுடைய பெயர்ச்சிகளின் போது அவர்களுக்கு எந்தவித துன்பமும் தரமாட்டேன்-என்றார். இத்தகு வழிபாட்டு மேன்மை பொருந்திய புரட்டாதி சனிக்கிழமைகளில் சனீஸ்வரனை வழிபட்டு சிறப்புப் பெறுவோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"வேகமா ஓடினா மூச்சுப் பிடிக்குதே டாக்டர்…"
"அப்ப மெதுவா ஓடுங்க!"
"மெதுவா ஓடினா பொலிஸ் பிடிக்கிறாங்க டாக்டர்…!?"

ஆசிரியர்: உனக்கு எந்த மிருகம் பிடிக்கும்…?
மாணவன்: பூனை பிடிக்கும்.
ஆசிரியர்: ஏன்?
மாணவன்: பூனை குறுக்க வந்தா என்னோட பாட்டி என்னப் பாடசாலைக்கு அனுப்ப மாட்டாங்க!





நேற்றைக்கு நீங்க யாரோ ஒரு அழகான பொண்ணோட சினிமாவுக்குப் போனீங்களாமே?
ஆமாம்மா; இந்தக் காலத்துப் படங்கள் எல்லாம் குடும்பத்தோட பார்க்கிற மாதிரியா இருக்கு?

"வாழ்க்கையின் மிகப் பெரிய சந்தர்ப்பம் எது?"
"மனைவியின் கன்னத்தில் கொசு உட்காருவது."



# ஓய்வு பெற்றார் எஸ். ஜானகி



பாடுவதிலிருந்து முழு ஓய்வு பெறுவதாக பிரபல பின்னணிப் பாடகி எஸ்.ஜானகி அறிவித்துள்ளார். 1957 ஆண்டு விதியின் விளையாட்டு படத்தில் பின்னணிப் பாடகியாக அறிமுகமானார் எஸ். ஜானகி. கடந்த 60 வருடங்களாக இடைவெளி இல்லாமல் பல மொழிகளில் பாடிவந்த ஜானகி, இந்த அறிவிப்பை தற்போது வெளியிட்டுள்ளார்.
அனூப் மேனன், மீரா ஜாஸ்மின் நடித்துள்ள மலையாளப் படத்தில், தாலாட்டு பாடல் ஒன்றை அவர் பாடியுள்ளார். அதுவே தனது கடைசிப் பாடல். இனிமேல் படத்துக்காக மட்டுமல்ல எந்த வொரு நிகழ்ச்சியிலும் கூடப் பாடமாட்டேன் என்றும் ஜானகி அறிவித்துள்ளார்.
ஜீவா, நயன்தாரா நடித்த திருநாள் படத்தில் வந்த தந்தையும் யாரோ என்ற பாடல் தான் ஜானகி கடைசி யாக பாடிய தமிழ்ப் பாடல் ஆகும்.
தனது திரையுலக வாழ்வில் 48 ஆயிரம் பாடல்களைப் பாடியுள்ள இவர் 4 தேசிய விருதுகளையும், 32 மாநில விருதுகளையும் பெற்றுள்ளார். 2013ஆம் ஆண்டு அவருக்கு பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டது. ஆனால், தாமதமாக வழங்கப்பட்டது என்று காரணம் சொல்லி, அந்த விருதை வாங்கிக் கொள்ள மறுத்தார்.
இந்த நிலையில் ஜானகியின் ஓய்வு அவரது ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

பாரதி @AB_Twitz
யாரிடமும் எதிர்பார்ப்பையும் உருவாக்காமல் எதையும் எதிர்பார்க்காமலும் இடைவெளியுடன் பழகுவதே நல்ல புரிதல்.
↩ 1 ♥ 1



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

மேடம்: சுயநலம் கருதி. சிலர் உதவ முன்வருவர். தொழில் வியாபாரத்தில், அதிகம் பணி புரிந்தால் மட்டுமே எதிர்பார்த்த இலாபம் வரும். உடல் நலனில் கவனம் தேவை. மாணவர்கள் கவனத்துடன் படிப்பதால் தரத்தேர்ச்சி சீராகும்.

இடபம்: புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க, தேவையான மாற்றம் செய்வீர்கள். பணவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும்.

மிதுனம்: மனதில் குழப்பம் வந்து விலகும். குடும்பத்தினருடன் வாக்குவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், பணவரவை விட செலவு அதிகரிக்கும். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

கடகம்: உற்சாக மனதுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், போட்டி மறையும். பணவரவு திருப்திகரமாகும். நண்பர்களுடன் பழைய நினைவுகளைப் பேசி மகிழ்வீர்கள்.

சிங்கம்: சிறு செயலையும் நேர்த்தியுடன் செயவீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். இலாபம் அதிகரிக்கும். குடும்ப விவகாரத்தில் சுமுகத் தீர்வு கிடைக்கும். பிறருக்கு உதவிக்கரம் நீட்டுவீர்கள்.

கன்னி: செயல்களில் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உள்ள குறைபாடுகளை, உடனடியாகச் சரி செய்வது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

துலாம்: உங்கள் கருத்துக்களை, மற்றவர் தவறாக உணர்ந்து கொள்ளலாம். குடும்ப விடயங்களைப் பிறரிடம் பேசவேண்டாம். தொழில், வியாபாரத்தில், இலாபம் சுமாராக இருக்கும். திடீர் பயணங்களை மேற்கொள்ள நேரிடலாம்.

விருச்சிகம்: குடும்ப ஒற்றுமையைப் பாதுகாக்க முயல்வீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

தனுசு: உங்கள் பேச்சில் வசீகரம் உருவாகும். சமூகத்தில் மதிப்புப் பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க, கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்துவீர்கள். ஆதாயம் உயரும். இயன்ற அளவில் தானம் செய்து மகிழ்வீர்கள்.

மகரம்: எதிலும் விடாமுயற்சி தேவைப்படும். பொறுமையால் சிரமத்தைத் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் சீராக இருக்கும். பெண்கள், ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர்.

கும்பம்: நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், புதிய மாற்றம் செய்வீர்கள். இலாபம் உயரும். பெண்கள், பிறர் பார்வை படும்படி, அதிக பணம் செலவு செய்ய வேண்டாம். ஆரோக்கியம் பலம் பெறும்.

மீனம்: சவால்களை ஏற்று செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில், புதிய சாதனை ஏற்படும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 4 | | | 7 | 5 |
| | 1 | | | 6 | 7 | | | 3 |
| 8 | | | 3 | 5 | | 1 | | |
| | | | 4 | 1 | | | | |
| | 6 | 2 | | | | 8 | | |
| | | | | 7 | | | | |
| 4 | | | | 9 | | 3 | | 6 |
| | | 1 | 7 | | 4 | | | |
| 9 | | | | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 8 | 3 | 7 | 4 | 2 | 5 | 1 |
| 5 | 3 | 1 | 9 | 2 | 6 | 4 | 8 | 7 |
| 2 | 7 | 4 | 5 | 8 | 1 | 6 | 9 | 3 |
| 3 | 8 | 5 | 4 | 1 | 2 | 7 | 6 | 9 |
| 4 | 1 | 6 | 7 | 9 | 5 | 8 | 3 | 2 |
| 9 | 2 | 7 | 8 | 6 | 3 | 5 | 1 | 4 |
| 1 | 4 | 2 | 6 | 5 | 9 | 3 | 7 | 8 |
| 7 | 5 | 9 | 2 | 3 | 8 | 1 | 4 | 6 |
| 8 | 6 | 3 | 1 | 4 | 7 | 9 | 2 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை

புரட்டாதி-08
சனிக்கிழமை -24.09.2016
திதி: நவமி பி.இ.06.00
நட்சத்திரம்: திருவாதிரை மு.இ.07.53
ராகுகாலம்:09.02-10.32 வரை
சுபநேரம்: 03.02-04.32 வரை



# வாழைப்பழ பாயசம்

### தேவையான பொருள்கள்:

அரிசி : 100 கிராம்
சர்க்கரை : 200 கிராம்
தேங்காய்ப் பூ : 1/2 கப்
ஏலக்காய் : 5
முந்திரி : சிறிதளவு
மஞ்சள் வாழைப்பழம் : 2
(மிக சிறிய துண்டாக நறுக்கியது)

### செய்முறை:

அரிசியை நன்றாகச் சுத்தம் செய்து ஒரு மணி நேரம் ஊற வைக்கவும். ஊறிய அரிசியையும், தேங்காயையும் நன்றாக அரைத்துக் கொள்ளவும்.
அரைத்த அரிசி, தேங்காய் கலவை அடுப்பில் வைத்துக் கிளறவும். அடுப்பை மிக சிறியதாக எரியவிடவும்.
மாவைச் சேர்த்து அரிசிக் கலவையுடன் நன்றாக வேகவிட வேண்டும். எல்லாம் சேர்ந்து கொதித்தபின் வாழைப்பழத்தைப் போட்டு 2 நிமிடம் கிளறி இறக்கவும். நெய்யில் வறுத்த முந்திரியையும், ஏலக்காய் தூளையும் போட்டு இறக்கவும். சுவையான வாழைப்பழ பாயசம் தயார்.




# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650. | – | 700 | 800 | 800 | 600 |
| நண்டு | 250 | 400 | – | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 700 | – | 600 | 700 | 800 | – |
| பாரை | 550 | 600 | – | 800 | 600 | 600 | 500 |
| சுறா | 500 | 700 | – | 800 | 800 | – | – |
| சீலா | 300 | 500 | – | 600 | 500 | 500 | 400 |
| விளை | 650 | 500 | – | 600 | 450 | – | 500 |
| முரல் | 300 | 400 | – | 500 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | – | 400 | 450 | – | 400 |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 350 | – | – | 500 | 250 | – |
| திரளி | 300 | 300 | – | 150 | 300 | 200 | 300 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 350 |
| சூடை | 150 | 200 | – | 200 | 120 | 150 | – |
| ஒட்டி | 300 | 200 | – | – | 300 | 350 | – |
| திருக்கை | 150 | 300 | – | 400 | 400 | 200 | 270 |
| மதனம் | 150 | 200 | – | 400 | 400 | – | 250 |
| கொய் | 100 | 150 | – | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 400 | – | 400 | 400 | 600 | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 300 | 300 | – |

## அதிகளவு கோபம் வரும் உணவுப் பொருள்கள்

- உணவு உட்கொள்வதாலும், உடற்பயிற்சியில் ஈடுபடுவதாலும், மன அமைதி கிடைத்து, சந்தோசத்தை உணர முடியும் என்பது தெரியும். ஆனால் ஒருசில உணவுகளை உட்கொண்டால், அவை மன நிலையைக் கெடுப்பதோடு, எரிச்சலையும், கோபத்தையும் தூண்டும்.
- காரமான உணவுகளை மன அழுத்தத்தில் இருக்கும்போது உட்கொண்டால், இரைப்பையில் அமில சுரப்பு அதிகரித்து, அதனால் நெஞ்செரிச்சல் ஏற்படும். மேலும் காரமான உணவுகள், உடலின் வெப்பத்தை அதிகரிப்பதால், அது உங்களை பரபரப்புடன் இருக்கச் செய்யும்.
- கோபி அல்லது தேநீரை ஒரு நாளில் அதிகளவு பருகுவோருக்கு, அதிலும் தூங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன் பருகினர்ல், தூக்கத்தில் இடையூறை ஏற்படுத்தி, அதனால் கோபத்தையும், எரிச்சலையும் உண்டாக்கும். எனவே எப்போதும் கோபி அல்லது தேநீரைக் குடிப்பதாக இருந்தால், படுக்கைக்கு 3 மணிநேரத்துக்கு முன் குடியுங்கள்.
- பிஸ்கட், சிப்ஸ் போன்றவை எளிதில் பசியைக் கட்டுப்படுத்தும் உணவுப் பொருளாக இருக்கலாம். ஆனால் இவற்றை அதிகம் உட்கொண்டால், குருதிச் சர்க்கரை அளவு ஒரே நேரத்தில் அதிகரித்து, மன நிலையில் ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கி, கோபத்தை ஏற்படுத்தும்.
- சூயிங் கம் மற்றும் செயற்கை சுவையூட்டிகள் கலக்கப்பட்ட மிட்டாய்கள், செரிமான மண்டலத்தின் செயற்பாட்டில் இடையூறை உண்டாக்கும். அதனால் மனதில் ஒருவித எரிச்சலைத் தூண்டும். ஆகவே இவற்றை அதிகம் உட்கொள்ளாதீர்கள்.
- அற்ககோலின் அளவு அதிகளவில் உள்ள பானங்களை அருந்தினால், நரம்பு மண்டலத்தைத் தாக்கி, கட்டுப்படுத்த முடியாத அளவில் கோபத்தை உண்டாக்கும். அதனால்தான் அற்ககோல் அதிகளவில் உள்ள பானங்கள் பருகும் பழக்கம் உள்ளவர்களுக்கு மூக்குக்கு மேல் கோபம் வருகிறது.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 40 | 40 | 60 | 30 | 40 | 30 | 50 |
| கத்தரி | 50 | 50 | 40 | 70 | 40 | 40 | 90 | 35 |
| கரட் | 80 | 110 | 100 | 100 | 100 | 120 | 110 | 100 |
| மரவள்ளி | 60 | 80 | 80 | 60 | 60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 40 | 50 | 60 | 30 | 50 | 60 | 100 | 60 |
| பாகல் | 100 | 70 | 100 | 100 | 100 | 100 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 120 | 140 | 80 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 100 | 120 | 80 | 100 | 90 | 70 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 30 | 40 | 70 | 30 |
| தக்காளி | 50 | 50 | 50 | 50 | 60 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 | 70 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 15 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 70 | 60 | 80 | 60 | 80 | 200 | 70 |
| புடோல் | 50 | 50 | 40 | 60 | 30 | 60 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 90 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 60 | 60 | 80 | 40 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 180 | 160 | 160 | 160 | 140 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 | 90 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 40 | 30 | 30 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | – | 250 | 300 | 240 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 100 | 100 | 100 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 170 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 120 | 120 | 150 | 80 | 140 | 200 | 80 | 100 |




## இது புதுசு



பலவர்ண துணி பைகள் அறிமுகமாகியுள்ளன. பக்க பைகள், தோள்பைகள், கைப் பைகள் என பலவிதமான வடிவமைப்புகளில் இவை உள்ளன. 500 ரூபாவில் இருந்து 800 ரூபா வரை விற்பனை செய்யப் படுகிறன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்




# புற்றுநோயை 30 நிமிடங்களில் கண்டறியும் நுட்பம் கண்டுபிடிப்பு

வைத்தியசாலைக்குச் செல்லாமல், வெறும் 30 நிமிடத்தில் புற்றுநோயைக் கண்டறியும் தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இதன் மூலம் புற்று நோயை அதன் ஆரம்பக் கட்டத்திலேயே அறிந்து, சிகிச்சையளிப்பதன் மூலம் அதன் வேறுபட்ட நோய்த் தாக்கங்களையும் கட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.
இந்த தொழில்நுட்பமானது லேசர், நுண் மூலக்கூறுகளைப் பயன்படுத்தி புற்றுநோய்க்கு முன்னான மற்றும் புற்றுநோய்க் கலங்களை கண்டறியும் தொழில்நுட்பமாகும்.
இந்த தொழில்நுட்பத்தில் நுண் மூலக்கூறுகளை இழையங்களில் பதிப்பதன் மூலம் வலிமையற்ற சமிக்ஞைகளையும் உணர முடிந்திருக்கின்றது.
இந்த மூலக்கூறுகள் வலிமையற்ற சமிக்ஞைகளை, விரியலாக்குகின்றன.
தற்போது மேற்படி ஆய்வுக் குழுவானது புற்றுநோயை இலகுவில் கண்டறியும் கைக்கருவியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

# ஜிமெயிலில் மாற்றம் செய்கின்றது கூகுள்

இணையத்தளத்தில் முன்னனி நிறுவனமாக கூகுள் விளங்குகின்றது. தனது மின்னஞ்சல் சேவையான ஜிமெயிலை மொபைல் சாதனங்களில் பயன்படுத்துவதற்கான விசேட செயலியை அந்நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.
எனினும் இன்று வரையும் பலர் இணைய உலாவியின் ஊடாகவே இந்தச் சேவையைப் பெற்றுவருகின்றனர். இவ்வாறானவர்கள் வெவ்வேறு சாதனங்களில் இந்தச் சேவையைப் பெறும்போது, அவற்றின் திரையின் அளவு மாறுபடுவதனால் சில அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடுகின்றது.
எனவே வெவ்வேறு சாதனங்களின் திரை அளவுக்கு ஏற்ப தானாகவே மாறக்கூடிய வகையில் ஜிமெயில் சேவையை வழங்க முன்வந்துள்ளது.
இந்த மாற்றமானது அடுத்து வரும் ஓரிரு வாரங்களில் அறிமுகம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் டெக்ஸ்டாப் கணினிகள் போல் அல்லாது மொபைல் சாதனங்களுக்கு விசேட வடிவமைப்பில் ஜிமெயில் சேவை கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.



# பிரிட்டனின் முகாமைத்துவ முதுமாணி பட்டம் பெற வாய்ப்பளிக்கும் ஐ.சி.பி.ரி.

யாழ்ப்பாணத்தில் இருந்தபடியே பிரிட்டனில் முன்னனிப் பல்கலைக் கழகங்களில் ஒன்றான கார்டிப் மெட்ரோ பொலிட்டன் பல்கலைக் கழகத்தில் வியாபார முகாமைத்துவ முதுமாணிப் பட்டப்படிப்பை ஒன்றரை வருட காலத்துக்குள் முழுமை செய்யக்கூடிய அரிய வாய்ப்பை ஐ.சி.பி.ரி நிறுவனம் தந்திருக்கின்றது.
இது தொடர்பான அறிவூட்டல் கருத்தரங்கொன்று கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ். நகரில் ஜெட்விங் ஹோட்டலில் நடைபெற்றபோது, இந்தக் கற்கைநெறித் திட்டம் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.
ஐ.சி.பி.ரி. நிறுவனத்தின் யாழ்.வளாகத்துக்குப் பொறுப்பான பிராந்திய முகாமையாளர் கே.அமரேஷ், கார்டிப் மெட்ரோ பொலிட்டன் பல்கலைக் கழக மூத்த விரிவுரையாள்ளர் திருமதி ஜேன் அம்மையார், ஐ.சி. பி.ரி. நிறுவனத்தின் கல்விசார் செயற்பாடு களுக்கான முதல்நிலை அதிகாரி எஸ்.சந்துரு ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு புதிய விளக்கங்களை அளித்தனர்.
பிரிட்டனின் முன்னனிப் பல்கலைக் கழகம் ஒன்றின் முதுமாணிப் பட்டப்படிப்பை யாழ்ப்பாணத்தில் இருந்தபடியே முழுமையாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு குறித்துச் சிலாகித்துப் பேசிய யாழ். வளாக முகாமையாளர் அமரேஷ், இதனை ஒழுங்குபடுத்தித் தந்த தரப்பினர் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் மேற்படி பட்டப் படிப்பின் முதற்தொகுதியினருக்கான கற்கைநெறி கடந்த மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவித்த அவர், அந்தப் பிரிவினருக்கான முதலரை ஆண்டு இறுதிப் பரீட்சைகள் திட்டமிட்டபடி தற்போது இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும் கூறினார்.
இந்த நிகழ்வில் உரையாற்றிய கார்டிப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளரான திருமதி ஜேன் அம்மையார்,
யாழ்ப்பாணத்தில் இந்தக் கற்கை நெறியைத் தொடர்வதற்கான முதல் அணியில் ஆர்வத்துடன் பங்குபற்றியுள்ளோரின் ஈடுபாடு கண்டு நாம் மகிழ்வும் திருப்தியும் கொள்கிறோம். எமது கார்டிப் பல்கலைக்கழகத்தில் கற்கை நெறியை இலங்கையில் ஐ.சி.பி.ரி நிறுவனத்தின் மூலம் மட்டுமே பெறமுடியும். ஐ.சி.பி.ரி வளாகத்தில் நேர்த்தியான கட்டமைப்பு மற்றும் உயர்ந்த நிர்வாக முறைமை கற்பித்தல் வசதி போன்றவை இந்த வளாகத்தை மட்டுமே எமது பல்கலைக் கழகம் இங்கு அங்கீகரித்து நிற்கின்றமைக்குப் பிரதான காரணங்களாகும். பிரிட்டனில் எமது பல்கலைக் கழகத்தில் கற்பிக்கப்படும் பாடத்திட்டங்கள், வழங்கப்படும் சான்றிதழ்கள் என்பவை அப்படியே இங்கும் எந்தவித மாற்றங்களும் இன்றி பின்பற்றப்பட்டு வழங்கப்படுகின்றன. எனவே இங்கு எமது கல்வி நெறியைத் தொடர்வதற்காக ஐ.சி.பி.ரி. வளாகத்தில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் அனைவரும் எமது பல்கலைக்கழக மாணவர்களாகவே கருதப்படுவர் என்பதை மறந்துவிடாதீர்கள்–என்றார்.
இறுதியாக உரையாற்றிய ஐ.சி. பி.ரி கல்விசார் செயற்பாடுகளுக்கான முதன்நிலை அதிகாரி எஸ்.சந்துரு, தனியார் வியாபார முகாமைத்துவ முதுமாணிப் பட்டப்படிப்பை இலங்கையிலேயே ஐ.சி.பி.ரி. நிறுவனமே அறிமுகம் செய்து வைக்கின்றது. இதுவரை சுமார் 6000 பேர் வரை இந்தப் பட்டப்படிப்பைக் கற்பதற்கு இணைந்து இருக்கின்றனர். இலங்கையில் பல்வேறு மதிப்பார்ந்த நிறுவனங்களில் உயர் பதவிகளில் இருப்போர் இந்த முதுமாணிப்பட்டப்படிப்பில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் ஆகும்- என்றார். (இ)

## வணிகம்

# தேசிய உற்பத்தி அதிகரிப்பு

நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி நடப்பு ஆண்டின் இரண்டாம் காலாண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.6 அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக இலங்கை தொகை மதிப்பு, புள்ளிவிவரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.
இதற்கமைய நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 2,130,240 ஆக பதிவாகியிருந்ததுடன், இந்தப் பெறுமதி கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் 2,075,805 ஆக பதிவாகியிருந்தது.
விவசாயம், தொழிற்றுறை, சேவைகள் மற்றும் வரிகள் இல்லாத உற்பத்திப்பொருள்கள் போன்றன நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பில் பங்களிப்பு வழங்கியிருந்தன. இவை முறையே 7.7, 26.6, 55.8 மற்றும் 9.8 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்திருந்தன.
இரண்டாம் காலாண்டுப் பகுதியில் தொலைத்தொடர்பாடல் சேவைகள் என்பது 21.2 சதவீத அதிகரிப்பை பதிவு செய்திருந்ததுடன், நிதிச்சேவைகள் 14.5 சதவீத அதிகரிப்பை பதிவு செய்திருந்தன. காப்புறுதிச் சேவைகள் 15.1 சதவீதம், கல்விச்சேவைகள் 10.5 சதவீதம் மற்றும் மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் என்பது 3.5 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்திருந்தன.
பெறுமதி சேர்க்கப்பட்ட செய்கைகளான அரிசி, தேயிலை மற்றும் இறப்பர் ஆகியன 17.9 சதவீதம், 12.2 சதவீதம் மற்றும் 8.2 சதவீதம் சரிவை பதிவு செய்திருந்தன. (இ)

# விவசாய ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானம் வீழ்ச்சி

வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் விவசாய ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானம் நூற்றுக்கு 11.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. அதனடிப்படையில் கடந்த வருடம் முதல் ஆறு மாதங்களில் 1244.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த விவசாய ஏற்றுமதி வருமானம், இந்த வருடம் முதல் ஆறு மாதங்களில் 1104.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.
தேயிலை ஏற்றுமதியில் கிடைத்த வருமானம் நூற்றுக்கு 9.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், நறுமண பொருள்களின் ஏற்றுமதி வருமானம் நூற்றுக்கு 26.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.(இ)




## பங்குச் சந்தை தகவல்கள்

CSE COLOMBO STOCK EXCHANGE — 22/9/2016 — www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 13.33 | 6,464.94 | 6,451.61 |
| S&P SL20 | 13.33 | 3,579.21 | 3,565.88 |
| வியாபாரப்புரள்வு | | 2,092,859,136 | 1,432,937,216 |
| உள்நாடு- கொள்வனவு | | 1,696,669,312 | 765,278,144 |
| விற்பனை | | 828,885,760 | 794,171,840 |
| வெளிநாடு- கொள்வனவு | | 396,189,728 | 667,659,072 |
| விற்பனை | | 1,263,973,376 | 638,765,376 |



| அதிகூடிய பங்குப் புரள்வு கம்பனி | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| நேஷனல் டெவலப்மென்ட் வங்கி | NDB.N | 165.9 | 6,973,458 | 1,140,208,240 |
| ரீயே லங்கா | TJL.N | 45.5 | 4,165,275 | 187,432,243 |
| ஹெற்மஸ் கோல்டிங்ஸ் | HHL.N | 104.50 | 1,223,344 | 128,449,661 |
| சிடிஸின்ஸ் டிவலப்மென்ட் பிசினஸ் | CDB.N | 77.5 | 913,017 | 73,019,310 |
| டிஸ்டிலறீஸ் நிறுவனம் | DIST.N | 238 | 307,135 | 72,640,850 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 226.5 | 227,270 | 51,583,562 |
| சிலோன் கிரேன் எலிவேட்டர்ஸ் | GRAN.N | 93.6 | 473,511 | 44,425,752 |
| அக்சஸ் இஞ்சினியறிங் | AEL.N | 26.5 | 1,439,075 | 37,966,982 |
| டோக்கியோ சிமென்ட் | TKYO.X | 46 | 799,523 | 36,150,625 |
| டி எப் சி சி வங்கி | DFCC.N | 130 | 223,476 | 29,056,625 |

அறிவித்தல்கள்

பங்குலாபம்
பீப்பில் இன்சூரன்ஸ் (PINS) - பங்கு ஒன்றிற்கு Rs. 0.75
பிரவுன்ஸ் கேப்பிட்டல் (FLCH) - பங்கு ஒன்றிற்கு Rs. 0.05
ஏசியன் அலயன்ஸ் இன்சூரன்ஸ் (AAIC) -பங்கு ஒன்றிற்கு Rs. 0.53

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 222 |
| விலை உழைப்பு | 13.3 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3.1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகள்...

எனக்குறிப்பிட்ட அவர், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடைக்கான உரிய தெளிவான ஆதாரங்களை நீதி மன்றம் முன்வைக்கவேண்டும் எனவும் கோரினார்.

அவரது பரிந்துரை நீதிபதிகளைக் கட்டுப் படுத்தாது. அதேவேளை, அது ஏற்றுக் கொள்ளப்பட்டால் இலங்கை அமைப்புக் களுக்கும் ஐரோப்பிய அரசுகளுக்கு மிடை யில் நீண்டகாலமாக நீடித்துவந்த நீதி மன்ற மோதல் முடிவுக்கு வரும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டினர். (வ-4)

## அனைவரும்...

உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக கல்லூரி முன்றலில் இருந்து பாண்ட் வாத்தியங்கள் முழங்க விருந்தி னர்கள் அழைத்து வரப்பட்டதோடு, உயிர் நீத்த மாணவர்களுக்காக கல்லூரி வளா கத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நினைவுத் தூபியில் நிகழ்வுகள் ஆரம்பமானது. தூபிக்கான முதல் மாலையை அந்தக் குண்டு வீச்சில் தனது இரு பிள்ளைகளை யும் பறி கொடுத்த தாயார் அணிவித்தார். தொடர்ந்து மாணவர்களின் – உயிர் நீத்த பிள்ளைகளின் உறவுகள் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கான மலர் மாலையை அணிவித்து அஞ்சலிகளைச் செலுத்தி னர். தொடர்ந்து பெற்றோரால் மாணவர் களின் நினைவாகத் தீபங்கள் ஏற்றப்பட்டன இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்ததாவது:

"மிகப்பெரிய போராட்ட இயக்கமாக வளர்ந் திருந்தபோதும் பன்னாட்டு இராஜதந்திர வெற்றிகளைப் பெறுவதில் ஏற்பட்ட பின்ன டைவுகள்தான் போராட்டம் இந்த நிலையை அடையக் காரணமாக உள்ளது. எனவே பன்னாட்டு சமூகத்திடம் கிடைத்திருக் கின்ற சந்தர்ப்பத்தை நம்பிக்கையோடு எதிர்கொண்டு மிகக் கவனமாகவும் அவ தானமாகவும் மக்களின் ஆணையை நிறைவேற்ற நாங்கள் கடமைப்பட்டுள் ளோம். மக்களின் ஒற்றுமையும் அவர்கள் எம்மீதுவைத்திருக்கின்ற நம்பிக்கையும் தொடர்ந்து பேணப்பட வேண்டும்

விடுதலைப் புலிகள் பலம் பொருந்திய சக்தியாக இருந்த காலப்பகுதியில், அந்தச் சக்தியின் சனநாயக சக்தியாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்றாக இருந்த காலப் பகுதிதான் பலம்பொருந் திய காலப்பகுதியாக இருந் தது.

இன்று அந்தப் பலத்தை நாம் இழந்திருந்தாலும், எமக்கு முன்னால் இருக் கின்ற எத்தனையோ தடை களைத் தாண்டி நாம் செல்லவேண்டியவர்க ளாக இருக்கிறோம்.

லட்சக்கணக்கான மக்கள் விடுலைக்காகத் தங்கள் இன்னுயிர்களைக் கொடுத் திருப்பதைப் போலவே இந்த மாணவச் செல்வங் கள் அப்படி ஒரு சந்தர்ப்பம் தமக்கு ஏற்படும் என்று நினைத்திருக்கமாட்டார் கள். அந்த மாணவர்களை இழந்துவிட்டு வற்றாத கண்ணீருடன் அழுது கொண்டு திரிகிறார்கள் பெற்றோர். அந்தக் கண் ணீர் எமது நெஞ்சத்தை நிறைத்துவிடவில்லை.

மாறாக எம் இதயத்தில் வலிகளையும் கோபத்தை யுமே நிறைத்துள்ளது. எங்கள் வரலாற்றில் நாம் பலமுறை சாகடிப்பட்டதா கத் தூக்கி வீசப்பட்டவர்கள். நல்லவேளையாக இனத் தின் விடுதலையை வழி நடத்திய இயக்கமாக இங்கு வந்துநிற்கிறோம்.

எங்களுடைய மக்கள் கல்வி, உழைப்பு, கலை, கலாசாரத்தைப் பேணு வதைவிட இந்தப் பிள் ளைகள் தங்கள் உடன் பிறப்புக்களை இழந்துவிட்டு வீடுகளுக் குள் தொடர்ந்தும் அழுதுகொண்டிருக் காமல் எங்கள் முன்னால் ஆடிப்பாடி தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி யுள்ளனர். இதேபோல இன்னும் அவர்கள் சோர்ந்து போகாமல் எமது கலை கலா சாரங்களைப் பேண வேண்டும்.

பன்னாட்டு விசாரணை தொடர்பில் பல்வேறு விசாரணைப் பொறிமுறைகள் தற்போது ஆரம்பித்திருக்கின்றன. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத் தின்படி இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட்டு எமது நிலங் க்ள் விடுவிக்கப்பட்டு மீள்குடியேற்றம் இடம்பெறவேண்டும். எமது மக்கள் தமது நிலங்களுக்குத் திரும்ப வேண்டும். தங் கள் தொழிலைச் சுதந்திரமாகச்செய்ய வேண்டும்.

அதனைவிட எமது இளையோருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண் டும். லட்சக்கணக்கான உயிர்கள் எதற் காகக் காவு கொடுக்கப்பட்டதோ அந்த 22 பச்சிளங்குழந்தைகளும் எதற்காகச் சாவ டைந்தார்களோ அந்த அத்தனை ஆன் மாக்களும் தெரிந்தோ தெரியாமலோ எங் கள் விடுதலைக்காகத் தங்கள் உயிர்க ளைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த லட் சக்கணக்கான மக்களின் உயிர்த்தியா கங்கள் பயனடைய வேண்டும். இப்படிப் பட்ட சிறுபிள்ளைகள் போரினால் இனியும் அழிந்து போகக்கூடாது. அவர்கள் இன்னு மொரு ஆயுதகலாசாரத்தை நாடக்கூடாது. அதற்கேற்றாற்போல் நாங்கள் நவடிக் கைகளை முன்னெடுத்து வருகிறோம்.

யாழ்ப்பாணத்துக்கு வந்த ஐ.நா. செயலர் பான் கீ - மூனிடம் நாங்கள் மிகத் தெளி வாக மிக உறுதியாகச் சில விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

எமது 90 ஆயிரம் பெண்கள் இராணுவச் சூழலில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான இடத்தில் உள்ளார்கள். அவர்களுக்கான பாதுகாப்புக் கிடைக்க வேண்டும் என் பதை ஐ.நா. செயலரிடம் வெளிப்படுத்தி னோம். எமது மக்கள் நம்பிக்கை வைத்து இந்த அரசைக் கொண்டு வந்துள்ளனர். அவர்கள் மேலும் ஏமாற்றப்பட்டால், அகிம்சை வழியில் போராடுவோம். அதற்கு பன்னாட்டுச் சமூகம் ஆதரவாக இருக்க வேண்டும் என்றும் அவருக்குக் கூறியிருக்கிறோம்" - என்றார். (வ-4,109)

## ஓ.ஐ.சி. ...

குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகளான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அழைப்பாணை கொடுக்கப்படவில்லை. எனவே மீண்டும் ஒரு தடவை அழைப்பாணை அனுப்ப குறுகியகால அவகாசம் தருமாறும், அழைப் பாணையைக் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஊடாக அனுப்புமாறு கோருவதாகவும் தெரிவித்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி மா. இளஞ்செழியன், அதற்கு அனுமதி வழங்கி, வழக்கை அடுத்த மாதம் 19ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். மன்றில் குற்றப் புலனாய் வுப் பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் சனில் சரணபாலவும் முன்னிலையாகியிருந் தார்.

இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் கடந்த 6ஆம் திகதி விசாரணைக்காக எடுக்கப் பட்டபோது, குற்றம் சுமத்தப்பட்டவர்களா கிய 8 பொலிஸ் உத்தியோகத்தர்களும் கடமையில் இருப்பதாகவும், அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்து வதற்கு அழைப்பாணை பிறப்பிக்குமாறும் புல னாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி நீதிபதி யிடம் கோரியிருந்தார். அதன்படி அவர் களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டி ருந்த நிலையில், அவர்கள் நேற்று முன் னிலையாகியிருக்கவில்லை.

சுன்னாகத்தில் 2011ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதியை அண்மித்த நாளில், 5 பேர் கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந் தனர். 5 பேரில் சிலர் மோச மாகச் சித்திரவதை செய்யப் பட்டதோடு, அவர்களில் சிறிஸ்கந்தராசா சுமணன் என்பவர் சித்திரவதையின் பின்னர் உயிரிழந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அவ ரது சடலம் கிளிநொச்சி இர ணைமடுக் குளத்திலிருந்து மீட்கப்பட்டது. ஏனைய 4 பேருக்கும் எதிராக, கொள்ளையடித்ததா கக் குற்றஞ்சாட்டி சுன்னாகம் பொலிஸா ரால் மல்லாகம் நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு விசாரணையில் சந்தேகநபர்கள் பொலி ஸாரின் வண்டவாளங்களை மல்லாகம் நீதிவான் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். அதனடிப்படையிலேயே குறித்த 8 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் எதிராக யாழ்.மேல் நீதிமன்றில் சித்திர வதை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. (வ-4)

## பல்கலையாக...

உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் விடுத்த கோரிக்கைக்குப் பதிலளித்த போதே உயர் கல்வி அமைச்சர் இந்த அறிவிப்பை விடுத் தார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளா கத்தை வன்னிப் பல்கலைக்கழகமாகத் தர முயர்த்த வேண்டும் என புத்திஜீவிகள் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்தப் பல்கலைக்கழக வளாகத்தின் பௌதீக வளங்களை அபிவி ருத்தி செய்வதாக இதற்கு முன்னர் கூறப் பட்டபோதும் நடவடிக்கைகள் இடம்பெற வில்லை. இந்தப் பல்கலைக்கழக வளா கத்தை வன்னிப் பல்பலைக்கழகமாகத் தர முயர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கான நிதி மற்றும் பௌதீக வளங் களை வழங்கவும் உயர்கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவாதத்தில் உரையாற்றிய சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, அந்த வளாகம் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்படும் என்று தெரிவித்தார். (வ-4)

## மரண அறிவித்தல்

ஓம் விராட்விஸ்வப் பிரம்மனே நமஹ

### கந்தையா திருநாவுக்கரசு (பத்தர்)



நாவற்குழி கிழக்கைப் பிறப்பிடமாகவும் கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா திருநாவுக்கரசு 20.09.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.*

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**கைதடி தெற்கு,**
**கைதடி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 704 1563**

(ஜே.4803) (13,18)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி இராசையா தவமலர்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட செல்வி இராசையா தவமலர் நேற்று (22.09.2016) வியாழக்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், ஜெயந்தனின் பாசமிகு தாயாரும், காலஞ் சென்ற ஜெகநாதன் மற்றும் புஸ்பநாதன், கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோகிலாவின் பாசமிகு மாமியாரும், துளசிகன், பிரணிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2016) வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செல்லப்பா வீதி,**
**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்: எஸ்.ஜெயந்தன்**
**(ஜெயம் - மகன்)**

**021 223 0624**

(C/26288)
(11,17,18)

### கணபதி சின்னத்துரை

கரணவாய் சோளங்கனைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி சின்னத்துரை 21.09.2016 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - நாகாத்தை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தெய்வானையின் அன்புக் கணவரும், கணேஷ் (சுவிஸ்) அவர் களின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வர்களான பொன்னையா, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வேலுப் பிள்ளை சிந்தாமணி, ராகினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், தர்ஷன் (சுவிஸ்), ரிஷானி (சுவிஸ்), மிதுனன் (சுவிஸ்) ஆகியோ ரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2016) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் பூவரசந்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

**கரணவாய் மேற்கு,**
**கரணவாய்.**

(ஜே.4803) (13,18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள்



**REV.SR.ZANDRA A/C**

(RTD TEACHER OF
ST.BENEDICT'S
College Colombo,
St -John's College Jaffna)

அன்னை மடியில் 04.05.1946

ஆண்டவன் அடியில் 24.08.2016

உங்கள் ஆன்மா இறைபதம் அடைய தினம் பிரார்த்திக்கின்றோம்.

7/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.

# நீர்வேலி இரட்டைக்கொலை வழக்கின் விசாரணை நிறைவு

யாழ்ப்பாணம், செப். 23

நீர்வேலியில் கணவன், மனைவி ஆகிய இருவரையும் வெட்டிக் கொலை செய்த வழக்கின் இரு தரப்பு விளக்கங்கள் முடிவடைந்து தொகுப்புரைக்கான திகதி நேற்று யாழ். மேல் நீதிமன்றினால் அறிவிக்கப்பட்டது.

யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுக்கப்பட்டது.

இந்த வழக்கின் முக்கிய சாட்சியான கொலை செய்யப்பட்டவர்களின் மகள் வெளிநாட்டில் இருந்த நிலையில், சாட்சியமளிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவருக்கான பாதுகாப்புக் கருதி, ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த வழக்கின் எதிரி மீண்டும் யாழ்.மேல் நீதிமன்றினால் மறியலில் வைக்கப்பட்டார்.

நீர்வேலி மேற்கில் கடந்த 2011 ஆம் ஆண்டு மார்க்கண்டு உதயகுமார், அவருடைய மனைவியான உதயகுமார் வசந்திமாலா ஆகியோர் வெட்டிக் கொல்லப்பட்டனர். அவர்களது மகனான குகதீபனைக் காயப்படுத்தி, அவர் மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டவர் கொல்லப்பட்ட வசந்திமாலாவின் சகோதரனான குணா என்றழைக்கப்படும் அருணாசலம் குகனேஸ்வரன் என்பவரே. சகோதரியையும் மைத்துனனையும் கொலை செய்ததுடன், மருமகனைக் காயப்படுத்தி கொலை செய்ய முயற்சி செய்ததாகக் குற்றஞ் சுமத்தப்பட்டது. நேற்று விசாரணைகள் நிறைவடைந்து தொகுப்புரைக்காக எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(வ-4)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் மோட்சதீப அழைப்பும்

தோற்றம் 25 . 02 . 1951



மறைவு 27 . 08 . 2016

**அமரர் திருநாவுக்கரசு தேவராஜா**

கடந்த 27.08.2016 சனிக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்
அமரர் திருநாவுக்கரசு தேவராஜா
அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்
நாளை (24.09.2016) சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு எமது
இல்லத்தில் இடம்பெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம்
வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும்
கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோவிலடி,
கீரிமலை வீதி, சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**அன்னலட்சுமி நவரட்ணம்**

தோற்றம் 25.09.1936

மறைவு 05.10.2015

எம்மை வளர்த்தெடுத்து ஆளாக்கிய
அன்புத் தெய்வமே !
ஆண்டொன்று சென்றுவிட்டது அந்தோ!
அன்று போல் இன்றுமே என்றென்றும் உங்களது
பண்பு, பரிவு, பாசம் மறவோம்
நம் துயர் மாறாது ஆண்டவன் அடியில் அயராது
துயில் கொள்வாயாக

958/31, தலையாழி லேன்,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## பணிப்பெண் தேவை

சமையல் வேலை தெரிந்த
பணிப்பெண் தங்கி இருந்து பணி
புரிவதற்கு உடன் தேவை.

தொடர்புகளுக்கு:
021 2059563, 077 8097494

## உடன் தேவை

பொருள்கள் ஏற்றி இறக்குபவர்கள்
தேவை.

Coca-Cola Distributors
Siva Brothers
No.15, Brown Road, Jaffna.
077 7722215

## MAJESTIC CINEPLEX

A CEYLON THEATRES CINEMA Jaffna

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




| மஜெஸ்டிக் ப்ளாட்டினம் | சில்வர் |
|---|---|
| 10.00 a.m / 1.00 p.m | 10.30 a.m / 1.30 p.m |
| 4.00 p.m / 7.00 p.m | 4.30 p.m / 7.30 p.m |

Fri/Sat/Sun 9.30 p.m




ப்ரோன்ஸ் 10.15 / 1.15 / 4.15 / 7.15
Fri/Sat/Sun 9.30 p.m

Jaffna Film Festival
September 24/25/26/27th

விசாரணை ☎ 021- 2227712

CeylonTheatres
www.ceylontheatres.lk

## MINISTRY OF HOUSING AND CONSTRUCTION
## DEPARTMENT OF BUILDINGS
## INVITATION FOR BIDS

**Additional Infrastructure Work at University College of Jaffna.**

1. **The Chairman, Regional Procurement Committee,** on behalf of the **Department of Buildings** now invites sealed bids from eligible and qualified bidders for "Construction of Additional Infrastructure Work at University College of Jaffna" as described below and estimated to cost **Rs.7.16 million.**(Excluding VAT)

   The construction period is **90 Days**
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall be registered in the field of building construction for Grade **C7** or above with the Construction Industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
4. Interested bidders may obtain further information from the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings,** and inspect the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**
   Contact numbers are: Phone: 021 - 2222781, Facsimile : 021 - 2222781
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna** from **23.09.2016** until **05.10.2016** from 9:00hrs **to 15:00 hrs** upon payment of a non refundable fee of Rupees Two thousand & Five hundred only **(Rs.2,500/-).**
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna** to reach **on or before 10.00 hrs on 07.10.2016.** Bids will be opened soon after closing at the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna** in presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of 91 Days from the last date fixed for receiving of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in Section 09 of the bidding document
   - in favour of **Director General of Buildings**
   - for an amount of **Rs.140,000.00**
   - valid up to **03.02.2017**
   - issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data

**Eng. A.Nawas Atham**
Director (R2)
Department of Buildings
2nd Floor "Sethsiripaya",
Battaramulla

(C/26298) (13.18.17)

## காணி விற்பனைக்கு உண்டு

நல்லூர், இராமலிங்கம்
வீதியில் 2 1/2 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

S.K. Broking
077 4613884, 077 1933490

## தவறிவிட்டது

நடேசன் குலேந்திரன் என்பவருடைய தே.அ.அட்டை (720461439V), சாரதி அனுமதிப் பத்திரம், வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், உத்தியோக அடையாள அட்டை அடங்கிய பேஸ் ஒன்று பரந்தனுக்கும் முல்லைத்தீவு கச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு: 021 3214050
071 4570294, 077 3686810

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி **மேரிசாந்தி (சாந்தி) இராசேஸ்வரன்**

தோற்றம் 19.09.1973

மறைவு 25.08.2016



கடந்த 25.08.2016 அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவி மேரிசாந்தி இராசேஸ்வரன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு அனுதாபம் மற்றும் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை (24.09.2016) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] ஒழுங்கை.
அனிஞ்சியன் குளம்.
யோகபுரம், மல்லாவி.

கணவர், பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பன்னாட்டு சினிமா விழா இன்று முதல் 27ஆம் திகதி வரை

யாழ்ப்பாணம், செப். 23
யாழ்ப்பாண பன்னாட்டு சினிமா விழா - 2016 இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து எதிர் வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் அ.நொ.கிருஸ்ணவேணி தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறை, சிலோன் தியேட்டர்ஸ் மற்றும் அஜென்டா 14 ஆகியன இணைந்து இந்த விழாவை நடத்துகின்றன. யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு, கார்கில்ஸ் திரையரங்கு, யாழ். பொது நூலக கேட்போர் கூடம் ஆகியவற்றில் நாள் ஒன்றுக்கு மூன்று காட்சிகளாக 70க்கும் மேற்பட்ட கதைப்படங்கள், ஆவணப்படங்கள், குறும்படங்கள் என்பன திரையிடப்படவுள்ளன. அதற்கான அனுமதி இலவசமாகும்.

நடிப்பு, படத்தொகுப்பு, ஒலிப்பதிவு ஆகியவற்றுக்கான துறைசார் நிபுணர்களின் பயிற்சி வகுப்புக்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மற்றும் மறுநாள் திங்கட்கிழமை ஆகிய திகதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் சிறந்த திரைப்படத்துக்கான விருது, சிறந்த குறுந் திரைப்படத்துக்கான பார்வையாளர் விருது, வாழ்நாள் சாதனையாளர் விருது என்பனவும் வழங்கப்படவுள்ளன. திரைப்படத்தின் இறுதிக் காட்சிகளின் நேரத்தைக் கருத்தில்கொண்டு இறுதிப் பஸ் நேர அட்டவணை மாற்றியமைக்கப்பட்டு பார்வையாளர்களுக்கு வசதியும் செய்து கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி)

## மழையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலிறுத்தலுக்கான ஒருங்கிணைப்பு கூட்டம் யாழ். மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது. இதன்போதே இந்த அறிவித்தல் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினருக்கு நேற்று அறிவிக்கப்பட்டது.

பருவகாலம் ஆரம்பிக்கும்போது, என்ன பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட இடங்களின் குறைபாடுகள் பற்றி நேற்று காண்பிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் மழை வெள்ளம் ஓடமுடியாதவாறு தேங்கி நின்றமை, அதனால் இடம்பெயர்வு, மரங்கள் முறிந்து விழுந்தமை, மின் கம்பம் சரிந்தமை உள்ளிட்ட பல பிரச்சினைகளும் ஏற்பட்டன. திட்டமிடல் இன்மை உள்ளிட்ட பல காரணங்களும், அதன்போது குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டது. இந்தநிலையில் இந்த வருடம் பருவகாலம் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

பதினைந்து பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள நீரோடும் வாய்க்கால்களின் நிலை, அவை துப்புரவாக்கப்பட்டு வெள்ள நீர் வழிந்தோடக்கூடியவாறு உள்ளதா என்பதும் அவதானிக்கப்பட்டது.

குறிப்பாக யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த காலத்தில் அதிக இடர் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. அதற்கு, சட்டவிரோத கட்டடங்கள் கட்டியமை, திட்டமிடப்படாது கட்டடம் கட்டடியமை உள்ளிட்ட காரணங்களும் உள்ளன. அவற்றை இனங்கண்டு உடனடியாகச் சீர் செய்ய வேண்டும் என்று பணிக்கப்பட்டது.

அவ்வாறே மரங்கள் சரிந்துவிழும்போது என்ன நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது உட்பட ஒவ்வொரு துறையினரும் செய்ய வேண்டிய பணிகள் பற்றிக் கூறப்பட்டன. அவர்கள் அதனைச் செய்ய வேண்டும். அதற்கேற்றதாக ஒவ்வொரு துறையினரும் தம்மைத் தயார்ப்படுத்த வேண்டும். முடியாத விடயங்கள் ஏதும் இருப்பின், அது பற்றி மாவட்டச் செயலருக்கு அறிவிக்க வேண்டும். அதற்கான பரிகாரம் அல்லது மேலதிகமாக வேண்டிய உதவிகள் அனைத்தையும் கூறிப் பெற்றுக் கொண்டு இடரின் போது திறமையாகச் செயற்பட வேண்டும்.

இடர் நிகழ்ந்த பின்னர் எதிர்கொள்ள - அதனைச் சரிப்படுத்த வழிகள் இல்லை என்றோ, ஆளணி இல்லை என்றோ, உபகரணங்கள் இல்லை என்றோ எவ்வித காரணமும் சாட்டுப் போக்கும் எவரும் கூறமுடியாதவாறு தற்போது தேவையான திட்டங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

15 பிரதேசசெயலகங்களிலும் ஒவ்வொரு பிரதேசங்களாக ஆதார ரீதியாக காட்சிப் படுத்தலுடன் விளங்கப்படுத்தப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதுமட்டுமன்றி அதிகளவில் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் இடம்பெயரும்நிலை உருவாகுமாயின், அதற்கான துரித தயார்படுத்தல்கள் எப்படி இருக்க வேண்டும், அவ்வாறு முக்காம்களில் மக்கள் தங்க வைக்கப்படும் போது தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பது, டெங்கின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் அந்தந்த துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டது.

வீதி அபிவிருத்தி, ரயில் பாதை அமைத்ததன் காரணமாக சில கால்வாய்களும் மதகுகளும் மூடப்பட்டுள்ளன. அதனால் மாநகர சபையின் எல்லைகுட்பட்ட பகுதிகளில் கடந்த வருடம் அதிகளவில் வெள்ளம் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு மூடப்பட்ட மதகுகள் கால்வாய்கள் தொடர்பில் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாநகரசபையிடம் மாவட்டச் செயலர் பணித்தார்.

இந்தக் கூடத்தில் தேசிய இடர் முகாமைத்துவ நிலையத்தின் முன்னாயத்த திட்டமிடல் பணிப்பாளர் சுனில்ஜெயவீர, பிரதேச செயலக அதிகாரிகள், நீர்ப்பாசனத் துறை அதிகாரிகள், வீதி அபிவிருத்தித் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, விவசாய அபிவிருத்தி ஆணையாளர், கல்வித் திணைக்கள அதிகாரிகள், மரக்கூட்டுத்தாபனத்தினர், முப்படையினர், பொலிஸார், அரசசார்பற்ற நிறுவனங்கள் என பல திணைக்களங்களிலிருந்தும் வந்து கலந்துகொண்டனர். (வ-4,ரி)

## அமெரிக்காவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழிடங்களை விடுவிக் காமல் இருக்கின்றனரே தவிர, விடுவிக்கப்பட்ட இடங்களில் மக்கள் குடியமரப் பின்னிற்கவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

ஐ.நா. சபையின் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்கு நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, அமெரிக்காவின் இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கையின் புதிய அரசு தற்போது பயணிக்கும் பாதை தொடர்பில் அமெரிக்க அரசின் பாராட்டுக்களை ஜோன் கெரி ஜனாதிபதி மைத்திரிபாலவுக்குத் தெரிவித்தார். இலங்கைக்கு வழங்க முடியுமான சகல சாத்தியமான உதவிகளைத் தொடர்ந்தும் வழங்கவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொருளாதார முன்னேற்றம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் இலங்கையின் தற்போதைய அரசானது முன்னெடுத்துவரும் வழிமுறைகளையே தொடர்ந்தும் கடைப்பிடிக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது ஜோன் கெரியிடம் எடுத்துக்கூறினார்.

இலங்கை அரசு, வடக்கு மற்றும் தெற்கில் உறுதியற்ற தன்மையாகச் செயற்படும் சில நல்லிணக்கத்துக்கு எதிரானவர்களிடமிருந்து, பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. உதாரணமாக வடக்கில், சிறியளவிலான மக்கள் குழுவினர், சில தீவிரவாதக் குழுக்களின் அழுத்தங்கள் காரணமாக அவர்களுடைய சொந்த இடங்களுக்கு மீண்டும் திரும்பிச் செல்வதற்கு மறுத்து வருகின்றனர்.

அதேபோல் தெற்கிலுள்ள சில தீவிரவாதக் குழுக்கள் நல்லிணக்க முயற்சிகளை குழப்புவதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. ஆனாலும் கூட்டு அரசானது அவ்வாறான எதிர்ப்புக்களை கவனத்தில் கொள்ளாது தேவையான திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றன.

கூட்டு அரசினரிடையே வேறுபட்ட கொள்கைகள் காணப்பட்டாலும், நல்லிணக்கச் செயற்பாட்டைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கு பரந்துபட்ட ரீதியிலான கொள்கையின் அடிப்படையில் பணிபுரிவதற்கு இணங்கியிருப்பதாகவும் ஜனாதிபதி இந்தச் சந்தர்ப்பத்தில் தெளிவுபடுத்தினார். இதன் காரணமாக அரசின் உறுதியற்ற தன்மையினை மேலும் பலப்படுத்திக் கொண்டு, 2015ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் திகதி இந்த அரசை தெரிவு செய்ய மக்களினுடைய வேணாவாக்களை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமெரிக்க இராஜங்கச் செயலரிடம் தெரிவித்தார்.

கடந்த 15 மாதங்களில் இலங்கை அரசு அடைந்து கொண்ட சாதனைகளுக்காக ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த ஜோன் கெரி, அமெரிக்காவின் உதவிகள் தொடர்ந்தும் இலங்கை அரசுக்கு கிடைக்குமென்றும் உறுதியளித்ததாக, ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## மைத்திரிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூனுக்கும் இடையே நேற்று முன்தினம் புதன்கிழமை நியூயோர்கில் சிறப் புச் சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கைக்கு வருகை தந்திருந்த போது இலங்கை அரசும், இலங்கை மக்களும் வெளிப்படுத்திய பேரன்பான வரவேற்புக்கும் உபசரிப்புக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், இலங்கை அரசுக்கும் தனது நன்றியை இந்தச் சந்தர்ப்பத்தில் பான் கீ மூன் தெரிவித்துக் கொண்டார்.

இலங்கைக்கும் ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகளுக்கும் பான் கீ மூன் ஆற்றிய சேவைகளைப் பாராட்டிய ஜனாதிபதி, பாரிஸ் மாநாட்டினூடாக அவர் ஆற்றிய சேவையினையும் இதன்போது நினைவு கூர்ந்தார்.

ஐ. நா. அனுசரணை மற்றும் வழிகாட்டலில் இலங்கைக்கு உதவிகளை வழங்கிய அனைத்து அமைப் புக்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஜனாதிபதி இந்தச் சந்தர்ப்பத்தில் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிடமிருந்து அநுராதபுரம் சிறைச் சாலைகள் ஆணையாளர் பெற்றுக் கொள்ள முதலில் மறுத்திருந்தாலும், பின்னர் அதனைப் பெற்று உரிய இடங்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்தார். நேற்று இரண்டாவது நாளாகவும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்த அரசியல் கைதிகளை எவரும் சென்று பார்வையிடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## மரண அறிவித்தல்கள்

### ஜெயபாலன் சதீஸ்குமார்

(தொழில் நுட்ப உத்தியோகத்தர் CECB North)



கருணாகரப் பிள்ளையார் கோவில் வீதி, (இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலை முன்பாக) இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயபாலன் சதீஸ்குமார் நேற்று (22.09.2016) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் தணிகாசலம் ஜெயபாலன் (உரிமையாளர், கனகா வேளான் களஞ்சியம், இணுவில்) சாரதா தேவி ஆகியோரின் அன்பு மகனும், அர்சனாவின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான தணிகாசலம்- கனகம்மா ஆகியோரினதும், காலஞ்சென்றவர் களான ஆறு முகம்-மீனாம்பாள் ஆகியோரினதும் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கனக பவனம்**
**இணுவில் கிழக்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### நாகலிங்கம் செல்வராசா

(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர் - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்வராசா நேற்று (22.09.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னராசா மற்றும் சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், சசிதரன், சதீசன், பபிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், யசீதாவின் மாமனாரும், சுஜீவன், சுஞ்சய் ஆகியோரின் பேரனும், இராசமணி, தங்கராசா, மகேந்திரன், இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், மகேந்திரராசா, செல்வராணி, புனிதமலர், சிவனேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2016) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில், இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சைவ பாடசாலை வீதி,**
**கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## தீவுகள் - பாகிஸ்தான் முதலாவது ரி-20 இன்று

மேற்கிந்தியத் தீவுகள் - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரின் முதலாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான தொடர்கள் டுபாயிலேயே நடைபெறவுள்ளன. தொடரில் மூன்று ஆட்டங்கள் உள்ளன. இரண்டாவது ஆட்டம் நாளையும் மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. ரி-20 தொடர் முடிந்த பிற்பாடு ஒருநாள் தொடர் இந்தமாதம் 30 ஆம் திகதியும், டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் 13 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

டுபாய் தமக்கு பழக்கப்பட்ட ஆடுகளமென்பதால் தொடரைக் கைப்பற்றுவோம் என பாகிஸ் தானின் ரி-20 தலைவர் அஹமட் தெரிவித்தார். (ம)


அஹமட்

## ஞானமுருகன், நவஜீவன்ஸ் அணிகள் வெற்றிபெற்றன

யாழ்ப்பாணம், செப். 23


பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஞானமுருகன், நவஜீவன்ஸ் அணிகள் வெற்றிபெற்றன.

பாரதியின் மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் ஞானமுருகன் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 5 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தது யங்ஹென்றிஸ். 21 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார் ஞானமுருகன் அணியின் தவரூபன். இரண்டாம் பாதியின் 41 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணியின் நிலக்சன் மற்றொரு கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ஞானமுருகன் அணி. ஆட்டநாயகனாக ஞானமுருகன் அணியின் தீபன் தெரிவானார்.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து சென். லூட்ஸ் அணி மோதியது. கோல் கணக்கு இல்லாமல் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் நவஜீவன்ஸ் அணியின் சங்கர் ஒரு கோலைப் பதிவு செய்ய அதுவே ஆட்டத்தின் இறுதிக் கோலாகவும் அமைந்தது. ஆட்ட நாயகனாக சென். லூட்ஸின் கோல் வாய்ப்புக்களைத் தகர்த்த உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியின் பிரியங்கன் தெரிவானார். (ம-108-422)


ஆட்டநாயகனான தீபன்


ஆட்டநாயகனான பிரியங்கன்



# சான்நெர், போல்ட் கூட்டணியால் திடீர் சரிவு கண்டது இந்தியா

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாள் முடிவில் 291-9 என்ற நிலையில் உள்ளது இந்திய அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கோக்லி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். ஆரம்ப வீரரான கே.எல். ராகுல் அடித்தாடினார். 32 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ராகுலை வீழ்த்தினார் சான்நெர். முரளி விஜய், புஜாரா இணை அதியற்புதமான இணைப்பாட்டத்தை அரங்கேற்றியது. இணைப்பாட்டமாக நூறுக்கும் அதிகமான ஓட்டங்கள் பகிரப்பட்டன. ஒரு கட்டத்தில் இந்திய அணி 154-1 என்று பலமாக இருந்தது. 62 ஓட்டங்களுடன் புஜாராவும் சான்நெரிடம் வீழ்ந்தார். இந்த இலக்குச் சரிவுக்குப் பின்னர் இந்தியாவுக்கு தொடர் சரிவுதான். முரளி விஜய் 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கோக்லியால் முடிந்தது 9 ஓட்டங்கள் மட்டுமே. அஸ்வின், ரோகித் ஓரளவு தாக்குப் பிடித்தனர். இருப்பினும் அரைச்சதத்தை பதிவுசெய்யவில்லை. சஹா, சமி இருவரையும் போல்ட் செய்தார் போல்ட். நாள் முடிவில் இந்தியா 291-9 என்றுள்ளது. போல்ட், சான்நெர் இருவரும் தலா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினர். ஜடேயா, யாதேவ் களத்திலுள்ளனர். (ம)



## டெஸ்ட் சம்பியன் கோலை பெற்றது பாகிஸ்தான் அணி

பன்னாட்டு டெஸ்ட் கிரிக்கெட் தரப்படுத்தலில் முதலிடம் பிடித்த பாகிஸ்தான் அணிக்கு, டெஸ்ட் சம்பியன் கோல் நேற்று வழங்கப்பட்டது. டெஸ்ட் ஆட்டங்களுக்கான தரப்படுத்தலில் முதலிடம் பிடித்தால் பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் குறித்த கோல் வழங்கப்படும். வேறொரு அணி முதலிடத்தில் உள்ள அணியைப் பின்தள்ளி அந்த இடத்தைப் பிரதியீடு செய்தால் புதிதாக முதலிடம் பெற்ற அணியிடம் கோல் கைமாறும். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலியா முதலிடத்தில் இருந்தது. ஆனால் இலங்கையிடம் 3:0 என்று டெஸ்ட் தொடரை இழந்தது. பாகிஸ்தான் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2:2 என்று சமன் செய்ததால் அந்த அணி தரப்படுத்தலில் முதலிடத்துக்கு முன்னேறியது. இதையடுத்து ஆஸ்திரேலியாவிடமிருந்த குறித்த கோல் தற்போது பாகிஸ்தானிடம் கைமாறியுள்ளது. லாகூரில் உள்ள கடாபி மைதானத்தில் வைத்தே பன்னாட்டு கிரிக்கெட் சபையின் தலைவரான ரிச்சட்சனிடமிருந்து மிஸ்பா கோலைப் பெற்றார்.

கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன் இதே மைதானத்தில் கடைசி உள்ளூர் டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடினோம். எனவே, இந்தக் கோலைப் பெறுவதற்கு இந்த மைதானத்தைவிட வேறு சிறந்த இடம் இருக்க முடியாது என மிஸ்பா தனது உரையில் குறிப்பிட்டார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மாவட்ட ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், செப். 23

சமபோச கிண்ணத்துக்காக தேசியமட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் மன்னார் மாவட்டத்துக்கான ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன.

மன்னார் தாழ்வுபாடு மைதானத்தில் இன்று, நாளை என இரு தினங்கள் தொடர் நடைபெறும். 8 அணிகள் கலந்து கொள்கின்றன. (ம-23)

## யங்ஸ்ரார், மருதநிலா இறுதிக்கு முன்னேறின

யாழ்ப்பாணம், செப். 23

வவுனியா கால்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட தொடரில் யங்ஸ்ரார், மருதநிலா அணிகள் இறுதிக்குத் தகுதி பெற்றன.

வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் அண்மையில் இந்த ஆட்டங்கள் நடைபெற்றன.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து கோல்டன் பிரதர்ஸ் அணி மோதியது. இதில் யங்ஸ்ரார் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் அல் ஹிஜ்ரா அணியை எதிர்த்து மருதநிலா அணி மோதியது. இதில் மருதநிலா அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## ஹற்றன் நஷனல் வங்கி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், செப். 23

வங்கி மற்றும் நிதிநிறுவனங்களுக்கு இடையே அண்மையில் நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில் ஹற்றன் நஷனல் வங்கி சம்பியனானது.

ஹற்றன் நஷனல் வங்கியை எதிர்த்து கொமர்சியல் கிரடிட் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொமர்சியல் கிரடிட் அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஹற்றன் நஷனல் வங்கி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 79 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக அருந்தவதாஸ் 41 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொமர்சியல் கிரடிட் அணியால் 58 ஓட்டங்களையே பெறமுடிந்தது. இதையடுத்து 21 ஓட்டங்களால் வெற்றிபெற்று சம்பியனானது ஹற்றன் நஷனல் வங்கி. ஆட்ட நாயகனாக அருந்தவதாஸ் தெரிவானார். (ம)



## சமபோச கிண்ணம்; வவு.ஆட்டங்கள் நாளை

யாழ்ப்பாணம், செப். 23
சமபோச கிண்ணத்துக்காக தேசியமட்டத்தில் முன்னெடுக்கப் பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் வவுனியா மாவட்டத்துக்கான ஆட்டங்கள் நாளை ஆரம்பமாகின்றன.

பாடசாலைகளின் 15 வயதுக்குட்பட்ட பிரிவு அணிகளுக்கு இடையிலேயே தொடர் முன்னெடுக்கப்படுகிறது. வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்திலேயே தொடர் நடைபெறவுள்ளது. இறுதியாட்டம் நாளைமறுதினம் நடைபெறும். ஆண்கள் பிரிவில் 15 அணிகளும், பெண்கள் பிரிவில் 5 அணிகளும் கலந்து கொள்கின்றன.

(ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 23
புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

(ம-108)



## யாழ். மாவட்ட இணைந்த அணியிடம் மலையக இணைந்த அணி தோல்வி

யாழ்ப்பாணம், செப். 23
முரளிக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் யாழ். மாவட்ட இணைந்த அணி மலையக இணைந்த அணியை மிக இலகுவாக வீழ்த்தியது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 1.40 மணிக்கு ஆட்டம் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். இணைந்த அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மலையக இணைந்த அணிக்கு ஆரம்பம் மோசமாக அமையவில்லை. ரி-20 ஆட்டம் என்ற வகையில் ஏற்கக்கூடிய விதத்தில் ஆரம்ப இணை செயற்பட்டது. இணைப்பாட்டமாக 38 ஓட்டங்கள் பெற்றிருந்த போது 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஹித்முனு. 11 ஓட்டங்களுடன் சக ஆரம்ப வீரரான சானுக ரண்அவுட் செய்யப்பட மலையகம் பலமான தடுமாற்றம் கண்டது. குறிப்பாக அந்த அணியின் மத்திய வரிசை யாழின் பந்துவீச்சில் எடுபடவில்லை. மத்திய வரிசை, பின்வரிசை என இரண்டிலுமாகச் சேர்த்து அணித்தலைவர் அகலன்க பெற்ற 22 ஓட்டங்களே தனிநபர் அதிக ஓட்டங்களாக அமைய அந்த அணியின் ஆட்டம் 93 ஓட்டங்களுடன் முடிவு கண்டது.

பந்துவீச்சில் யாழ். இணைந்த அணியின் சார்பில் யதுசன் 4 இலக்குகளையும், சிவலக்சன் 2 இலக்குகளையும், சஜித், கபில்ராஜ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய யாழ். இணைந்த அணிக்கு ஆரம்ப வீரரான நிரோஜ்குமார் ஓட்டமெதனையும் பெறாது ஏமாற்றினார். அணித்தலைவர் பிளெமின் 10 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அனோயன் ஒரு ஓட்டம், சயந்தன் 11 ஓட்டங்கள் என சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றாலும் ஓர் முனையில் நிலைத்து நின்று நம்பிக்கை வழங்கினார் கயானந். அவர் அரைச்சதம் கடந்து களத்திலிருக்க 35 பந்துகள் மீதமிருக்க இலக்கை அடைந்தது யாழ். இணைந்த அணி.

(ம)

## குறிஞ்சிக்குமரன் வி.க. முடிவுகள்

யாழ்ப்பாணம், செப். 23
குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள்.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழகமும் ஊர்காவற்துறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது கனகபுரம்.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டு கழகத்தை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் ஜோசவாஸ் யுனைற்ரெட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் 4:1 என்ற கோல் கணக்கில் ஜோசவாஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இறுதியாக இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிளிநொச்சி ஜெயந்திநகர் விளையாட்டுக் கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் 4:2 என்ற கோல் கணக்கில் சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.


(ம-108)



2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்ட தொடர்களில் சிறந்த பெறுபேறை வெளிப்படுத்திய யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வடக்கு மாகாணத்தின் சிறந்த அணியாகத் தெரிவானது. குறித்த அணி தொடர்ந்து நான்காவது தடவையாக குறித்த கௌரவத்தைப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-23)

## சாகிராக் கல்லூரி அணியிடம் யாழ். மத்திய கல்லூரி சரண்



வெற்றியைக் கொண்டாடும் சாகிராக் கல்லூரி அணியின் வீரர்கள்.

முரளிக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் கொழும்பு சாகிராக் கல்லூரி அணியிடம் யாழ். மத்திய கல்லூரி அணி படுதோல்வியடைந்தது.

யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் பிற்பகல் 1.40 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சாகிராக் கல்லூரி அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சமீர 37 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரியின் சார்பில் அலன்ராஜ் மூன்று இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 15.4 பந்துப்பரிமாற்றங்கள் வரை மட்டுமே தாக்குப்பிடித்து சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கோமேதகன் 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சாகிராக் கல்லூரி அணியின் சார்பில் அன்பாஸ் 6 இலக்குகளைக் கைப்பற்றினார்.

(ம)

## கிளி.; முல்லை இணைந்த அணி சென். அலோசியஸை வீழ்த்தியது

முரளிக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் கிளிநொச்சி, முல்லைத்திவு இணைந்த அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். அலோசியஸ் கல்லூரி அணி 109 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் கிளிநொச்சி, முல்லைத்தீவு இணைந்த அணியின் சார்பில் பிரதீபன் 4 இலக்குகளையும், நிதுசன் 2 இலக்குகளையும், அகிலன், டானியேல் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் இணைந்த அணி ஒரு பந்து மீதமிருக்க 6 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிக பட்சமாக தனபிரியன் 25 ஓட்டங்களையும், ரஜீவன் 22 ஓட்டங்களையும், அனுக்சன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

(ம)



பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி அணி கல்லூரிச் சமூகத்தால் அண்மையில் கௌரவிக்கப்பட்டது.

(ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளிக் கிண்ணத் தொடரில் இன்றைய பலப்பரீட்சைகள்

யாழ்ப்பாணம், செப். 23
முரளிக்கிண்ணத் தொடரின் ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இன்று நடைபெறும் ஆட்டமொன்றில் யாழ். மத்திய கல்லூரி அணி மொனராகலையின் இணைந்த அணியை எதிர்கொள்ளவுள்ளது. யாழ். மத்திய கல்லூரி அணி இதுவரை தான் எதிர்கொண்ட ஆட்டங்கள் இரண்டில், இரண்டிலுமே தோல்வியடைந்துள்ளமையால் இந்த ஆட்டத்தில் வெல்ல வேண்டும் என்ற கௌரவச் சிக்கல் அந்த அணிக்கு உள்ளது.

இந்த ஆட்டம் யாழ். மத்தியின் மைதானத்தில் பிற்பகல் 1.40 மணிக்கு இடம் பெறும்.

ஏனைய ஆட்டங்களில் களுத்துறை மகாவித்தியாலய அணியை கிளிநொச்சி, முல்லைத்தீவு இணைந்த அணியும், சீனிகம இணைந்த அணியை யாழ். மாவட்ட இணைந்த அணியும் எதிர்கொள்ளவுள்ளன. (ம)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
வட மாகாண ஆசிரியர் தெரிவு
பிரதி ஞாயிறு- 10.00 - 3.00 மணிவரை
B.Ed, M.Ed நுழைவுப் பரீட்சை
பிரதி ஞாயிறு- 1.00 - 5.00 மணிவரை
இறைவரி கட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவு
பிரதி ஞாயிறு - 2.00 - 5.00 மணிவரை
SLTES
பிரதி ஞாயிறு - 9.30 - 3.00 மணிவரை
கணக்காய்வாளர்
ஞாயிறு- 9.00 - 4.00 மணிவரை
வங்கிகளுக்குரிய ஆள்சேர்ப்பு பரீட்சைக்கான வகுப்புகளும் நடைபெறுகின்றன
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
வடமாகாண பட்டதாரி - ஆசிரியர் போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்.
(பிரதி ஞாயிறு 9.00-4.00 Pm)
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள் கலந்துரையாடப்படும்.
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்
T.P 077 4696695

வேலையாள்கள் தேவை
முல்லைத்தீவில் உள்ள வேலைத்தளம் ஒன்றிற்கு கொந்தராத்து வேலையாள்கள் பின்வரும் வேலைகளுக்கு தேவை.
* கம்பி கட்டுதல்
* தச்சு வேலை
* சீமெந்து இடும் வேலை
தொடர்புகளுக்கு:-
077 312 6610
077 340 5823, 077 458 0461

காணி தேவை
நல்லூர் Temple Road
அல்லது ஆலயத்தை அண்டிய பகுதியில் 3 பரப்பிற்குட்பட்ட காணி தேவை.
தொடர்பு - 077 6095604

# ரெட்புல் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது இலங்கை அணி



கொழும்பு, செப் 23
ரெட்புல் கம்பஸ் உலக கிரிக்கெட் சம்பியன் இறுதி ஆட்டத்தில் இலங்கை பிஸ்னஸ் மனேஜ்மன்ற் - மனேஜ்மன்ற் ஸ்கூல் அணி, பங்களாதேஷ் லிபரல் ஆட்ஸ் பல்கலைக்கழக அணியை 24 ஓட்டங்களால் வீழ்த்தி ரெட்புல் கம்பஸ் வெற்றிக் கிண்ணத்தை முதல் தடவையாகக் கைப்பற்றியது.

காலி சர்வதேச மைதானத்தில் கடந்த 11ஆம் திகதி இந்த ஆட்டம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை பிஸ்னஸ் மனேஜ்மன்ற் மனேஜ்மன்ற் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் லிபரல் ஆட்ஸ் பல்கலைக்கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும் 8 இலக்குகள் இழப்புக்கு 167 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

பந்துவீச்சில் இலங்கை அணியின் சார்பாக விளையாடிய ஜெயவிக்கிரம 27 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 இலக்குகளைக் கைப்பற்றியிருந்ததுடன் பங்களாதேஷ் அணியின் சார்பாக விளையாடிய அரிபுர் ரஹ்மான் 20 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இலங்கை அணியின் சகல துறைவீரர் ரஞ்சித்லியனாராய்ச்சி சிறப்பாக விளையாடி 27 பந்துகளில் 52 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு வித்திட்டார். (த)

# தங்கத்துக்காகச் செல்கிறது யாழ். மொனராகலையுடன் இன்று மோதல்



யாழ்ப்பாணம், செப். 23
இளைஞர் கழகங்களுக்கு இடையிலான தேசியமட்ட வலைப்பந்தாட்டத் தொடரின் ஆண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் மொனராகலை இளைஞர் கழகத்தை எதிர்த்து யாழ். இளைஞர் கழகம் இன்று மோதவுள்ளது.

பதுளை வின்சன் டயஸ் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்ட இளைஞர் கழகம் தனது அரையிறுதி ஆட்டத்தில் இரத்தினபுரி மாவட்ட இளைஞர் கழக அணியை 16:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தி இறுதிக்குத் தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

கிளி/எடிசன் கல்லூரி கிளிநொச்சி
(வலயக்கல்வி பணிமனை முன்பாக)
2016 இல் தோற்றிய தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்கான முன்னோடி செயல்முறைத் தேர்வு 24, 25/09/2016 (இருநாள்கள்)
உயிர்முறைமைகள் தொழில்நுட்பத்தில் $15B_1$, $15B_2$ செயல்முறைகளும், 60 Spot உம் மாணவர்களுக்குத் தனியாக ஈடுபட அனுமதிக்கப்படும். தேர்வின் இறுதியில் வழிகாட்டல் குறிப்புக்கள் மற்றும் கலந்துரையாடலும் இடம்பெறும்.
* E-Tec செயன்முறைத் தேர்வுகள் விரிவினை விடயக் குறிப்புக்களுடன் நடத்தப்படும்.
077 548 3470

உங்கள் தொழில் தகைமைகளை உயர்த்திக் கொள்ளுங்கள்
MBA
புதிய பிரிவுகள் ஆரம்பம்
குறைந்த முதலீடு — ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்தசெலவுடன் MBA பட்டக்கல்வியை மேற்கொள்ளும் சந்தர்ப்பம்.
அங்கீகாரம் — பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு University Grants Commission கொமன் வெல்த் பல்கலைக்கழக அமைப்பு Association of Common Wealth Universities
விரிவுரைகள் — 1வருட கற்றல் கால எல்லை கொண்ட 2 பிரிவுகள்
பிரிவு 01: ஞாயிறு ( 9.00a.m. - 4.00p.m.)
பிரிவு 02: திங்கள்,புதன்,வெள்ளி (7.00p.m. - 9.00p.m)
விரிவுரையாளர்கள் — தகைமை, நிபுணத்துவமும், தொழில்துறை அனுபவம் கொண்ட விரிவுரையாளர் குழாம்
கற்றல் சூழல் — உயர்கல்விக்கே உரிய சகல வசதிகளுடனும் கூடிய நவீனமயப்படுத்திய விரிவுரை மண்டபங்களுடனான சூழல்
அனைத்தும் ஒரே இடத்தில்
IIS CITY CAMPUS
200 சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
071 777 5666
021 222 8060 | 021 4900 900
IIS CITY CAMPUS

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.